கிராமநலம்

ஜூன் – '67

"கேர்" (Care) நிறுவனத்தினா உதவும் உணவுப் பொருள்களை. 1—6—1967 அன்று, சென்னை துறைமுகத்தில், தமிழக முதலமைச்சர் பெற்றுக்கொள்கிறா.



அண்மையில் தமிழகம் வந்திருந்த பிரெஞ்சு நாட்டு ஒலி—உருவ தொலைக் காட்சி (Telivision) குழுவினருக்கு, தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் பேட்டி அளித்து, பஞ்சாயத்து ஆட்சி, மதிய உணவுத் திட்டம் முதலியன பற்றி விளக்கம் தந்தார்.

“ ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே ”

கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 12 ஜூன் 1967 நெல் 9

தமிழகக் குடியாட்சி முறை

——(o)——

பிரெஞ்சு நாட்டுக் குழுவினரிடம்
உள்ளாட்சி அமைச்சர் விளக்கம்

தமிழக அரசின், உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், பிரெஞ்சு நாட்டு ஒலி—உருவத் தொலைக் காட்சி (Television team) குழுவிற்கு, அவருடைய இல்லத்தில், 2—6—1967-ல் அளித்த பேட்டியின் போது தமிழக அரசின் புதிய கொள்கைகளையும், திட்டங்களையும் பற்றி விளக்கமாகக் கூறினார்.

ஒலி—உருவத் தொலைக் காட்சிக் குழுவினர், அமைச்சரைச் சந்தித்தபோது, ‘‘வணக்கம்’’ என்று அழகாகத் தமிழில் கூறினர். அமைச்சர் மகிழ்வுடன் அவர்களை வரவேற்றார். பேட்டிக்கு முன்னுரையாக, அவர் தமிழில் கூறியதாவது:—

> ‘‘தமிழக அரசாங்கத்தின் சார்பில், பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்துள்ள, ஒலி உருவக் குழுவினரை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இரு நாட்டின் நட்புறவும் தழைத்தோங்க, தமிழ்த் தாயின் மக்களாகிய நாங்கள் விழைகின்றோம்.’’

முதல் அட்டைப்படம் :
இந்தியக் குடியரசின் தலைவர், திரு. ஜாகிர் ஹுசேன்.

மூன்றாவது அட்டைப்படம் :
இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்கள் 18—5—1967 அன்று புது டில்லி செல்லும் வழியில் சென்னை வந்தபோது, அவரை சென்டிரல் ரயில் நிலையத்தில் தமிழக அரசு, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் வரவேற்றார். (குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் பற்றிய குறிப்புகளை 13-ம் பக்கத்தில் காணலாம்.)

கடைசி அட்டைப் படம் :
தமிழக அரசின் துணிவான முடிவு : மலிவுவிலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் (விளக்கம் பக்கம் 5)

பிரெஞ்சு நாட்டு குழுவினர் கேட்ட கேள்விகளும், அவற்றிற்கு அமைச்சர் அவர்கள், ஆங்கிலத்தில் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி 1.

> ''ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் ஊராட்சிகளைப் பொருத்த வரையில், புதிய அமைச்சரவை உத்தேசித்திருக்கும் மாற்றங்கள் அல்லது ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?''

''ஊராட்சி என்பது மக்களாலேயே, மக்களுக்காக நடத்தப்படும் மிகப் பழைய குடியாட்சி முறையாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உத்திரமேரூர் கல்வெட்டுகளில் தமிழகக் குடியாட்சி முறை பற்றி, அரிய செய்திகள் கிடைத்துள்ளன. அவ்வப்போது மக்களின் கருத்தோட்டம், உள்ளக்கிடக்கை ஆகியவற்றுக்கேற்ப, மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. எனவே, இப்போதுள்ள நிலையில், மாற்றங்கள் செய்வது தவிர்க்க முடியாத தாகும்.

நகராட்சியைப் பொறுத்தவரை, மக்களின் வசதிக்கேற்ப, 'வார்டு' (Wards) களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஏற்றவகையில், நகராட்சிச் சட்டம் திருத்தப்படும். தேவைப்படின், பஞ்சாயத்துச் சட்டத்தையும், பஞ்சாயத்து அமைப்பு முறையையும் திருத்துவதற்கு, நாங்கள் தயாராக இருக்கிறோம்.

சமுதாய வளர்ச்சி, தல நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ந்து வருவதற்காக, ஒரு சிறப்பு ஆலோசகர், மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு அனுப்பப்பட்டார். அவருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. தேவைப்படின், மேற்கொண்டு நடவடிக்கை, உரிய காலத்தில் எடுக்கப்படும்.''

கேள்வி 2.

> ''ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அரசியல், முக்கிய இடம் பெறுகிறதா?''

''ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், அரசியல் குழுக்கள் உள்ளன. ஆனால், இன்றைய அரசுக்கு அதில் அக்கறை இல்லை. இந்நிறுவனங்களைக் கொண்டு, மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வி, சுகாதாரம், பண்பாடு போன்றவற்றை, வளர்ச்சியுறச் செய்யவே நாங்கள் விரும்புகிறோம்.''

கேள்வி 3.

> ''தமிழக அரசு, கல்விக்காக பெருமளவில் செலவு செய்துள்ளது. கிராமங்களில் பொருளாதாரம் வளர்ச்சியுற அது உதவியுள்ளதா? எந்த வகையில்?''

''தங்களின் பாராட்டைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

கல்வியின் தரத்தை உயர்த்துவது, எங்கள் பணிகளில் ஒன்றாகும். ஊராட்சி நிறுவனங்களால் துவக்கக் கல்வி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குறைகளைக் கருத்தில் கொண்டு, இப்போதைய நிலைக்கு ஏற்ப, மதிய உணவுத் திட்டம் சீரமைக்கப்படும். ஆசிரியர்களின் நிலையை உயர்த்தி, சமூகத்தில் பெருமைப் படத்தக்க ஓர் இடத்தை அவர்களுக்கு அளிப்பதில், அரசு மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறது.

கல்வி வளர்ச்சியின் பயனாக, பொருளாதார மேம்பாட்டுக்கு மட்டுமின்றி, சமுதாய உயர்வு, அரசியல் முன்னேற்றம் ஆகியவற்றிற்கும் கூட நிச்சயமாக வழி பிறக்கும்.''

உணவுத் துறையில் ஒரு திருப்பு முனை

1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி முதல் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டம் செயல்படுவதையொட்டி, உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள், 1967-ம் ஆண்டு மே மாதம் 12-ம் தேதி விடுத்த சிறப்புச் செய்தியின் முழு விவரம்.—

உணவுத் துறை நிர்வாக வரலாற்றில். . .

மக்களுக்கு மலிவு விலையில் அரிசி வழங்குவது என்ற மகத்தானதொரு முடிவினை இன்று நாம் செயல்படுத்தத் தொடங்கியுள்ளோம். இந்த நேரத்தில், உணவு முனையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்கிக் கூற விரும்புகிறேன். அரசின் உணவுக் கொள்கை, செயல் சாதனை ஆகியவை பற்றிய சில முக்கிய தகவல்களையும் மக்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

நெல் கொள்முதல் செய்வதை நிறுத்தி, உணவு தானிய நடமாட்டங்கள் மீதும், விலைகள் மீதுள்ள கட்டுப்பாடுகளை அகற்றினால்தான், இந்த மாநிலத்தின் உணவுப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்று கருதுகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதை அரசு அறியும். மற்றும் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய உணவு மண்டலத்தை அமைப்பது நலம் என்றும், கட்டுப்பாடுகள் வருவதற்கு முன்பிருந்த அரிசி வர்த்தக முறைக்கு அத்தகைய உணவு மண்டல ஏற்பாடு மிகவும் உகந்ததாக இருக்கும் என்றும் பலர் கருதுகின்றார்கள். இக்கருத்துக்களை, அரசு, மிக்கத் தீர்க்கமாகவும், அக்கறையோடும் பரிசீலனை செய்தது. கொள்முதலும் கட்டுப்பாடுகளும் தேவையல்ல என்ற நிலை ஏற்பட்ட மறுகணமே, அவற்றை நீக்கிவிட

மலிவு விலையில் மக்களுக்கு அரிசி : மகத்தான முடிவு செயல்படுகிறது.

∴ ∴

முதலில் 31 லட்சம் பேர் ; பின்னர், படிப்படியாக 123 லட்சம் பேர் பலன் அடைவர்.

" கொள்முதலும் , கட்டுப்பாடுகளும் தேவையல்ல என்ற நிலை ஏற்பட்ட மறுகணமே, அவற்றை நீக்கிவிடவேண்டும் என்பதுதான், அரசின் திட்டவட்டமான எண்ணம் "

∴ ∴

ஒரு மாவட்டத்தின் கொள்முதல் இலக்கு நிறைவேறினால் அந்த மாவட்டத்திற்குள் தானிய நடமாட்டக் கட்டுப்பாடு அகன்றுவிடும்.

∴ ∴

சமூக, குடும்ப நிகழ்ச்சிகளில் உணவு படைப்பதற்கு அதிக சலுகை.

∴ ∴

புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் இல்லை.

வேண்டுமென்பதுதான் அரசின் திட்டவட்ட மான எண்ணமாகும். ஆனால், கட்டுப்பாடு களை நீக்கும் முடிவை அரசு செயல்படுத்து வதற்கு முன்பாக, ஓரளவு கையிருப்பை, சேகரித்து வைத்துக்கொள்வது அவசியம் என் பது வெள்ளிடைமலை. ஓரளவு கணிசமான கையிருப்பு இல்லாமல், கட்டுப்பாடுகளை அகற்றத் துணிவது மிகமிக ஆபத்தானதாகும். மேலும், கேரளா போன்ற மிகவும் பற்றாக் குறை பகுதியைப் பக்கத்தில், எல்லையில் கொண்டிருக்கும்போது, 'ஒரு மாநிலம்—ஒரு உணவு மண்டலம்' என்றுள்ள ஏற்பாட்டை 'பிராந்திய மண்டல' ஏற்பாடாக இப் போது மாற்றியமைப்பது, நமது மாநில நலனுக்குப் பாதகமானது. 1964-ம் ஆண்டு அனுபவம் இன்னும் பலரது நினைவில் பசுமை யாக இருக்கும்.

இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் சென்னை நகரில் இரண்டே நாட்களுக்குப் போதுமான அரிசிதான் கையிருப்பில் இருந்தது. மாநிலம் முழுவதும் எடுத்துக்கொண்டால் ஐம் பதுநாட்களுக்குப் போதுமான கையிருப்பு இருந்தது. அத்துடன், கோதுமை போன்ற இதர உணவு தானியங்களை இறக்குமதி செய் யும் வகையிலும், 1965, 1966 ஆண்டுகளில் இருந்த அளவுக்கு வெளியுதவி இராது என்ப தும் தெளிவாகத் தெரிந்தது. இந்த மதிப் பீடு சரியாகவே ஆயிற்று. 1965-ல் நமக்கு மொத்தம் 81,700 டன் கோதுமையும், 1966ல் 1,46,000 டன் கோதுமையும் கிடைத்தது. 1967-ல் இதுவரை 17,500 டன் கோதுமை தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இனியும், கணிசமான அளவில் கிடைக்கும் என்று நம்பு வதற்கில்லை. ஏனெனில் வெளி மாநிலங்களில் இன்னும் அதிக சங்கடமான நிலைமைகள் இருக் கின்றன.

மேலும், நம் மாநிலத்தில் சம்பா அறுவடை கால நெல் கொள்முதலும் ஆரம்ப கட்டத்தில் சரிவர நடைபெறவில்லை. ஜனவரி மாதம் சம் பாக் கொள்முதலுக்கு மிகவும் ஏற்ற நேரம். ஆனால் இந்த ஆண்டு ஜனவரியில், கொள் முதல், வழக்கத்தை விட மிகவும் குறைவாகவே நடந்தது என்பதை 1966—1967-க்கான கீழ்க் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

	1966.	1967.
	(டன் கணக்கில் அரிசி.)	
ஜனவரி	1,20,228	41,599
பிப்ரவரி ..	1,95,072	1,06,549

காரணங்கள் எதுவாயினும், வழக்கமான கொள்முதல் அளவுகூட, இப்படி ஆரம்பக் கட் டத்தில் குறைந்துபோனது, நமது சங்கடத்தை அதிகப்படுத்தியது.

எனினும், நமது அரசு காலந் தாழ்த்தாமல், உரிய காரியங்களைச் செய்வதில் உடனடியாக ஈடுபட்டது. உணவு தானியக் கையிருப்பு நிலைமை என்ன, எந்த அளவுக்குக் கொள்முதல் செய்ய வாய்ப்பு இருக்கிறது, நாம் நிறைவேற்றி யாகவேண்டிய பொறுப்புகளின் அளவு என்ன என்ற விவரங்களை நேரில் அறிவதற்காக, 1967 மார்ச் மாத மத்தியில் மாவட்ட ஆட்சித் தலை வர்களின் (கலெக்டர்கள்) மாநாடு ஒன்று கூட் டப்பட்டது. கட்டுப்பாடுகளை முழுமையாக அகற்றுவது போன்ற முயற்சி எதுவும் அவசர, துணிகர பரிசோதனையாகவே முடியும் என்ற கருத்து, மாநாட்டு விவாதங்கள் மூலம் உறுதி யாயிற்று. எனவே, கையிருப்பைப் பலப்படுத் திக்கொள்கிற அளவுக்குக் கொள்முதல் நட வடிக்கைகளைச் செம்மைப்படுத்தி, தீவிரப் படுத்தி, பின்னர் கட்டுப்பாடுகளைப் படிப்படி யாகத் தளர்த்துவதுதான் அடுத்துள்ள ஒரே வழி என்பதும் தெளிவாயிற்று.

முதலமைச்சர் வழங்கிய மூன்று யோசனைகள்

மாநாட்டின் முடிவில், முதலமைச்சர் அவர் கள் மூன்று அம்சத் திட்டம் ஒன்றை வகுத்துக் கொடுத்தார் :—

(அ) உணவு தானிய கொள்முதல் நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்க வேண்டும். பெரும் நிலச் சொந்தக்காரர் களிடம், அதாவது 10 ஏக்கரும் அதற்கு மேலும் நிலம் உடையவர்களிடம், விற் பனைக்காக அதிகப்படியாக இருக்கும் தானி யம் முழுவதையும் கொள்முதல் செய்ய வேண்டும். ஓர் ஏக்கரும், ஓர் ஏக்கருக்குக் குறைவாகவும் நிலமுடைய விவசாயிகளிட மிருந்து கொள்முதல் செய்வது தவிர்க் கப்பட வேண்டும். மற்ற நிலச் சொந் தக்காரர்களிடமிருந்து,அவர்கள் நிலத்தின் அளவுக்கேற்ப, படிப்படியான 'லெவி' முறைப்படி கொள்முதல் செய்யவேண்டும். இவற்றிற்கு வகை செய்யும் முறையில், கொள்முதல் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) பதுக்கலும், கள்ளக்கடத்தலும் கடு மையான முறையில் ஒடுக்கப்படவேண்டும். இதை நிறைவேற்ற, தேவையானால், அரசு அதிக அதிகாரங்களையும் ஏற்கும்.

(இ) விரைவிலேயே தன்னிறைவு பெறுவதற்கு மட்டுமல்லாமல், கணிசமான உபரியை ஏற்படுத்தும் வகையிலும், குறுகிய காலத்திற்குள் உணவு உற்பத்தியைப் பெருக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எனவே முன்பிருந்ததை விட, இப்போது அரிசி இருப்பைப் பேணிக் காத்துக்கொள்வது மிகவும் அவசியம் என்பது தெளிவாகிவிட்டது. சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு அரசு ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை நிறைவேற்ற, இக் கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்பதை, உணவு உற்பத்தி செய்வோருக்கும், சிவில் சப்ளை துறையினருக்கும் அரசு அதன் எண்ணத்தைத் தெளிவாக உணர்த்தியுள்ளது. வியாபாரத் துறையிலே அதிக அளவில் தானியங்கள் புழங்க, உருவான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அதாவது, பதுக்கி வைக்கப்பட்டுள்ள தானியங்களை வெளிக் கொணரவும், மாநிலத்திலிருந்து தானியங்கள் வெளியே செல்வதைத் தடை செய்யவும் வேண்டும்.

புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் இல்லை

சென்ற ஆண்டைப் போலவே, இவ்வாண்டும் புஞ்சைத் தானியங்கள் கொள்முதல் செய்யப்படவில்லை. மாநிலத்திற்குள்ளே, அவற்றின் தாராள போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்தத் தானியங்கள் விலை இறங்கிக்கொண்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டிற்குப் பிறகு, முதலமைச்சர் காட்டிய வழியிலே கொள்முதலைத் தீவிரமாக்கவும், கொள்முதலுக்கான நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப்படுத்தவும், உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. அரிசி வெளிக் கடத்தப்படும் பாதைகள் மூடப்பட்டன. பெரும் நிலச் சொந்தக்காரர்களிடம் பதுங்கிக் கிடக்கும் உணவு தானியங்களை வெளிக் கொணரவும், 1966-ம் ஆண்டு தமிழக அரசு நெல், அரிசி (கையிருப்பை அறிவித்தல், கொள்முதல் செய்தல்) உத்தரவை Madras Paddy and Rice (Declaration and Requisitioning of Stocks) Order, 1966, கண்டிப்புடன் செயல்படுத்தவும், தீவிரநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகாரிகளைக் கொண்டு கொள்முதல் செய்வதைத் தவிர்ப்பதற்காக, தங்களிடமுள்ள கையிருப்புக்களை பதினைந்து நாட்களுக்குள் அறிவித்துவிடுமாறு பொதுமக்களுக்கு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். வியாபாரிகள், கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கி வைப்போர், மற்றும் சட்ட விதிகளை மீறுகிறவர்களை கண்காணிக்கும் வகையில் இப்போதுள்ள குறைபாடுகளைத் திருத்தி முறைப்படுத்துவதற்கும், டிப்டி கமிஷனர் (சிவில் சப்ளை) ஒருவரின் தலைமையில் தனியாக ஒரு ‘அமுல் நடத்தும் பிரிவு’ (Enforcement Cell) ஏற்படுத்தப் பட்டுள்ளது. சென்னை நகரை, வடக்கு, தெற்கு என்று இரு பிரிவுகளாகப் பிரித்து, தனித் தனியே இரு டிப்டி கமிஷனர்களை நியமித்து, சென்னையில் சட்டபூர்வ உணவு பங்கீட்டு முறை, திறமுடன் அமுல் செய்யப்பட்டு வருகிறது. போலீஸ் கண்காணிப்புப் பிரிவும் (Vigilance Cell) முடுக்கிவிடப்பட்டு, கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு, வருவாய் அதிகாரிகள், சிவில் சப்ளை அதிகாரிகளுடன் சேர்ந்து செயல்படவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன பிரிவின் உதவியுடன் இன்று வரை சுமார் 1,272·40 டன் நெல்லும், 242 டன் அரிசியும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ. 7·171 லட்சமாகும். இந்தப் பிரிவின் உதவியுடன் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 10,606·44 டன்; அரிசியின் அளவு 677·96 டன்; இவற்றின் மதிப்பு சுமார் ரூ. 48·22 லட்சம். இவையெல்லாம் சிவில் சப்ளை அதிகாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டவை. இந்தத் தானியங்களெல்லாம், முதலில் விவசாயிகளால் அதிகாரிகளுக்குத் தாமாகவே கொடுக்கப்படாதவை.

தானியப் போக்குவரத்தை கண்காணிக்கும் சோதனைச் சாவடி (செக்போஸ்ட்) களை திறமையுடன் செயல்படுத்தவும், அரிசி மற்றும் வாழ்க்கைக்கு அவசியமான இதர பொருள்களின் விலைவாசியின் பேரில் கண்காணிப்புடன் இருந்து விலையேற்றத்தைக் குறைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சொந்த உபயோகத்திற்கு அரிசி—புதிய சலுகை, எளிய முறை

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, சொந்த உபயோகத்திற்கென சிறு அளவில் அரிசி கொண்டு செல்லும் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக, மாநிலத்திற்குள் ‘பர்மிட்’ இல்லாமல் அவர்கள் கொண்டு செல்லும் அரிசியின் அளவு 5 பட்ட

ணம் படியிலிருந்து 10 பட்டணம் படிக்கு உயர்த்தப்பட்டது. இவ்வுத்தரவு நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்பதற்காக உணவு தானியங்களை வழக்கமாக தொடர்ந்து கள்ளக் கடத்தல் செய்பவர்களை ஒடுக்க வேண்டுமென்பதும், உண்மையாகவே சொந்த உபயோகத்திற்கென அரிசி எடுத்துச் செல்பவர்களுக்கு மட்டுமே இந்த சலுகையை அளிக்க அரசு விரும்புகிறது என்பதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

சென்னை நகரிலுள்ளவர்கள், சொந்த உபயோகத்திற்கென அரிசி கொண்டுவர வேண்டுமாயின், முதலில் அவர்கள் சம்பந்தப்பட்ட உணவு பங்கீட்டு அதிகாரியிடமிருந்து 'ஆட்சேபம் ஏதும் இல்லை' என்ற சான்றிதழைப் பெற்று, அதனை எந்தத் தாலூகாவிலிருந்து அரிசி கொண்டுவர வேண்டுமோ, அந்தத் தாலூகா தாசில்தாருக்கு 'பர்மிட்டு' களாக மனுச் செய்துகொள்ள வேண்டுமென்பது, இது வரை அமுலிலிருந்து வந்த முறையாகும். இம்மாதிரி வேண்டுதல்கள் பேரில் தாலூகா அலுவலகங்களில் தாமதம் ஏற்படுகின்றது என்ற முறையீடுகள் இருந்து வந்தன. எனவே, அரசு இந்த நடைமுறையை எளிதாக்கியுள்ளது. சம்பந்தப்பட்ட சிவில் சப்ளை டிப்டி கமிஷனரிடம் (ரேஷனிங்) அதற்கென்று உரிய ஃபாரத்தில் ரேஷன் கார்டுடன் விண்ணப்பம் செய்து கொண்டாலே போதும்; நேரடியாகவே பர்மிட் வழங்கப்பட்டு விடுகிறது. ஆனால் இந்த பர்மிட் ஒரு வார காலத்திற்குப் பின்தான் உபயோகிக்கத் தக்கதாகும். இந்த இடைக்காலத்தில், தேவைப்பட்டால் பர்மிட் பற்றிய தகவல்கள் அதிகாரிகளால் சரிபார்க்கப்படுகின்றன. அரிசியைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள 'பர்மிட்'டின் காலவரையறை 30 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொள்முதல் இலக்கு நிறைவேறினால்....

இந்தக் கட்டுப்பாடுகள் கூட, தொல்லைகள் தராவண்ணம் இருக்க வேண்டுமென்றும், எந்த முக்கிய நோக்கத்திற்காக இவை ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ, அந்த நோக்கம் நிறைவேறியவுடன், கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் என்றும் அரசு விரும்புகிறது. கொள்முதலுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை, அல்லது அந்த இலக்கில் பெரும் அளவை ஒரு மாவட்டம் அடைந்துவிட்டால், அந்த மாவட்டத்திற்குள் உணவு தானிய நடமாட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. சான்று, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்கள். பிற மாவட்டங்களில் கொள்முதல் இலக்கு அடைந்தவுடன் கட்டுப்பாடுகள் நீக்கப்படும். தானிய நடமாட்டக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் தாலூகாக்களிடையே அரிசி போக்கு வரத்து ஏற்பட்டிருப்பதினால், அரிசி விலையில் திருப்தி ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. ஒன்றையொன்று அடுத்துள்ள பற்றாக்குறை மாவட்டங்களிடையே போக்கு. வரத்தை அரசு தளர்த்தக்கூடும். அதனால் விரிவான பரப்பில், தானியப் போக்கு வரத்து கட்டுப்பாடின்றி நடைபெற வழியேற்படும்.

சமூக, குடும்ப நிகழ்ச்சிகளில் விருந்து

விருந்தினர் கட்டுப்பாடு உத்தரவின்கீழ், சாதாரண விருந்தில் 25 பேர்களுக்கும், திருமணம், நீத்தார் கடன் சடங்குகளில் 50 பேர்களுக்கும் மேலும் பருப்பு வகைகள் அடங்கிய உணவு பரிமாறக் கூடாது என்றுள்ள கட்டுப்பாடானது நீக்கப்பட வேண்டும் என்று பல்வேறு வேண்டுதல்கள் அரசாங்கத்திற்கு வந்தன. அரிசி மற்றும் அரிசியினால் செய்த உணவுப் பண்டங்கள் தவிர, ஏனையவற்றை 'தடை செய்யப்பட்ட' உணவுப் பொருள்களிலிருந்து நீக்க வேண்டுமென்றும் முறையிடப்பட்டது. எனவே 'தடை செய்யப்பட்ட உணவுப் பொருள்' என்ற வாசகத்திற்கு அரிசி, அரிசிப் பொருள்கள், மற்றும் அவற்றைக் கொண்டு செய்யப்படும் உணவுப் பண்டங்கள் என்று பொருள்படும்படியாக, மேற்கண்ட உத்தரவில் திருத்தம் செய்யப்பட்டது. அதே போல் சாதாரண விருந்துகளில் உபசரிக்கத் தக்க விருந்தினர்களின் எண்ணிக்கையை 25-லிருந்து 50 ஆகவும், திருமணம், நீத்தார் கடன் சடங்கு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் விருந்தினர் எண்ணிக்கையை 50-லிருந்து 100 ஆகவும் உயர்த்தி, அதற்கேற்ப உத்தரவில் திருத்தம் செய்யப்பட்டது.

ஓட்டல்களில் கட்டுப்பாடு ரத்து

தங்கள் குடும்பங்களோடு இல்லாமல் தனித்து வசிப்பவர்களும், நகரங்களுக்கு வந்து செல்லக்கூடிய மக்களும், ஓட்டல்களையும், இதர உணவு விடுதிகளையுந்தான் தங்கள் சாப்பாட்டுக்கு நம்பியிருக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு, 'ஓட்டல்களில் திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் மாலை 5 மணிக்கு மேல் அரிசி உணவு படைக்கக் கூடாது' என்ற கட்டுப்பாடு

[25-ம் பக்கம் பார்க்க]

விவசாயப் பணிகளில் தீவிரம்

வட்டார அதிகாரிகளுக்கு விசேட உத்தரவுகள்

விவசாயப் பணிகளைத் தீவிரப்படுத்த உடனடி நடவடிக்கை

சிறிய நீர்ப்பாசனம், விதைகள், ரசாயன உரம், பயிர்ப் பாதுகாப்பு முதலியவை உள்ளிட்ட விவசாய வேலைத் திட்டங்களை, இப்போதைய சாகுபடி பருவத்தில் தீவிரப்படுத்துவது சம்பந்தமாக, எல்லா வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கும் (Block Development Officers), கிராம வளர்ச்சி நெறியாளர் சிறப்பு ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

இவ்வாணைகளின்படி, ரசாயன உர விநியோகம் பற்றிய பொறுப்பு வட்டார வளர்ச்சி அதிகாரிகளைச் சாரும். விவசாய வளர்ச்சி அலுவலர் [Extension Officer (Agriculture)], கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் [Extension Officer (Co-operation)], கிராம சேவகர் ஆகியோரின் உதவியோடு, ரசாயன உரங்களின் விநியோகத்திற்கு, வட்டார வளர்ச்சி அதிகாரிகள், ஏற்பாடு செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குரிய பொறுப்பை உணர்ந்து நடவடிக்கை எடுத்து, தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரசாயன உரங்களை வாங்கி வந்து, அவற்றை விவசாயிகளுக்கு விற்பனை செய்வதில், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், காலதாமதமின்றி, போதிய கவனம் செலுத்தி, விரைந்து செயல்பட வேண்டும் என்று தெளிவாக உணர்த்தப்பட்டிருக்கிறது.

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரசாயன உரங்களை (allotted quotas) 'டெலிவரி' எடுக்க, தங்களுக்கு நிதி வசதி இல்லை என்று கூட்டுறவுச் சங்கங்கள், பொதுவாக முறையிட்டு வருகின்றன. இந்த நிலைமையைச் சீராக்க, வட்டார வளர்ச்சி அதிகாரிகள், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் (Deputy Registrar of Co-operative Societies) ஆகியோரின் உதவியுடன், உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு அவர்கள், கூட்டுறவு பாங்கை (Co-operative Bank) அணுகி, ஒதுக்கப்பட்ட 'கோட்டா'-க்கள் மீது கடன் வழங்குமாறு கேட்கவேண்டும், அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் பாக்கி நிலுவைகளை வசூலிக்க ஏற்பாடு செய்யவும் வேண்டும். அநேக கிராமங்களில், செல்வாக்குப்படைத்த ஒரு சிலரும், கூட்டுறவுச் சங்க உறுப்பினர் அல்லாதவர்களும், ரசாயன உரங்கள் பெறுவதையும், ஆனால், எண்ணற்ற சிறு விவசாயிகள் ரசாயன உரங்களைப் பெற முடியாத நிலை இருப்பதையும் காண முடிகிறது. இதை நிறுத்தியாக வேண்டும்.

ரசாயன உர விநியோக ஏற்பாடுகளில், குறைபாடு ஏதாகிலும் இருந்தால், அது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு (கலெக்டர்களுக்கு) அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டும்.

மக்களுக்குக் கூடுமான அதிக உதவி அளிப்பதில், காலதாமதம் சிறிதும் கூடாது என்று, கிராம வளர்ச்சி நெறியாளர், வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கு உணர்த்தியிருப்பதோடு, பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். தவிர, அவசியமானபோதெல்லாம், வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், பஞ்சாயத்துத் தலைவர்களும் வருவாய்க் கோட்ட அதிகாரிகளுடனும் டெபுடி கலெக்டர்கள்), மாவட்ட ஆட்சித்தலைவர்களுடனும் நெருங்கியதொடர்பு கொண்டு, அவர்களது உதவியை நாடவும், காலதாமதத்தைத் தவிர்க்க முடிந்தால் அவர்களை நேரில் சந்திக்கவும், கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஏற்பாடுகளில், மேலும் ஏதாவது சிக்கல்கள் நேரிட்டால், அவைபற்றி, கிராம வளர்ச்சி நெறியாளருக்குத் தெரிவிக்கலாம்.

(இது பற்றிய விவரங்களை, கிராம வளர்ச்சி நெறியாளரின் 27—5—1967, 28—5—1967 தேதிகளிட்ட சுற்றறிக்கை எண் Roc. 87369/67-G-ல் காணலாம்.

* * *

சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களில் பணிகளை தீவிரப்படுத்துதல்.

விவசாயிகளின் வசதிக்கேற்ப வட்டார 'டெப்போ'க்களின் வேலை நேரத்தில் மாற்றம்

சிறிய நீர்ப்பாசன, குடி மராமத்து வேலைகளை நிறைவேற்ற புதிய ஆணைகள்

சமுதாய வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள 'டெப்போ' (Depot)-க்களின் வேலை நேரம், விவசாயிகளின் வசதிக்கு ஏற்ற வகையில், இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. இந்த 'டெப்போ'-க்களை, காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், பிற்பகல் 2—30 முதல் மாலை 5—00 மணி வரையிலும் திறந்து வைக்கும்படி, கிராம வளர்ச்சி நெறியாளர் ஆணை பிறப்பித்துள்ளார். (இது வரை, காலை 10—30 மணி முதல், மாலை 5 மணி வரை, இவை திறக்கப்பட்டிருந்தன). விவசாயிகள் தங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வசதியான இந்த புதிய ஏற்பாடு 1967 ஜூன் 1-ந் தேதி முதல் அமுலுக்குவரும்.

வட்டார வளர்ச்சி நிறுவனத்தின் பணிகளைத் தீவிரப்படுத்தும் முயற்சியில் ஒரு பகுதியாக, வட்டாரங்களில் நீர்ப்பாசன ஆதாரங்களைத் தக்க முறையில் பராமரிப்பதற்கு, உடனடியாகச் செய்தாக வேண்டிய பழுதுபார்க்கும் வேலைகளை நிறைவேற்றவும், குடி மராமத்து வேலைகளை நிறைவேற்றவும் அவசர ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சிறிய நீர்ப்பாசன ஏரி, குளங்களைப் (கண்மாய்கள்) பழுதுபார்க்கும் விஷயத்தில், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை செய்வதற்கான பட்டியல் விவர முறையையே, கண்டிப்பாகப் பின்பற்றத் தேவையில்லை என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அப்போதுதான் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய வேலைகளை, பட்டியல் விவர முறைக்குப் புறம்பாகவும் எடுத்துக்கொள்ள முடியும்.

சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை எல்லாம்—அவை, பஞ்சாயத்து ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டவை ஆயினும், அல்லது வேறு வகைப்பட்டதாயினும்—வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், ஓர் ஒழுங்கான முறை வைத்து, மேற்பார்வையிட்டு, மதகுகளில் ஏதாவது குறைபாடு, கரைகளில் உடைப்பு போன்றவற்றைக் கண்டறிந்து, அவற்றைக் குறிப்பிட்டு நீர்ப்பாசன ஆதாரங்களில் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவேண்டும். ஏரி, குளங்கள் (கண்மாய்கள்) பராமரிப்பில் குறை

பாடுகள் இருந்தால், அவைபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு (கலெக்டர்களுக்கு) தெரிவிக்க வேண்டும். நீர்ப்பாசன ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தவை, பராமரிப்புப் பொறுப்பு யாருடையது என்பதில் சந்தேகம் எழுந்தால், அது பற்றி விளக்கம் கோரிப் பெற்று, சந்தேகத்தை உடனடியாக நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வேலை, மூன்று மாதங்களுக்குள் முடிவடைய வேண்டும். நீர்ப்பாசன ஏரி, குளங்களின் நிலைமைபற்றி தகவல் சேகரிப்பதில், பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெறலாம்.

பஞ்சாயத்து ஒன்றியங்கள், தங்கள் பகுதிகளில் பெரிய நீர்ப்பாசனப் பணிகள் ஏதாகிலும் கவனிக்கப்பட வேண்டியிருந்தால், அது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவித்தால், அது பற்றி பொதுப் பணித்துறை (Public Works Department)-யைக்கொண்டு கவனிக்கச் செய்ய இயலும்.

• • •

விவசாயிகளுக்கு விதைகள் சீராகக் கிடைக்க ஏற்பாடு

வட்டாரங்களில் நடவடிக்கை

விவசாயத் துறையினால் சிபாரிசு செய்யப்பட்ட விதை ரகங்களை (Secondary seeds) உற்பத்தி செய்து பெருக்குவதும், விநியோகம் செய்வதும் இப்போது பெரும்பாலும் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும், இப்போதைய சாகுபடி பருவத்தில் வட்டாரப் பகுதியில் விதைகள் விநியோகத்திற்கு, உரிய காலத்தில் போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகம் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

உபயோகத்திற்குக் கிடைக்கக்கூடிய விதைகள், எந்த அளவுக்குக் கைவசம் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கணக்கு எடுக்குமாறு, வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்குக் கூறப்பட்டிருக்கிறது. விநியோகத்திற்கு உள்ள விதைகளின் அளவு, எதிர்பார்க்கப்படும் தேவைகளுக்குக் குறைவாக இருக்குமானால், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் அது பற்றி மாவட்ட விவசாய அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் (கலெக்டர்) உடனடியாகத் தெரிவிக்கவேண்டும். அவ்வாறு செய்தால், விதைகள் இருப்பு உள்ள வேறு இடங்களிலிருந்து—ஒரு சரிக்கட்டல் ஏற்பாடாக—கொண்டுவந்து, போதிய விதைகளை விநியோகம் செய்ய இயலும்.

கிராம சகாயக்குகள் உற்பத்தி செய்யும் விதைகள் போதிய காய்ச்சல் போடப்பட்டவைதானா என்பதை நன்கு கவனிக்கும்படியும், அந்த விதைகளை விநியோகம் செய்வதற்கு முன், அவற்றின் முளைக்கும் சக்தியைப் பரிசோதனை செய்து பார்க்கும்படியும் விவசாய வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. கிராம சகாயக்குகள் விற்கும் விதைகளும், கொள்முதல் விற்பனை சங்கங்களும் (Marketing Society) அல்லது ஆதார விவசாய சங்கத்தில் (Primary Agricultural Society) விநியோகிக்கப்படும். விதைகளும் நியாய விலையில் விற்கப்படும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதிக விளைச்சல் தரும் ஏடிடி-27 (ADT-27) ரக நெல் விதைகளை எல்லா மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்ய, அரசாங்கம் ஏற்கனவே ஆணை பிறப்பித்திருப்பதால், இந்த ரக விதைகள் விநியோகத்தைப் பொருத்தவரை சிரமம் ஏதும் இராது. வேறு ரக விதைகள் ஏதாகிலும், வட்டாரத்தில் பற்றுக்குறையாக இருந்தால், அது பற்றி மேலதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டும்.

விவசாயிகளுக்கு விற்பனைக்காக வந்துள்ள விதைகளைப் பற்றி அறிவிப்புப் பலகைகளில் தெரிவிக்கும்படி வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கும், வட்டார 'டெப்போ'க்களுக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. கொள்முதல் விற்பனை நிலையங்களும், ஆதார விவசாய சங்கங்களும் விதைகள் விற்பனையில் காலதாமதம் ஏதும் இல்லாதபடி பார்த்துக்கொள்ளுமாறு கூறப்பட்டிருக்கிறது.

—:o:—

சென்னை நகரிலுள்ள அரசு அச்சகத் தொழிலாளர் கூட்டத்தில் முதலமைச்சர் பேச்சு :

ஆட்சி — ஒரு தொடர் கதை

“இப்போது ஆட்சியில் இருப்பவர்களிடம், தங்கள் கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுபவர்கள், முன்பு ஆட்சியில் இருந்தவர்களைப் பற்றி குறைகூறிப் பேசுவது கூடாது. அந்தத் தப்பான முறையைப் பின்பற்ற வேண்டாம்” என்று தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், தமிழக அரசு அச்சகத் தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் அறிவுறுத்தினர்.

'' நான், எனது காலத்தில் என்னால் முடிந்ததைச் செய்வேன். எனக்குப் பின் வருபவர்கள் அவர்களால் இயன்றதைச் செய்வார்கள். இது (ஆட்சி) தொடர்கதையே தவிர, தனித் தனி சிறு கதை அல்ல '' என்று அவர் கூறினர்.

தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கான கல்வி போதனைத் திட்டம் ஒன்று மத்திய அரசாங்க உதவி மானியத்துடன் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ' உற்பத்திப் பெருக்கம், சிக்கனச் சீரமைப்பு, விபத்துக்களைத் தவிர்க்க எச்சரிக்கை முறைகள், மற்றும் தொழிலாளர்-நிர்வாகத்தினர் உறவு முறை முதலியவை ' பற்றிய பாடங்கள் தொழிலாளர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. முதலில், தெரிந்தெடுக்கப்பட்ட சில தொழிலாளர்களுக்கு, பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்று வரும் அவர்கள், தங்கள் தொழிற்சாலையில் உள்ள இதர தொழிலாளர்களுக்கு, வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்களாகப் பணி புரிகின்றனர்.

இத்தகைய வகுப்புகள், தமிழ் நாடு அரசு அச்சகத்திலும் நடைபெறுகின்றன. அதன் ஆண்டு விழா 1967-ம் ஆண்டு மே மாதம் 26-ந் தேதி அன்று கொண்டாடப்பட்டது.

சென்னை தங்கசாலையில் உள்ள அச்சகத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு பேசின் பிரிட்ஜ் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எம்.ஆர். கண்ணன் அவர்கள் தலைமை வகித்தார். தொழிலாளர்களுக்கான கல்வித் திட்டத்தில் பங்கு கொண்டு தேர்வு பெற்ற தொழிலாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி, முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் உரை நிகழ்த்தினர். காலஞ்சென்ற, தொழிற்சங்கத் தலைவர் திரு எஸ். எஸ். கோவிந்தசாமியின் உருவப்படத்தையும், முதலமைச்சர் திறந்து வைத்தார்.

விழா துவக்கத்தில், தமிழக அரசு அச்சக, எழுதுபொருள் துறை நெறியாளர் திரு குமார. கோமேதகவேலு அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தொழிலாளர் கல்வி வகுப்பு நடத்தும் ஆசிரியர்களில் ஒருவரான திரு எம். பி. ஜெயராமன் தொழிலாளர்களது கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

தமிழக அரசு அச்சக, எழுது பொருள் துறை தொழிலாளர்கள் கூட்டுறவு பாங்கின் சார்பில் முதலமைச்சர் நிதிக்கு ரூ. 2,501 நன்கொடை அளிக்கப்பட்டது. நன்கொடைக்கான ' செக்'கை, பாங்கு துணைத்தலைவர் திரு இ. இரத்தினம், முதலமைச்சரிடம் வழங்கினர்.

அச்சகக் கட்டடத்திற்குள் திருவள்ளுவர் படம் ஒன்றும், முதலமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது.

முதலமைச்சர் நிதி—ஒரு விளக்கம்

முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :

“தொழிலாளர்களுக்காகப் பணி புரிகிறவர்கள் சமுதாயத்தின் மதிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், தூயவர்களாகவும் இருக்கவேண்டும்.

இங்கு என்னிடம் தரப்பட்ட நன்கொடையை பற்றி குறிப்பிட்டவர்களில் ஒருவர், அது ' முதலமைச்சரின் யுத்த நிதிக்குத் தரப்பட்டதாகச் சொன்னர். அது ' யுத்த நிதி ' அல்ல. பஞ்சம் வெள்ளம், புயல் போன்ற அவதிகளால் மக்கள் தொல்லைப்படும்போது அவர்களுக்கு உதவி செய்வதற்காக ' பிரதம மந்திரி நிவாரண நிதி ' என்று இருப்பது போல, நம் தமிழ் நாட்டில் தீ விபத்து, வெள்ளம், புயல் முதலிய அவலங்கள்

நேரிட்டால் அந்த நேரங்களில் நம் மக்களுக்கு உதவி அளிப்பதற்காக, இங்கு 'முதலமைச்சர் நிதி' என்று ஒன்று இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டு, அதன்படி இந்த நிதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. தவறான பெயரில் அதைக் குறிப்பிட்டதால், நான் இந்த விளக்கம் சொல்ல வேண்டியதாயிற்று.

ஆட்சி—ஒரு தொடர் கதை ; தனிச் சிறு கதை அல்ல.

'' முதலில் கடமையைச் செய்யுங்கள், பிறகு உரிமையைக் கேளுங்கள் '' என்று முன்பு (ஆட்சியில்) இருந்தவர்கள் சொன்னதாகவும், ஆனால் தாங்கள் (தொழிலாளர்கள்) கடமையை செய்தும், உரிமையை அவர்கள் தரவில்லை என்பதாகவும் இங்கு கூறப்பட்டது. இந்த முறையில் பேசுவது சரியல்ல. இந்தத் தப்பான முறையைப் பின்பற்ற வேண்டாம். நான், எனது காலத்தில் என்னால் முடிந்ததைச் செய்வேன். எனக்குப் பின் வருபவர்கள் அவர்களால் இயன்றதைச் செய்வார்கள். இது தொடர் கதையே தவிர, தனித்தனிச் சிறு கதை அல்ல.

' எங்கள் கோரிக்கைகளை இதோ எழுதித் தந்திருக்கிறோம். படித்துப் பாருங்கள். அதில் நியாயம் இருப்பதாக, உங்களுக்குத் தோன்றினால், செய்யுங்கள் இல்லாவிட்டால், வேண்டாம் என்று இங்கு சொல்லப்பட்டது. நியாயம், நிச்சயமாக இருப்பதால்தான், இவ்வளவு தைரியமாக அடித்துப் பேச முடிகிறது.

நியாயம் கூட அதிக விலை என்றால்....

ஆனால் நியாயம் கூட அதிக விலை என்றால், அதை வாங்குவது கடினம்.

என்னிடம் தரப்பட்டுள்ள பெட்டிதான் பெரிது. பணம் சிறிது.

நான் உங்களிடம் வரும்போது, நீங்கள் உங்கள் கஷ்டத்தைச் சொல்கிறீர்கள். நீங்கள் என்னிடம் வந்தால், நான் எனது கஷ்டத்தைச் சொல்வேன்.

மந்திரியே தவிர மந்திரக்காரன் அல்ல

மந்திரி என்றால், மந்திரக்காரன் அல்ல. நீங்களே வந்து பாருங்கள். உள்ள பணத்தை இப்படி இப்படி பங்கிட்டு வைத்திருக்கிறேன் என்று காட்டுகிறேன். அதிலிருந்து கொஞ்சம் எடுத்து இதற்குப் போடலாம், இதிலிருந்து அதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று, உங்களுக்கு உண்மையில் நியாயம் என்று தோன்றினால் சொல்லுங்கள்.

நான் உங்கள் கஷ்டத்தை அறியாவதன் அல்ல. நான் உங்கள் மத்தியிலிருந்து வந்தவன்—எங்கிருந்தோ வந்தவன் அல்ல.

தொழிலாளர் குடும்பம் தழைக்க....

உங்கள் குடும்பம் தழைக்க வேண்டும். உங்கள் குடும்பங்களில் நிம்மதி நிலவ வேண்டும் என்பதே என் ஆசை.

ரூபாய்க்குப் படி அரிசி திட்டத்தை நான் கொண்டு வந்தபோது, அதிகாரிகள் என்னை—கோபத்தோடு அல்ல—பரிதாபத்தோடு பார்த்தார்கள். ''விவரம் தெரியாமல் செய்கிறானே'' என்ற அனுதாபம் அவர்கள் பார்வையிலே இருந்தது.

ஏழை மக்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையில் உணவு வழங்கப்படவில்லையானால், நாட்டில் எந்த நல்ல காரியமும் சரிவர நடைபெற முடியாது எனக் கருதுபவன் நான். அதனால்தான், யாரும் செய்யக்கூடாத காரியத்தை '' செய்யக்கூடாது '' என்று மற்றவர்கள் சொல்லும் காரியத்தை—ரூபாய்க்குப் படி அரிசி திட்டத்தை—செய்யத் துணிகிறேன்.

கல்வி திட்டத்தின் கீழ் பொது அறிவு போதனை

தொழிலாளர்களுக்குக் கல்வி போதிக்கப்படுவதைக் காண மகிழ்ச்சி அடைகிறேன்.

நம் நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்—படிப்பவன் வேலை செய்யமாட்டன், வேலை செய்பவன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெல்ல மெல்ல மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடுகூட, மற்ற பொது அறிவைப் பெறுவதும் நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவு மீறிய கோரிக்கைகளை எழுப்பமாட்டார்கள். '' நாம் கேட்டால் கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள் ? '' என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்.

எதிர்காலம்—தொழிலாளர்களுக்குத்தான்

எதிர்காலம் தொழிலாளர்களுடையது என்பதில் ஐயமில்லை. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அரசு தொழிலாளர் அரசாகத்தான் அமையும்.

தொழிலாளர்களுடைய கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை நான் ஏற்கிறேன். அக்கறையோடு கவனிப்பேன். உடனடியாகச் செய்யக் கூடியதை உடனடியாகச் செய்வேன். படிப்படியாகச் செய்ய வேண்டியதைப் படிப்படியாகச் செய்வேன்.

'' கிடைத்தது ஈர விறகு ''

''மணி என்னுகிறது, இன்னுமா ஆகவில்லை'' என்று அடுப்பங்கரைப் பக்கம், திரும்பித் திரும்பிப் பார்த்தால் என்ன ஆகும் ? ''நீங்கள் வாங்கி வந்த ஈர விறகு இலட்சணம் அப்படி. அவசரப்பட்டால் முடியாது. மணி மூன்றாகும். '' என்று பதில் வருகிறது.

அதைப் போல், எங்களிடம் ' ஈர விறகு ' தரப்பட்டிருக்கிறது. ஊதி ஊதிப் பார்க்கிறோம். பற்றினால் சரி, வேகவேண்டியது வேகும்.

அவ்வளவு தான் நான் சொல்வேன். மற்றதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.''

—மாண்புமிகு அண்ணாதுரை

—படம் 23-ம் பக்கம் பார்க்க.

மழைக் காலங்களில் பூச்சி மருந்துகளை தெளித்தல்

செடிகளுக்கு பூச்சிமருந்துகளை தெளிப்பதிலுள்ள உள்நோக்கங்கள், பூச்சிகளை கொன்று, நோய்களை தடுப்பது மட்டுமின்றி, செடிகளை தாக்க வரும் பூச்சிகள் அல்லது நோய்களை தடுக்க, செடிகளின் மேற்பாகங்களிலேயே சிறிது பூச்சி மருந்துகளை விட்டு வைப்பதுமாகும்.

நோய்கள், பூச்சிகள் செடிகளை தாக்குவதற்கு முன்னாலேயே, செடிகளை காப்பாற்றுவதற்கு முன்னெச்சரிக்கையாக பூச்சி மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. தெளித்தபிறகு, சிறிது காலம் வரை அவற்றின் காரத் தன்மை, நெடி ஆகியவை செடிகளில் இருப்பது மிகவும் அவசியமாகிறது.

மருந்து தெளித்தல் ஒரு பிரச்னை

அந்தந்த இடங்களிலுள்ள ஈரம், மழை, உஷ்ணம் போன்றவற்றை பொருத்துதான், பூச்சிமருந்துகளினால் செடிகள் நன்மைகளை அடைய முடியும்.

பெருத்தமழை, தொடர்ந்து பெய்யும் மழைகளினால், செடிகளில் தேங்கி நிற்கும் பூச்சி மருந்துகள், அதிக நாட்களுக்கு செடிகளிலேயே தங்கியிருப்பதில்லை. இதனால் செடிகளிலேயே முன்னெச்சரிக்கையாக விடப்பட்டிருக்கும் சிறிதளவு பூச்சி மருந்துகளினால், செடிக்கு நன்மை கிடைப்பதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் செடிகளுக்கு மருந்து தெளிப்பது ஒரு பெரும் பிரச்னையாகவே ஆகிவிடுகிறது.

அடிக்கடி மழை பெய்யும் இடங்கள், பெருத்த மழை, எதிர்பார்க்காமல் ஏற்படும் மழை ஆகியவற்றினால் விளையும் இன்னல்களை தவிர்ப்பதற்கு, கீழ்க்கண்ட முறைகளை கையாளலாம்:

மருந்து தெளிக்கும் காலம்

செடிகளை பூச்சிகள், நோய்கள் அண்டுகின்றனவா என்பதை எப்போதும் கவனமாக பார்த்து வர வேண்டும்; அப்படித் தோன்றியவுடன், அவற்றை தடுக்க, உடனே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மழையில்லா நேரங்களிலும், வரட்சி நேரங்களிலுமே பூச்சி மருந்துகளை தெளிக்க வேண்டும்.

மற்ற பிரதேசங்களில் பூச்சி மருந்துகளை தெளிப்பது போன்று அல்லாமல், இவ்வித இடங்களில் அடிக்கடி மருந்து தெளிப்பது மிகவும் அவசியம். அவ்வாறே செய்யவும் வேண்டும். எனவே குறைந்த விலையுள்ள பூச்சிமருந்துகளையே உபயோகிப்பது ஒரு சிக்கனமான முறையாகும்.

தெளிக்கும் முறையே சிறந்தது

மருந்து தூள்களுக்கு பதிலாக, கலவை மருந்துகளுடன், செடிகளில் ஒட்டிக்கொள்ள தகுதியான விசேஷ மருந்துகளையும், பூச்சி மருந்து கலவையுடன் சேர்த்து அவற்றை செடிகளின் மேல் தெளித்தால் அதனால் நல்ல பலன் கிடைக்கும். இப்பிரதேசங்களிலெல்லாம் தூவும் முறையை கையாளாமல், மருந்துகள் தெளிக்கும் முறையையே கையாளுவது சாலச் சிறந்தது.

இலைகளின் இருபுறங்களிலும் மருந்துகள் முழுவதுமாக தெளிக்கப்படவேண்டும்; கூடுமானவரை அந்தந்த செடிகளுக்கு அதனதன் பருவத்திற்கேற்ற பூச்சி மருந்துகளையே தெளிக்கவேண்டும். அப்போதுதான் அவை, மழை நீரால் அடித்துச் செல்லப்படாமலிருக்கும்.

பயன் கிடைப்பது உறுதி

முறையான மருந்தை தெளித்த பிறகு, ஆறு முதல் எட்டு மணி நேரம் வரை மழையில்லாவிட்டால், அனேகமாக எல்லா மருந்துகளையும் செடி உறிஞ்சி விடும். இதர மருந்துகளை உபயோகித்தால் அவை இலைகளிலேயே தங்கிவிடுமாதலால், மருந்துகளை மழைநீரினால் கரைத்துவிட முடியாது.

எவ்வாறிருப்பினும், தெளித்த ஆறு முதல் எட்டுமணி நேரங்களில், மருந்துகளின் நாற்றத்தால் அல்லது அதை நுகர்வதால் பூச்சிகள் நிச்சயமாக மாண்டுவிடும்.

இந்தியக் குடியரசின் புதிய தலைவர்

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றுள்ள டாக்டர் ஜாகிர் ஹுசேன், 1897-ம் ஆண்டு ஹைதராபாத்தில் பிறந்தார். 1907-ல் அவரது தந்தையின் மரணத்திற்குப் பிறகு குடும்பம் உத்தரபிரதேசத்தில் 'எட்டாவா' என்னும் இடத்திற்கு மாறியது.

பல்கலைக் கழக படிப்பிற்குப் பின்னர், ஜாகிர் ஹுசேன், பெர்லின் பல்கலைக் கழகத்திலிருந்து பி.ஹெச். டி. பட்டம் பெற்றார். ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் கொந்தளிப்பே அவரை ஆட்கொண்டு விட்டது. இந்த இயக்கத்தில் கலந்து கொண்டதிலிருந்து, மகாத்மா காந்தியுடன் அவருக்கு ஏற்பட்ட தோழமையின் துவக்கமாகவும் அமைந்தது.

1920-ல் டில்லியில் 'ஜாமியா மில்லியா' என்னும் கல்வி ஸ்தாபனத்தை அமைக்கச் செய்தார். இந்நாட்டுப் பண்பாட்டில் வேரூன்றிய புதிய கல்விமுறை ஒன்றை 'ஜாமியா மில்லியா' மூலமாக உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். கிட்டதட்ட 30 ஆண்டுகாலம் அவர் இந்தக் கல்விக் கழகத்தில் துணை வேந்தராகச் செயலாற்றி இருக்கிறார். தேசிய வாழ்வில் இயங்கும் சக்திகளுக்குப் பதிலளிக்கக்கூடிய ஒரு கல்வி முறையை வகுப்பதில் ஈடுபட்டிருந்தார்.

கல்வி—கலாச்சாரத் துறையில் செய்த சேவைகளுக்காக, டாக்டர் ஜாகிர் ஹுசேனுக்கு 1954-ல் 'பத்ம விபூஷன்' பட்டம் வழங்கப்பட்டது. 1952, 1956-ல் மாநில அவைக்கு ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1957–ல் பீஹார் கவர்னராக நேருஜியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 5 ஆண்டுகளுக்குப் பின் உப–ஜனாதிபதியானார்.

இவரது அருங்குணங்கள், இவருக்குப் 'பாரத் ரத்னா' என்ற விருதைத் தேடித் தந்தது. ஆழ்ந்த சமயவாதியான டாக்டர் ஹுசேன் பிற மதங்களைச் சிறிதும் வெறுக்காதவர். இலக்கியத்திலும் கலைகளிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவர். பிளேடோவின் நூல்களின் மொழி பெயர்ப்பு உள்பட, பல நூல்களை உருது மொழியில் இவர் எழுதியுள்ளார். அரிய கற்களையும், ஓவியங்களையும் சேகரிப்பது இவரது பொழுதுபோக்கு ஆகும்.

புதிய குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேனுக்கு 70 வயதாகிறது. 80 சதவிகிதம் இந்துக்கள் வாழும் இந்தியாவின் குடியரசுத் தலைவராக முதன் முறையாக ஒரு முஸ்லிம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது உலகத்தின் கவனத்தையே கவர்ந்துள்ளது.

இ இ இ

துணைத் தலைவர்

துணைத்தலைவரான திரு வி. வி. கிரி, ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பெர்ஹாம்பூரில் 1894-ம் ஆண்டு பிறந்தவர். இவர் அயர்லாந்துக்குச் சென்று, சட்டம் பயின்று பாரிஸ்டர் ஆனவர். இந்தியா முழுவதும் தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தும் முயற்சியில் பெரு வெற்றியடைந்தார் என்றே சொல்லலாம். 1937–39-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட அமைச்சர் அவையில், தொழிலாளர் நல அமைச்சராக நியமிக்கப்பட்டார். பிறகு திரு பிரகாசம் அமைச்சரவையிலும் அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர் இலங்கையில் இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டார். 1952-ல் மத்திய அமைச்சரவையில், தொழிலாளர் நல அமைச்சராக நியமிக்கப்பட்டு, இரண்டரை ஆண்டு காலம் அப்பதவியை அவர் வகித்தார். 1957-ம் ஆண்டு முதல் 1960-ம் ஆண்டு வரை, உத்தரப்பிரதேச கவர்னராகவும், 1961-ம் ஆண்டு முதல் 1965-ம் ஆண்டு வரை கேரள கவர்னராகவும் பதவி வகித்துள்ளார். 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் தேதி முதல், துணைத் தலைவராய் தேர்ந்தெடுக்கப்படும் வரை மைசூர் கவர்னராக பணியாற்றியுள்ளார்.

ஊராட்சி பற்றி மாணவர்கள்

இன்றைய இளைஞர்கள், நாட்டின் நாளைய குடிமக்கள். மக்களாட்சியின் பல்வேறு நிலைகளில் பங்கேற்றுப் பணியாற்ற இருப்பவர்கள் அவர்கள். எனவே மக்களாட்சியின் அடித்தளமான பஞ்சாயத்து ஆட்சி பற்றி மாணவர்கள் அறிந்திருக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு. கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. பரிசு பெற்ற கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் சில கீழே தரப்படுகின்றன. இவை இளைஞர் இதயங்களின் சிந்தனைப் போக்கைக் காட்டுவனவாகும்.

—ஆசிரியர்

"மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்று ஆசிரியர் தொல்காப்பியரால் பாராட்டப் பெற்ற மனிதன் சமுதாயக் கொடுமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, நெடுநாளைய சிந்தனைக்குப் பிறகு, திட்டமான வழிகளை வகுத்துக்கொண்டான். புற வாழ்வை வளப்படுத்த அவன் கண்ட பல்வேறு அமைப்புக்களில் பஞ்சாயத்து ஆட்சியும் ஒன்று. மனித இனம், புத்துணர்வால், புதுப் பொலிவால் செழிக்கத் தொடங்கியது."

இரா. கலா,
நடராஜன்—தமயந்தி உயர்நிலைப்பள்ளி,
வெளிப்பாளையம்,
நாகப்பட்டிணம்.

* * *

"ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எப்படி அவசியமோ அதுபோல ஒரு நாட்டிற்கு கிராம ராஜ்யம் அவசிய மாகும். பஞ்சாயத்துக்களிலுள்ள தலைவர்கள் தம்முடைய கடமையை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்."

கோ. சரோஜா,
அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

* * *

" மனிதனின் நாகரிக முன்னேற்றத்தை அவனது சமுதாய அரசியல் அமைப்புகளினுலேயே அளவிடலாம். ஒரு மனிதன் தன்னைத்தானே ஆண்டு கொள்வது பெரிதல்ல. ஆனுல் ஒரு வட்டார மக்கள் தங்களைத் தாங்களே சிறப்பாக ஆண்டு கொள்ளும் இன்பம் அரசியல் அமைப்புகளில் தனித் தன்மை வாய்ந்தது. இந்த இன்பத்தை முழு அளவில் நுகர வழிகோலுவது பஞ்சாயத்து ஆட்சியாகும்."

சீ. பொன்னி,
மாவட்டக் கழக பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
திருமங்கலம்.

* * *

"நாற்றமில்லாத மலரின் அழகின்னு" என்று கபிலதேவர் கூறியுள்ளார். மலருக்கு வாசனை இல்லாவிடில் அது மலராகாது. அது போன்று, மக்கள் எல்லாவகையிலும் ஒன்றுபட்டு உழைக்காவிடில் பஞ்சாயத்து ஆட்சி பயனற்றதாகிவிடும்."

சி. வேங்கடராமன்,
விவேகானந்தா உயர்நிலைப்பள்ளி
திருப்பராய்த்துறை.

"ஒரு குரங்கிற்குப் பசி எடுத்தால், அது மேலேயுள்ள ஒரு மரத்தின் இலையையோ, பழத்தையோ பறித்துத் தின்கிறது. இது கவர்ந்து வாழ்தல் ஆகும். அதுபோலவே மனிதனுக்குக் கிடைக்கும் பொருள்களை ஒரு மரத்திலுள்ள காய்கனிகளுக்கு ஒப்பிடலாம். ஆனுல் அவைகளைப் பெறுவதற்குத் தான் சற்று நிதானமும் திட்டமும் அவசியம். எனவே தான், 'எழுதி வழங்காதான் வாழ்க்கை—கழுதை புரண்ட களம்' என்னும் பழமொழியும் உள்ளது. நல்ல முறையில் நல்ல திட்டங்களைத் திட்டி, கடன் அறிந்து, தக்க அறிவையும் செலுத்தினுல் இவ்வுலகையே வெல்லலாம்."

கு. கதிரவன்,
விருதுநகர் ஹிந்து நாடார் உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

* * *

" ஒவ்வொரு தனிமனிதனும், தனது கடமையைச் செய்யவும், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளவும் உரிய வாய்ப்பை அளிப்பது பஞ்சாயத்து நிறுவனமாகும்."

க. சுப்பிரமணியன்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
மண்ணச்சநல்லூர், திருச்சி மாவட்டம்.

* * *

"கிராம சமுதாயத்தில் மக்களின் பங்கு என்னவென்றுல், முதலில் மக்கள் அளவறிந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். 'செல்வம் வரும் வழி சிறிதாக இருந்தாலும் துன்பமில்லை; எப்போ தென்றுல் போகும் வழி பெரிதாகாத பொழுது' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழியை நினைவிற்கொள்ளவேண்டும்."

ஏ. அய்யாக்கண்ணு,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
மண்ணச்சநல்லூர்.

" பஞ்சாயத்து ஆட்சியில் மக்களுக்கு உரிமையும் கடமையும் ஒருசேரக் கிடைக்கின்றன. தங்கள் கிராமத்தின் தேவையையும், வசதியையும் ஆராய்ந்து, அதன் எதிர்கால வளர்ச்சிக்குத் திட்டமிட்டு உழைக்கும் வாய்ப்பு பஞ்சாயத்து ஆட்சியில் மக்களுக்குக் கிடைக்கிறது. பஞ்சாயத்து அமைப்பு உறுதியானதாகவும், மக்களுக்குப் பெரிதும் பயனுடையதாகவும் செயல்படுவதையொட்டியே நாட்டில் குடியாட்சி வெற்றி பெறும் "

ஆர். ஆனந்தன்,
முனிசிபல் ஹைஸ்கூல், சேலம்—1.

'லம்பாணி' கிராமம் முன்னேறிய கதை

நிங்கனஹல்லி ஒரு குக்கிராமம். இது மைசூர் மாநிலத்திலுள்ள பெல்லாரி மாவட்டத்தில் கோடலிகி தாலூகாவில் இருக்கிறது. இக் குக்கிராமம் பெல்லாரியிலிருந்து 32 மைல் தூரத்திலிருக்கிறது. அருகிலுள்ள இரயில்வே நிலயம் சாமஹல்லி. இந் நிலயம் கிராமத்திலிருந்து 15 மைல் தூரத்திலிருக்கிறது.

இக்கிராமத்தில் ஒரே ஒரு துவக்கப் பள்ளி தான் இருக்கிறது; ஆனால் அதுவும் சரிவர செயல்படுவதில்லை. வகுப்புகளை நடத்துவதற்கு வசதியான கட்டிடமே கிடையாது.

மக்கள் தொகை

116 பேர்களையே கொண்ட இக்கிராம வாசிகள் 'லம்பாணி' என்ற சாதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் மாரியம்மனை வணங்குகின்றனர். அனேகமாக எல்லா இந்து விழாக்களையும் கொண்டாட அவர்கள் தவறுவதில்லை. வட இந்திய மொழிகளின் பல்வேறு சொற்கள் கலந்த ஒருவகைமொழியையே அவர்கள் பேசி வந்தாலும், கன்னட மொழியிலும் அவர்களுக்கு தேர்ச்சியிருக்கிறது.

பெரிய நிலச் சுவான்தார்கள், லேவாதேவிக்காரர்களின் தயவிலேயே அனேகமாக எல்லா கிராம மக்களும் வாழ்ந்து வருகின்றனர். கல்வியறிவில்லா இம்மக்களை அவர்கள் சுலபமாக ஏமாற்றிவருகிறார்கள். இதன் காரணமாகவே வாழ்க்கையில் அவர்களுக்கு ஆர்வம் குன்றிப்போய்விட்டது என்றுகூட சொல்லலாம். தங்களுடைய எஜமானர்களின் நிலங்களைப் பயிர் செய்த பிறகுதான் தங்களுடைய நிலங்களில் அவர்கள் விவசாயம் செய்ய முடியும்.

கிராமத்தில் ஒற்றுமை உணர்ச்சி இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் நடைபெற்றுவரும் எவ்வித வளர்ச்சிப் பணிகளையும்பற்றி அவர்கள் அறிந்துகொண்டதாகவே தெரியவில்லை. வட்டார அலுவலர்களில் எவருமே அங்கு சென்றது கிடையாது.

வீட்டு வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. இரு குடும்பங்களுக்கு மட்டுமே நல்ல வீடுகள் இருக்கின்றன. புற்களினால் வேயப்பட்ட குடிசைகளிலேயே மற்ற குடும்பங்கள் வசித்து வருகின்றன. சுகாதாரத்திற்கும் சுற்றுப்புறத் துப்புரவிற்கும் அவர்கள் எவ்வித கவனமும் செலுத்துவதில்லை. கால் நடைகள் வீட்டிலேயே கட்டப்பட்டுள்ளன.

கடன் சுமை

கிராம வாசிகளுக்கு விவசாயந்தான் முக்கிய தொழில். ஆனால் விவசாயத்தின் வாயிலாகக் கிடைக்கும் வருவாயோ மிகவும் குறைவு. நீர்ப்பாசன வசதிகள் எதுவும் கிடையாது. மழையையே நம்பி விவசாயம் நடைபெற்று வருகிறது. பருவ மழை தவறிய காலங்களில் அவர்களுக்கு லேவாதேவிக்காரர்களே அடைக்கலம். பிறகு வட்டியைக்கூட செலுத்த இயலாத நிலை ஏற்படும்போது, எஞ்சியிருந்த நிலம்கூட, அவர்களுக்கு மிஞ்சுவதில்லை என்பதும் 'சர்வே'யிலிருந்து தெரிகிறது.

இந்த மலைவாழ் மக்களின் சமூக—பொருளாதார நிலையை உயர்த்த வேண்டுமாயின், அவர்களின், பழங்கால எண்ணங்கள், நம்பிக்கைகளை அகற்றி அவர்களுக்கு, புத்துணர்வூட்டுவது மிகவும் அவசியமாகிறது.

இந்த லம்பாணி மக்களெல்லாம், உள்ளூர் நிலச் சுவான்தார்களைதான் தெய்வம் என்று எண்ணியிருக்கின்றனர். அவர்களின் பொருளாதார நிலையில் ஒரு மறுமலர்ச்சியை உண்டு பண்ண முதலில் அவர்களை லேவாதேவிக்காரர்களின் பிடியிலிருந்து மீட்க வேண்டும். அரசாங்கம் அல்லது வேறு எந்த ஒரு நிறுவனமாவது முன் வந்து, அவர்களின் கடன் தொல்லையை நீக்கினால்தான் அவர்களுக்கு வாழ்க்கையில் ஆர்வம் ஏற்படும்.

கூட்டுறவு இயக்கத்தைத் துவங்கி அவர்களின் வாழ்க்கையை செம்மைபடுத்தலாம். கூட்டுறவு சங்கத்தை நிறுவி, எல்லோரும் ஒன்றுசேர்ந்து பணியாற்றி, அதன் வாயிலாக அரசாங்கத்திடமிருந்து அதிக நன்மைகளைப் பெறமுடியும். இக் காரியத்தை அவர்களே துவக்கத்தில் செய்ய முடியாது. பள்ளியிலுள்ளவர்கள்

(அடுத்த பக்கம் பார்க்க)

G.N.—4A

லம்பாணி கிராமம்—தொடர்ச்சி.

இதற்காக முன்வருதல் வேண்டும். அருகிலுள்ள 'சர்வோதய கிராமம்' இக் காரியத்தை மேற்கொள்ளலாம்.

சிறு தொழில்களுக்கு வாய்ப்பு

முதியோர் கல்வி நிலையம் ஒன்றைத் துவக்கி, முதியோர்கள் கல்வியறிவு பெற பணியாற்ற வேண்டும். உள்ளூரி லேயே கிடைக்கும் கச்சாப் பொருள் களைக்கொண்டு ஓரிரு சிறு தொழில்களை ஏற்படுத்தலாம். இதனால் வேலை வாய்ப்பு ஏற்படுவதுடன் கிராமவாசி களின் வருவாயும் உயர்வடையும்.

விவசாயத்தில் புதிய முறைகளைக் கையாண்டு விவசாயத்தைத் திருத்தி யமைக்க ஆவன செய்தல் அவசியம். கிணறுகளை வெட்டிப் பாசனத்திற்கு வழி செய்தல், உரம், கருவிகள் வழங்குதல் ஆகியவை வெகு துரித மாக நடைபெறவேண்டும்.

அம்பர் சர்க்காவில் நூற்றல், தேனீ வளர்த்தல், சுண்ணாம்பு உற்பத்தி செய்தல், மண்வளத்தைப் பயன் படுத்திக்கொள்ளுதல் போன்றவற் றிற்கு இங்கே நல்ல வாய்ப்புகளிரு பதால், அவற்றில் முதன்மை கவனம் செலுத்தலாம்.

வருவாய்க்கேற்றப்படி குழந்தைகளை ஈன்று, அவர்கள் நல்வாழ்வு வாழ வகை செய்யும் வகையில், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை இங்கே அமுல் செய்யவேண்டும்.

இக் கிராமத்தை யடுத்த கிராமம் ஒரு புதான காலனியாகும். 'சர்வோதய கிராமம்' என்பது அதன் பெயர். காந்தியின் வழியில் அது செயல்பட்டு, நன்றாக வளர்ச்சியடைந்துள்ளது. தர்மசிந்தனையுள்ள ஒருகுடும்பத்தால் நன்கொடையளிக்கப்பட்ட நிலத்தில் அமைந்துள்ள இக்காலனி, திரு வாசு தேவாச்சார் என்பவரின் அயராத, சுய நலமற்ற உழைப்பினால் நல்ல நிலையை யடைந்துள்ளது. இந்நிலம் ஒரு கூட் டுறவுப் பண்ணையாக மாற்றப்பட்டு, அங் குள்ள 14 குடும்பங்களும், ஒரே குடும்பம் போன்று வாழ்ந்துவருகிறது.

நினைவுச் சின்னம்

அந்த வீட்டின் முன்னுள்ள தோட் டத்திலே மூன்றாண்டுகளுக்கு முன்பு, ஓர் அழகான பையன் சுறுசுறுப்பாக விளையாடிக் கொண்டிருந்தான். அப் போது திடீரென்று மின்சாரத்தால் தாக்குண்டு, அங்கேயே கீழே விழுந்த அவன் பிறகு எழுந்திருக்கவேயில்லை.

அவனுடைய பெற்றோர்களுக்கு அவன் ஒரு செல்லப்பிள்ளை; பக்கத்து வீட்டுக்காரர்கள் அன்பிலே திளைத் திருந்தவன் அவன். அவனுடைய ஆசிரியருக்கு அவன் ஒரு சிறந்த மாணவன்; பள்ளித் தோழர்களுக்கு அவன் ஒரு இனிய தோழன் அவ னுடைய திடீர் மறைவு, பெற்றோர் களை துயரக் கடலில் ஆழ்த்தியது. அவனுடைய வருங்காலம் குறித்த பெற்றோர்கள் கண்ட கனவெல்லாம் மின் விசை தாக்கால் அப்படியே மறைந்தது.

மறைவை மறக்க முடியவில்லை

நாட்கள் பல சென்ற பிறகும் கூட, அவனுடைய மறைவை பெற்றோர்க ளால் மறக்க முடியவில்லை. இயற்கையின் செயலை எண்ணி வருந் திய அவர்கள், தங்கள் புதல்வனுக் கோர் அழகான, நிலையான பய னுள்ள நினைவுச்சின்னத்தை எழுப்பி அதன் உருவிலே தங்களின் மறைந்த மாணிக்கத்தை காண விரும்பினர்; அதற்கு ஏற்ற காலத்தை எதிர் நோக்கிய வண்ணம் பொறுமையுட னிருந்தனர்.

அந்த பையனின் பெயர், ஹேம ராஜ்; தந்தையின் பெயர் திரு சம்பு மால் தனராஜ். அவர் மைசூர் மாநிலத்திலுள்ள, ஷிமோகா மாவட் டத்தில் ஹிகாரிபூர் என்ற நகரத்தில் எல்லோருடைய நம்பிக்கைக்கும் உரித் தான ஒரு வியாபாரி.

தானே முன்வந்தார்..

அவ்வூரிலுள்ள துவக்கப்பள்ளிக்கு ஒரு கட்டிடம் வேண்டுமென்று, அப் பள்ளியின் கட்டிடக் குழு தீர்மானம் செய்திருந்தது. அப்பள்ளி மாணவர் களில், ஹேமராஜும் ஒருவன். எனவே, அப்பள்ளிக்கு தேவையான கட்டிடத்தை தாமே கட்டித் தந்து விட்டால், தன மகனுக்கு அதைவிட ஒரு சிறந்த நினைவுச் சின்னத்தை எழுப்ப முடியாது என்று முடிவிற்கு வந்தார், திரு சம்புலால்.

எனவே, அக் குழுவினருக்கு தன் னுடைய விருப்பத்தை தெரிவித்து ஆறு அறைகள் உள்ள ஒரு கட்டிடத்தை தன் புதல்வன் பெயரில் கட்டுதற்காக ரூ. 30,000 தருவதற்கு வாக்களித்தார்.

அதன் பேரில், கட்டிட வேலைகள் துவக்கப்பட்டன. சமீபத்தில் தான் மைசூர் மாநில துணை நிதி அமைச்சர் திரு அப்துல் கப்பார், அக்கட்டிடத் திற்கான அடிக்கல்லை நாட்டினார். "திரு சம்புமால் தன்ராஜ் ஹேமராஜ் துவக்கப்பள்ளிக்கட்டிடம்" என்று அது அழைக்கப்படவிருக்கிறது.

விழாவிற்கு வந்திருந்த எல்லோரும் திரு சம்புமால் அவர்களின் நல்லெண் ணம், தாராள மனப்பாங்கை போற் றினர். கூட்டத்தை நோக்கிய திரு சம்பு மாலின் கண்கள் கண்ணீரை வடித் தன. ஒருவேளை அக்கண்ணீர் தன் புதல்வனின் நினைவு குறித்தோ, அல்லது அவர் முன் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கண்டோ இருக்கலாம்

—o—

பிற மாநிலங்களில்......

மிதக்கும் கால்நடை மருந்தகம்

கேரளத்திலுள்ள ஆலப்புழை மாவட்டத்தின் தோற்றம் எழில் வடிவானது. கிழக்கிலே மலைச் சரிவுகள்; அதனூடே எந்நாளும் பெருகியோடும் நதிகளெல்லாம் 'குட்ட நாட்' என்ற இடத்திலே கலந்து, பரந்த வெள்ளக் காடாக காட்சி தருவது பார்ப்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வன.

விதியின் கையிலே கால்நடைகள்

நாற்புரமும் நீராலேயே சூழப்பட்டு, தொலைவிலுள்ள இடங்களை எளிதில் அடைய முடியாத நிலையில் இங்குள்ள நில அமைப்புக்களிருப்பதால், கால்நடை மருத்துவமும், செயற்கையாக கருத்தரிக்க செய்யும் பணிகளும் செய்வதற்கு அனேக இடையூறுகள் இருந்தன. இவற்றின் காரணமாக கால்நடைகளெல்லாம், நாட்டு வைத்தியர்களின் 'தயவிலே'. அவர்களின் கவனத்திலேயே விடப்பட்டிருந்தன. தொலைவிலுள்ள ஆலப்புழை நகரத்திற்கு கால்நடைகளை கொண்டு சென்று வைத்தியம் செய்வதில் அனேக இடையூறுகள் இருந்ததால், அவையெல்லாம் 'விதி' யின் கையிலே ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இவற்றையெல்லாம் உணர்ந்த அதிகாரிகள், 'மிதக்கும் கால் நடை மருந்தகம்' ஒன்றை துவக்கினர். இம்மருந்தகத்தை விசைப்படகில் அமைத்தனர். இந்த மிதக்கும் கால் நடை மருந்தகத்தில், கால்நடை வைத்திய அதிகாரி ஒருவர், கால் நடை பராமரிப்பு உதவியாளர் ஒருவர், மேற்கொண்டு மற்றொரு உதவியாளர், மற்றும் அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்த படகில் முதலுதவிக் கருவிகள், ஊசி மருந்துகள், தடுப்பு ஊசி மருந்துகள் போன்றவை இருக்கின்றன. இவை தவிர செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதற்காக உயர்ந்த ரக வித்துவும் வைக்கப்பட்டுள்ளது.

கால் நடைகள், கோழிப்பண்ணைகளிடையே பரவும் தொத்துவியாதிகளை தடுத்து, ஒழிப்பதற்காக முதல் கவனம் செலுத்தப்படுகிறது. அதற்காக எல்லா விதமான நடவடிக்கைகளும் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன. தடுப்பு ஊசிகள் குத்துவதற்காக ஓர் இடத்திற்கு இந்த மிதக்கும் கால்நடை மருந்தகம் சென்றால், அதிலுள்ள மருத்துவ அதிகாரி, உள்ளூர் கால் நடை மருத்துவ வளர்ச்சி அதிகாரியின் துணைக் கொண்டு மருத்துவப் பணிகளில் ஈடுபடுகிறார்.

வெளியிடங்களுக்குச் சென்று செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வதற்கு, ஐந்து மைல்களுக்குள்ளிருந்தால், ரூ. 3 வசூலிக்கப்படுகிறது.

ஆலப்புழை மாவட்ட மக்களுக்கு இந்த 'மிதக்கும் கால் நடை மருந்தகம்' ஒரு வரப்பிரசாதமாகும்.

ஐ ஐ ஐ

ஆசிரியரின் விவசாய ஆர்வம்

இது நடந்தது 1945-ம் ஆண்டு; அந்த ஆசிரியருக்கு அவருடைய அமைதியான வாழ்க்கையிலே சலிப் பேற்பட்டுவிட்டது. ஏதாவது ஒரு புதிய துறையில் தன் ஆர்வத்தை செலுத்தி செயல்பட துடியாய் துடித்தார் அவர். அதற்கேற்றாற்போல், அவருடைய பள்ளியின் கரும்புத் தோட்டத்திற்கு அவரே பொறுப்புள்ளவராக ஆக்கப்பட்டார்;

கரும்பு செழித்து வளர்ந்தது, அறுவடை செய்யப்பட்டு சாறு பிழியப்பட்டது.

பள்ளிக் குழந்தைகளுக்கு கரும்புச் சாறு மிகவும் இனிப்பாயிருந்தது. அதே சமயம் ஆசிரியருக்கோ அது ஒரு தூண்டுதலாக இருந்தது. குழந்தைகளுக்கு கரும்புச் சாற்றை மேலும் மேலும் பருகவேண்டும் என்ற ஆவல் மிகுதியாயிற்று. அதே நேரத்தில் ஆசிரியருக்கோ, கரும்பு சாகுபடி செய்யவேண்டும் என்ற ஆர்வம் உள்ளத்தில் வெள்ளமாகப் பெருகியது.

இரண்டே ஏக்கர் நிலத்தில் விளைந்த கரும்பினால் பனைவெல்லம் தயார் செய்து விற்றதில் பள்ளிக்கு கிடைத்த தொகை ரூ. 2,000. இதைக் கண்ணுற்ற ஆசிரியர் திரு ஹிராலால் தேஷ்பாரி விவசாயத்தில் ஈடுபட வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்.

அருமையான, அமைதியான ஆசிரியர் பணியைத் துறந்து, அதே ஆண்டில் மத்தியப் பிரதேசத்திலுள்ள தன்னுடைய கிராமத்திற்கு சென்றுவிட்டார். அங்கே அரை ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்ததில் அவருக்கு கிடைத்த லாபம் ரூ. 1,000. ஆண்டுதோறும் அவருடைய வருமானம் பெருகியதனால் 1955-ம் ஆண்டு, 100 ஏக்கர் நிலத்தை அவர் வாங்கிவிட்டார். இதில் 30 ஏக்கர் நிலம் நதிக்கு அருகாமையிலேயே இருக்கிறது.

திரு ஹிராலால் 'டிராக்டர்' வாங்கிவிட்டார். இப்போது பண்ணையில் அவர் கரும்பு கோதுமை, நெல் பயிரிடுகிறார்.

“வரப்புயர வாழ்வுயரும்”



[திரு A. கோவிந்தசாமி, விவசாய அமைச்சர்]

உற்பத்திப் பெருக்கால் உலகூட்டும் உழவர் பெரு மக்களே, உங்கள் வானொலி மன்ற நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இப்புனித தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ‘‘வரப்புயர” என்று வாழ்த்திய தமிழ் மூதாட்டியின் வழியில் உங்கள் வளம் செழிக்க, நலம் ஓங்குக என்று வாழ்த்துகிறேன்.

தொழில்களிலெல்லாம் சிறந்தது உழவுத் தொழில் என்று வள்ளுவரும் ஏனைய புலவர்களும் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள். ‘‘மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” எனவும் ‘உலகுய்யப் பிறந்தவர்கள் உழவர்களே” எனவும் உங்களை உயிர் கொடுக்கும் இறைவனுக்கு இணையாகப் போற்றியுள்ளார்கள்.

‘‘வேத நூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லாரும் உழுவார்தந் தலைக்கடைக்கே”

என்று கவிச் சக்ரவர்த்தி கம்பரும் ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னரே உழவர்களின் உயர்வை உணர்த்திக் காட்டியிருக்கின்றார்.

நம்பிக்கையூட்டும் நிலை

நமது நாடு விவசாய நாடு. மக்கள் தொகையில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். அப்படி இருந்த போதிலும், இன்று நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ‘‘உணவு போதவில்லை”, ‘‘தானியங்கள் சரிவரக் கிடைக்கவில்லை”, ‘‘விலைவாசிகள் உயர உயரத் தாவிச் சென்றுகொண்டிருக்கின்றன” என்ற குரல்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன.

உழவுத் தொழில் செய்வோர் பிறரிடம் யாசிக்காது ‘‘இரப் பார்க்கு கரவாது ஈவார்” என்ற திருவள்ளுவர் கூறிய நிலை மாறிவிட்டது. பிற நாடுகளின் உணவுப் பண்ட உதவியை எதிர்நோக்கும் நிலையை அடைந்துள்ளோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், உணவு உற்பத்தி நம்பிக்கையூட்டுவதாகவே இருக்கின்றது. இதற்கு உங்கள் ஊக்கமும் உழைப்புமே முக்கிய காரணங்கள். இதற்காக உங்களைப் பாராட்டுகின்றேன்.

சென்ற ஆண்டின் தொடக்கத்தில் போதிய மழை இல்லாமற் போய்விட்டது. அதனால் அணைக்கட்டுகளிலும் நீர்த் தேக்கங்களிலும் நீர்மட்ட அளவு குறைந்து, பயிர் ஏற்ற முடியுமோ என்ற சந்தேகம் இருந்தது. ஆனால், சில மாதங்களில் இந்த நிலை அடியோடு மாறி பல புயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து பயிர்களையும் பல்லாண்டு காலம் பலன் தந்த மரங்களையும் சீரழித்துவிட்டது. வீடூர் நீர்த்தேக்கம் உட்பட பல ஏரிகளும் உடைந்துவிட்டன என்ற போதிலும் இதர நீர் நிலையங்களில் நீர்மட்டம் உயர்ந்து விட்டதால், சம்பா பட்ட மகசூல் திருப்தியாக இருந்ததோடு, அடுத்த நவரைப் பயிரும் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் செய்ய முடிந்தது. பல இன்னல்களைத் திரமுடன் சகித்து விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆர்வத்துடன் உழைத்த உங்களைப் பெரிதும் போற்றுகின்றேன்.

முதலாம் ஐந்தாண்டு திட்டத்திற்கு முன்

> [இன்று நாட்டின் முன்னுள்ள பிரச்னைகளில் தலையாயப் பிரச்னை உணவு பிரச்னையாகும். ‘‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்” என்கிறார் மக்கள் கவி பாரதி. ‘‘மக்களுக்கு வயிறாரச் சோறிடவேண்டும்—அதுவும் குறைந்த விலையில் உணவுத் தானியங்களை வழங்கவேண்டும்” என்ற லட்சியத்தை முன்நிறுத்தி, உணவு உற்பத்தித் துறையில் தன்னிறைவு காண்பதற்கான வழிமுறைகளையெல்லாம் தீட்டி, விரைவாகச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு. இக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் விவசாயப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பும்-உழைப்பும் அடிப் படைகளாகத் திகழ்கின்றன; இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வானொலிப் பேச்சின் சுருக்கத்தில், விவசாய அமைச்சர் இக்கருத்தை வலிவாகவும் தெளிவாகவும் வற்புறுத்தியுள்ளார்.
>
> —ஆசிரியர்.

தமிழ் நாட்டில் முப்பது லட்சம் டன்களாக இருந்த உணவுத் தானிய உற்பத்தி மூன்றும் திட்ட இறுதியில் இரண்டு மடங்காகப் பெருகி இருப்பதாகப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. இந்த தகவல்கள் மட்டும் மக்களுக்குத் திருப்தி தராது. அவர்களுக்கு வேண்டியது உணவு. இதை போதிய அளவு உற்பத்தி செய்து வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம்.

விளைவைத் தீவிரமாகப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவைகளில் அமோக விளைச்சல் ரகத்திட்டம், அதாவது (High Yielding Varieties Programme) மிகவும் முக்கியமானது. இந்த திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு வேண்டிய விதை, உரம், பூச்சி மருந்துகள், சாகுபடி செலவுக்குப் பணம் யாவும் கடனாக கொடுக்கப்படுகிறது.

உழுபடை வீரர்களின் அரும்பணி

தமிழ்நாட்டின் பெருமையாக, பசிப்பிணி தீர்க்கும் அட்சயப் பாத்திரமாக, ஆடுதுறை—27 நெல் விளங்கி வருவது கண்டு நாம் பெருமிதம் அடைகிறோம். ஏறக்குறைய தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அமோக விளைச்சல் கொடுத்துள்ள இந்த நெல் 105 நாட்களிலேயே அறுவடைக்கு வருவது நம் அதிர்ஷ்டமே. தீவிர சாகுபடி மாவட்டமாகிய தஞ்சையும் இதர மாவட்டங்களும் சென்ற ஆண்டு வரட்சியாலும் புயலாலும் பெருமழையாலும் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நெல் இதர ரகங்களைவிட 50 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் கொடுத்திருக்கிறது. இரண்டே ஆண்டுகளில் 4 லட்சம் ஏக்கர் அளவுக்கு பரவியிருக்கிறது என்றால் பல மணவகைகளிலும் தட்பவெப்ப நிலைகளிலும் இந்த நெல் அதிக விளைச்சல் கொடுக்கக்கூடியது என்பதையே காட்டுகிறது. பல இடங்களில் ஏக்கருக்கு மூன்று டன்னுக்கு அதிகமாகவும், பழனியிலும் கோபிச்செட்டிப்பாளையத்திலும் 4 டன்களுக்கு அதிகமாகவும் மகசூல் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. அரிசியும் கூட நல்ல தரமுள்ளதாகவே இருக்கிறது. இந்த ஆண்டு, ஆடுதுறை 27 நெல்லை இன்னும் அதிக நிலப்பரப்பில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. தஞ்சையில் மட்டும் 9 லட்சம் ஏக்கரில் இந்த நெல் பயிரிடப்படும்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதன் முறையாக தஞ்சை மாவட்டத்தில் ஆறுலட்ச ஒருபோக சம்பா நிலங்களை இரு போகமாக மாற்றப்படும். குறுவையில் 3 லட்சம் ஏக்கரும் சம்பா வயல்களில் முதல் போகமாக 6 லட்ச ஏக்கரிலும் அமோக விளைச்சல் தரும் ஆடுதுறை—27 நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் இந்த நெல் இரண்டரை லட்சம் ஏக்கர்களில் பயிரிடப்படும். அரிசி உற்பத்தியைத் தீவிரமாக அதிகரிக்க இதுதான் சிறந்த வழி என்று நான் கருதுகிறேன். இதற்குத் தேவையான விதையும், உரமும், பூச்சி மருந்துகளும் வழங்க எல்லா ஏற்பாடுகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேட்டூர் தேக்க நீர் மட்டமும் நம்பிக்கை யூட்டுவதாகவே இருக்கிறது.

நாங்கள் பற்பல பயனுள்ள திட்டங்கள் போடலாம். ஆனால் அவற்றை வெற்றி பெறச்செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. ஆறுலட்ச ஒரு போக சம்பா வயல்களை இரண்டு போகமாக மாற்றினால் தா நம் உணவுப் பிரச்சினை தீரும் என்றால் அதை செயல்படுத்தக் கூடியவர்கள் உழுபடை வீரர்களாகிய நீங்கள்தான்.

பாசன வசதி பெருகினால்தான், பயிர்கள் நல்ல பலனைத் தரும். பெரிய அணைகளை புதிதாகக் கட்ட தமிழ்நாட்டில் அதிக வாய்ப்பில்லை. ஆகவே பூமிக்கடியிலுள்ள தண்ணீரை வெளிக்கொணர்ந்து, விவசாயத்திற்குப் பயன்பட கிணறுகளும், குழாய்க் கிணறுகளும், பம்புசெட்டுகளும் அமைக்க வேண்டும்; இதை நீர்ப்பாசன திட்டங்களுக்கு வழிவகை செய்ய அண்மையில் டெல்லியில் கூடிய உணவு மாநாட்டில், தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி கூறியுள்ளார்.

விவசாய வளர்ச்சியின் அறிகுறி

"ஏரினும் நன்றாம் எருவிடுதல்" என்பது திருவள்ளுவர் வாக்கு. ரசாயன எருக்கள் சரிவரக் கிடைக்கவில்லை; போதிய அளவு கிடைக்கவில்லை என்பதுதான் பல இடங்களிலிருந்தும் வரும் புகார். இதை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். ஒரு காலத்தில் ரசாயன எருக்கள் வேண்டாம் என்று சொன்ன விவசாயிகளே இப்போது உரம் கிடைக்கவில்லை என்று குரல் எழுப்புகிறார்கள். இது நம்முடைய விவசாய முன்னேற்றத்தின் அறிகுறி என்றுதான் நான் கருதுகிறேன். இரசாயன உரங்கள் மத்திய அரசாங்கத்தால் தான் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆகவே தேவையான ரசாயன உரம் வழங்க வேண்டுமென மத்திய உணவு, விவசாய அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களிடம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். இவற்றில் உள்ள குறைபாடுகளும் பரிசீலிக்கப்பட்டு நீக்கப்பட ஆவன செய்யப்படுமென்பதை உங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

பிரெஞ்சு நாட்டு ஒலி-உருவத்-தொலைக்காட்சி குழுவினர் வருகை

மக்கள் கருத்தறிந்ததோடு கிராம வளர்ச்சித் திட்டங்களைப் பாராட்டினர்.

நமது கிராம வளர்ச்சி பணிகள் உலக அறிஞரின் கருத்தைக் கவர்ந்துள்ளன. அண்மையில் பிரெஞ்சு நாட்டிலிருந்து இங்கே வந்த ஒலி-உருவத்-தொலைக்காட்சி குழுவினர், தமிழ் நாட்டிலுள்ள சமுதாய வளர்ச்சித் திட்டங்களை, செங்கல்பட்டு மாவட்டத்தில் படப்பை, பூவிருந்த வல்லி ஆகிய வட்டாரங்களில் நேரில் கண்டு, கிராம வளர்ச்சித் திட்டங்களை விளக்கும் காட்சிகளையும் கருத்துக் களையும் படம் பிடித்தனர். குறிப்பாக, மின்சாரம் வாயிலாக பாசன வசதி பெறுவதையும், குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதையும பாராட்டினர். அதே சமயத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைத் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் மற்ற கிராம மக்களையும் கண்டு அளவளாவியதில் அனுபவம் மிக்க புதிய கருத்துக்களையும் பெற்றனர். குழாய்க் கிணறுகள் மூலம் (Bore Wells) மேலும் பாசன வசதியை அடையலாம் என்றும், ரசாயன உர விநியோகம் சீராகவும் விரைவாகவும் விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் திரு T. ராஜரத்தினம் M.L.A., பேட்டியின் போது கூறினர்.

முதலமைச்சர் அவர்கள் 3-6-67 இரவு 8-30 மணிக்கு, பிரெஞ்சு நாட்டு குழுவினருக்கு அளித்த சிறப்புப் பேட்டி ஒன்றில், தமிழக அரசின் மொழிக் கொள்கையை விளக்கிய தோடு,மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான கருத்துக்களை, சுருக்கமாகவும், தெளிவாகவும் விளக்கினர்.

(அமைச்சர் திரு முத்துசாமி அவர்களுடன் நிகழ்த்திய பேட்டியின் முழு விவரம் 1—2-ம் பக்கங்களில் காணலாம்).

"வரப்புயர வாழ்வுயரும்"—

முன் பக்கத் தொடர்ச்சி.

விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாயி களுக்கு எந்தவித உதவி தேவையோ, அவைகளை அளிக்க எப்போதுமே அரசாங்கம் தயாராக இருக்கும். இந்த விதத்தில் உங்களுடைய நியாயமான கோரிக்கை களையும் ஆலோசனைகளையும், கவனிக்கத் தயங்காது.

ஆனல் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எண்ணற்ற சலுகைகள் எட்டிலிருந்தால் மட்டும் போதுமா? அவற்றை நீங்கள் பயன்படுத்திக்கொண்டு உணவு உற்பத்தியை தீவிரமாக அதிகப்படுத்த எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டாமா? "இலமென்று அசைஇ இருப் பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்", "பார்க் காத பயிரும் கேட்காத கடனும் பாழ்" என்பது பழ மொழி. விவசாயத்தில் சோம்பலுக்கு இடம் தரமுடி யாது.

"வித்தும் ஏரும் உணவாயிருப்ப
எய்த்தங்கிருக்கும் ஏழையும் பதரே"

என்று குறுந்தொகையும் திருக்குறளும் நமது கடமை யைச் சற்று வன்மையாகவே வலியுறுத்துகின்றன.

தமிழகத்தின் மரபு

"தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் செகத்தினை அழித்திடுவோம்" என்று அறை கூவினர் அமரகவி பாரதி. அடுத்தவன் பசித்திருக்க உண்பது நம் தமிழ் நாட்டு மரபு அல்ல. நகரங்களில் ஆலைகளிலும் அலு வலகங்களிலும் பணியாற்றும் உங்கள் சகோதரர்களுக்கும் நீங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பண்டங்களைப் பகிர்ந் தளிக்க வேண்டும். உணவு தானிய உற்பத்திக்காக அர சாங்கம் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ளும். உழவர்களாகிய நீங்களும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நெல்லை உவகையுடன் அளித்து நாட்டுக்குச் சிறந்த தொண்டாற்றும் படி உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

—விவசாய அமைச்சர்.

—0—

பிரெஞ்சு நாட்டு ஒலி—உருவத் தொலைக்காட்சி (Television) குழுவினரிடம், 2—6—1967 அ
பூவிருந்தவல்லியில், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு டி. ராஜரத்தினம் அவ
ஊராட்சி வளர்ச்சிப் பணிகள் பற்றி பேட்டி அளித்தார். ஐரோப்பிய நாடுகளில் இது வெளியிடப்ப(

கிராம வளர்ச்சிப் பணிகளில் உலக நாடுகள் கவனம்.

அமைச்சர்களோடு யட்டுமின்றி, கிராம மக்களுடனும் தொடர்பு கொண்டு, கருத்துக்களைச் சேகரிக்கின்றனர், அயல் நாட்டு நிருபர்கள்.
(விவரம் 20-ம் பக்கம் காண்க.)



படம்—1 : சென்னை வந்திருந்த மத்திய அரசு செய்தி, ஒலிபரப்பு அமைச்சர் திரு கே. கே. ஷா, முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர்

படம்—2 : உதகையில் உள்ள தையல் பயிற்சி நிலையத்தை 17—5—1967-ல் தமிழக அரசு அரிஜன நல, செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பார்வையிட்டார். படத்தில் தோடர் பெண் ஒருத்தி, அமைச்சருக்குச் சால்வை ஒன்றை அன்பளிப்பாகத் தருகிருர்.

படம்—3 : அனைத்து நாட்டு உல்லாசப் பயணிகள் வாரக் கொண்டாட்டத்தையொட்டி, உதகையில் நடைபெற்ற படகுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலமைச்சரின் துணைவியார் திருமதி ராணி அண்ணுதுரை அவர்கள் பரிசு வழங்கினர்.



படம்–1 : தமிழக அரசு அச்சக ஊழியர்கள் கூட்டுறவு பாங்கு சார்பில், முதலமைச்சர் நிதிக்கு ரூ. 2.501 நன்கொடை வழங்கப்பட்டது. (விளக்கம் 10-ம் பக்கம்.)

படம்—2 : பதவியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் 15—5—1967 அன்று, சென்னை வந்து சேர்ந்தபோது, சென்டிரல் ரயில் நிலையத்தில் வரவேற்பு—திரு என். வி. நடராஜன், M.L.C., தலைமை உயர்நீதிபதி அளவளாவல்.

படம்—3 : மத்திய அரசு நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ், அண்மையில் சென்னை வந்திருந்தபோது அவருடன் பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணுநிதி நீர்ப்பாசன திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

விழுப்புரத்தில் 3—6—67 அன்று தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு T. V. வாசுதேவன் ஐ.ஏ.எஸ்., முன்னிலையில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில், உழவர் ஒருவர் கூறும் கருத்துக்களை அமைச்சர்கள் அமைதியுடன் கேட்டறிகின்றனர்.

விவசாயிகளின் குறைகள், கோரிக்கை பற்றிய விண்ணப்பத்தை, முதியவர் ஒருவர், விவசாய அமைச்சர் திரு. A. கோவிந்தசாமி அவர்களிடம் தருகிறார்.

சென்னை வந்திருந்த சோவியத் திரைப் படக் குழுவினருக்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் வரவேற்பு.

உணவுத் துறையில் ஒரு திருப்புமுனை

6-ம் பக்கத் தொடர்ச்சி.

பெரும் சங்கடத்தைத் தந்து வந்தது. பெரிய, சிறிய நகரங்களில் உள்ள ஓட்டல்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் இந்த அரசுக்கு முறையீடுகள் பல வந்தன. எனவே இந்த மாநிலத்தில், ஓட்டல்களில் திங்கள், வியாழக் கிழமைகளில் மாலை 5 மணிக்கு மேல் சாப்பாடு போடக் கூடாது என்றிருந்த கட்டுப்பாட்டை அகற்றி இந்த அரசு ஆணை பிறப்பித்தது.

போலி ரேஷன் கார்டுகள்

சட்ட பூர்வ பங்கீட்டு முறையும், குடும்பக் கார்டுகள் அடிப்படையில் சாதாரண பங்கீட்டு முறையும் அமுலில் உள்ள பகுதிகளில் போலி ரேஷன் கார்டுகளும் போலி குடும்பக் கார்டுகளும் பெருத்த அளவில் புழக்கத்தில் இருப்பதாக, இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. கள்ள மார்க்கெட்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும், உணவு தானியங்கள் கணிசமான அளவுக்குத் திருப்பிவிடப்பட்ட காரணமாக இந்த போலி கார்டுகள் உபயோகத்திற்கு, ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், சோதனைகளை நடத்தும்படி சிவில் சப்ளை இலாகாவின் சோதனைப் பிரிவுக்குப் பணிக்கப்பட்டது. இத்தகைய போலி கார்டுகள், மாநிலம் முழுவதும் பெருத்த அளவில் இருப்பது கண்டறியப்பட்டு, பல கார்டுகள் கைப்பற்றி அகற்றப்பட்டன. சென்னை நகரில் மட்டும் 36,173 கார்டுகள் சோதனையிடப்பட்டு இதுவரை 3,266 போலி கார்டுகள் ரத்து செய்யப்பட்டன. நகரில் இந்த போலி கார்டுகள் ஒழிப்புக்கான முயற்சியை தீவிரப் படுத்த, மேலும் களப்பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டது.

(அடுத்த பக்கத்தில் முடிவுறும்)

மத்திய பிரதேச மாநிலத்தில், தமிழக அரசின் செயல் விளக்கம்

முதலமைச்சரின் சிறப்பு ஆலோசகர் கருத்துரை :

தமிழக முதலமைச்சரின் சிறப்பு ஆலோசகர் திரு நல். முருகேச முதலியார் அவர்கள், மத்திய பிரதேசத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறையை நேரில் கண்டுவர சென்ற மே மாதம் சென்றிருந்தார். அப்போது, அம்மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சிக்கென உள்ள அமைப்பு முறை, தமிழகத்திலுள்ளதற்கு சில வகையில் மாறுபட்டிருக்கிறது என்பதை அறிந்தார். சமுதாய வளர்ச்சி நிறுவனம், அதன் சாதனைகள் ஆகியவை பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டிய நேரம் வந்துள்ளது என்பதையும், அவர் குறிப்பிட்டார். "மத்தியப் பிரதேச நாளிதழ்" ("Madhya Pradesh Chronicle") என்ற தினத்தாளில், அம்மாநிலத்தின் தலைநகரான போபாலிலே, 21-5-1967-ல் அளித்த பேட்டியின் சுருக்கம் வருமாறு :—

"வளர்ச்சிப் பணிகளுக்காக ஏற்கெனவே உள்ள துறைகள், புதிய சமுதாய வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிட முடியாது என்றாலும், அவை கிராமப் பகுதிகளில் உறபத்தித் திறனையும், செல்வ வளத்தையும் பெருக்கும் பணியில் பெரிதும் தவறிவிட்டன என்பது வெள்ளிடைமலை" என்றார், திரு முருகேச முதலியார். அவர் மேலும் கூறியதாவது :—

"உற்பத்தியைப் பெருக்கியும், இதர துணை நடவடிக்கைகளை எடுத்தும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாமல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதென்பது, கானல் நீர் போன்றதாகவே இருக்கும். தமிழ்நாட்டில் இரண்டாவது ரக அரிசி விலையை, அரசாங்க உதவி மானியத்தின் மூலம் குறைக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மற்ற பல பொருள்களின் விலையும் குறைந்தாக வேண்டும். எனவே, விலைகளைக் குறைப்பதற்கு வழிகோலும் ஒரு துணிவான, நேர்மையான முயற்சியே இந்தப் புதிய நடவடிக்கையாகும். மத்திய அரசு விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், மக்களின் வாங்கும் சக்தி வீழ்ந்து வருவதை தடுக்கவும், உறுதியான நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். இல்லையேல் மாநில அரசுக்கு நிதி உதவி செய்யவேண்டும்; அல்லது குறைந்த பட்சம் மாநில அரசு செலுத்தவேண்டிய கடன், வட்டி ஆகியவற்றைக் கொஞ்ச காலத்திற்குச் செலுத்தாமலிருக்க அனுமதி வழங்கவேண்டும். மாநில அரசுகள் மக்களின் தேவைகளையும், அவர்களது உள்ளக்கிடக்கைகளையும் அறியும். எனவே, மத்திய அரசு கூடுமான அளவு, உதவியை அளிக்க வேண்டுமே அல்லாது, கொள்கைப் பிடிவாதப் போக்கை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்வது, உதவியாக இராது. உரிய பயன்கள் விளைவதற்குப் பாதகமாகவே அமையும்.

மாநில அரசு, உள்ளாட்சி என்ற பல வட்டங்களிலும், அதிகாரப் பரவல் முறையும், பணிகள் உருவாக்கமும், தன் முயற்சியும் இருந்தாலன்றி, மக்களாட்சி அதிகார முறை என்பது, பயனற்றதாக ஆகிவிடும். சுதந்திரமாக இயங்க வசதி இல்லாமல், அதிகாரங்களைக் கூறுபோட்டுக் கொள்வது, வளர்ச்சிக்கு உறுதுணையாக இராது. அத்தகைய நிலையில் வளர்ச்சி என்பது மேலிருந்து திணிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கும்; அது முழுப்பயன் அளிக்காது."

இறுதியாக, ஆனல் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது, சட்டபூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில் ஆரம்பித்து, ரூபாய்க்கு ஒரு பட்டணம் படி என்ற விலையில் அரிசியை விற்பது என எடுக்கப்பட்டுள்ள முடிவு. இத் திட்டம், படிப்படியான கட்டங்களைக் கொண்ட ஒரு திட்டமாக நிறைவேற்றப்படும். அது சட்ட பூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள சென்னை, கோவை நகரங்களில் 15-5-1967 முதல் அமுலுக்கு வரும். இதனல் இப்போது 31 லட்சம் மக்கள் பலனடைவர். அடுத்து நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் (Belt areas) பின்னர் சில காலம் கழித்து, மாநிலத்தில் சாதாரண பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளுக்கும் திட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு 123 லட்சம் மக்கள் பயனடைய வகை செய்யப்படும்.

ரூபாய்க்கு ஒரு படி அரிசி

இப்போது கிலோ ஒன்றுக்கு 77 காசு வீதம் விற்கப்படுவதும், இரண்டாவது ரகம் என வழங்கப்படுவதுமான நடுத்தர மோட்டா அரிசி ரகங்கள், மே 15-ந் தேதிமுதல் சட்டப் பூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில், குடும்ப உபயோகத்திற்காக அரிசி வாங்கும் அனைவருக்கும் கிலோ 66 காசு வீதம் விற்கப்படும். உயர்ந்த ரக அரிசி விலையில் அதிகரிப்பு எதுவும் இராது. நகர மக்களில் உயர்ந்த ரக பச்சரிசி வேண்டுபவர்களுக்காக ஆந்திராவிலிருந்து நெல்லூர் பச்சரிசி கொண்டு வரப்படுகிறது. இந்த அரிசி சென்னை நகரில் ஏற்கனவே 8-5-1967 முதல் வழங்கப்பட்டு வருகிறது. சட்டபூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில் சுமார் 1·52 லட்சம் டன் அரிசிக்கு உதவி மானியம் வழங்க வேண்டியிருக்கும். இதனல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 186 லட்சம் செலவாகும்.

வேறு வகையில் உணவு தானியங்களைப் பெற வழியில்லாதவர்களும், ஏழை எளியவர்களுமான மக்களுக்கு ஒரு நியாயமான அளவு அரிசியை நியாயமான விலையில் தொடர்ந்து வழங்கி வருவதற்கும், இது போன்ற இப்போதைய தேவைகளை நிறைவேற்றி வரவும் போதுமான கையிருப்பைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் ஈடேற, இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் துணைபுரியும் என்று இந்த அரசு ஆழ்ந்த நம்பிக்கை கொள்கிறது. பதுக்கப்பட்டுள்ள உணவு தானிய இருப்புகளை வெளிக் கொணரவும், மாநிலத்திற்கு உள்ளும், வெளியேயும், நெல்,அரிசி கடத்தப்படுவதைத் தடுக்கவும் அரசாங்கத்திற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அரசு வேண்டுகோள் விடுக்கிறது. சட்டபூர்வ பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குறிப்பாக இன்னெரு வேண்டுகோள் என்னவென்ருல், அவர்கள் தங்கள் பங்கீட்டு அட்டைகளை அவ்வப்போது சரிபார்த்து, அட்டையில் குறிப்பிட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டால், அது பற்றி தாங்களாகவே பங்கீட்டு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, அதற்கேற்ப, தங்கள் தேவைகளின் அளவை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

சந்தர்ப்பம் எதுவாயினும், ஆடம்பரமான அளவில் உணவு உபயோகத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதில், முக்கியமாக, மக்கள் ஒத்துழைப்பை அரசு நாடுகிறது. ஏனெனில், இதில் எல்லாம் எத்தகைய சட்டம் செய்யினும் பயன் விளையாது என்பதையும், ஆனல் ' நம்மைப் போன்றே உணவு தேவையுள்ள மற்றபலர் இருக்கிருர்கள்' என்பதை எண்ணி, இந்த இக்கட்டான நேரத்தில் அரிசியைச் சேமிக்கும் முயற்சியில் நம்மாலானதைச் செய்ய வேண்டும் என்ற உணர்வினல் உந்தப்பட்டு ஒவ்வொருவரும் சுயகட்டுப்பாடுடன் நடந்துகொள்வது தான் பயன் விளைக்கும் என்பதையும் அரசு அறிந்திருக்கிறது.

திருப்பு முனை

இறுதியாக, இந்த மாநிலத்தின் உணவுத் துறை நிர்வாக வரலாற்றில், இந்த நாள் ஒரு திருப்பு முனையாக அமைய வேண்டும் என்று நான் விழைகிறேன். எதிர்காலத்திலும் நினைவு கூறத் தக்க இந்த நன்னுளிலே, நமது அன்புக்குரிய முதலமைச்சர் அண்ணு அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது திறன் மிக்க வழிகாட்டுதல், தீர்க்க தரிசனம், ஊக்குவிப்பு, துணிவுடன் செயலாற்றும் திறன்,மற்றும் தமிழ் பெருமக்களில் ஏழை எளியவர்களுக்காக அவர் காட்டும் அக்கறை ஆகிய இவற்ருல்தான், புதிய அரசு பொறுப்பெற்ற 70 நாட்களுக்குள், ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் திட்டத்தை இன்று உணவுத்துறை செயல்படுத்துவது சாத்தியமாயிற்று. இந்த நடவடிக்கைகளின் பலனுக, நாம் எதிர்பாக்கிறபடி, வியாபாரத் துறையில் அரிசி விலைகள் குறையும் என்றும், உணவு சம்பந்தமாக உள்ள சங்கடமான கட்டுப்பாடுகளை எல்லாம், காலப்போக்கில் அரசு நீக்கத் தக்க முறையில், கணிசமான உணவு கையிருப்புகளைச் சேகரிக்க முடியும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

(மாண்புமிகு உணவு அமைச்சர் திரு K. A. மதியழகன் அவர்களின் சிறப்புக் கட்டுரை.)

சர்க்கரை வியாதிக்கு ஒரு கிராம சஞ்சீவி

திரு ஆர். குமாரசுவாமி, எம். எஸ்ஸி,
விஞ்ஞான மந்திர் அதிகாரி, ஆரியாக்கவுண்டன்பட்டி
சேலம் மாவட்டம்.

செல்வந்தர்களின் நோய் என்று செல்லமாக அழைக்கப்படும் சர்க்கரை வியாதி (Diabetes Mellitus) மிகவும் தொன்மை வாய்ந்தது. தற்காலத்தில் இந்நோய் பெரும்பாலும் உடல் உழைப்பற்ற உயர் குடிமக்களிடத்தும் அலுவலக வகுப்பாரிடையேயும், அவர் தம் நடுமைப் பருவத்தில் தோன்றுவதல்லால், உடல் உழைப்பு மிக்க கிராம மக்களிடம் அரிதாகவே காணப்படுகிறது.

இந்நோய் தோன்றுவதற்குரிய மூலகாரணங்கள் திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும், 50 சதவீதத்திற்கு மேல் நோயாளிகள் இதை பரம்பரையாகவே பெறுகின்றனர் என்று இன்றைய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இருப்பினும் நோய்வந்த பிறகு உடல் கூற்றில் ஏற்படும் மாறுதல்களைத் தெளிவாக விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். நோயாளியின் உடலில் சரியான நிலையில் சர்க்கரை செரிப்பதற்கு தேவையான அளவு இன்ஸுலின் (Insulin) என்ற ஹார்மோனை (Hormone) அவருடைய கணையங்களில் (Pancreas) உள்ள தீவுத் திசுக்கள் (Islets of langerhans) சுரக்கத் தவறிவிடுகின்றன. இதனால் குருதியில் க்ளுக்கோஸ் சர்க்கரை அளவு (Blood Sugar Level) அபரிமிதமாக மில்லிட்டர் குருதியில் 100 முதல் 150 மில்லிகிராம் வரைதான் சர்க்கரை காணப்படுகிறது. ஆனால் அபரிமிதமான நிலையில் சில நோயாளிகளிடம் இது வெகுவாக அளவில் கூடி 100 மில்லிட்டர் குருதியில் சர்க்கரை அளவு 180 மில்லி கிராம் வரை இருக்கும் நிலையை சிறுநீர்க்காயின் வாயில் நிலை (Renal Threshold) என்று மருத்துவ மொழியில் அழைக்கின்றனர். குருதி சர்க்கரை அளவு இந்த வாயில் நிலையையும் தாண்டிவிடும்போது, சிறுநீர்க்காய் பிரித்தனுப்பும் கழிவுப் பொருளாகிய சிறுநீருடன் ஒரு பகுதி சர்க்கரை வெளிவர ஆரம்பித்து விடுகிறது. இவ்வாறு வெளிவரும் சர்க்கரையை ஃபெலிங்ஸ் கரையத்தையோ, பெனிடிக்ட்ஸ் கரையத்தையோ பயன்படுத்தி சிறு நீரைப் பரிசோதித்து அறிந்துவிடலாம். சிறுநீரில் சர்க்கரை தோன்றும் நிலையெல்லாம் (Glycosuria) சர்க்கரை வியாதி என்று கூறிவிட முடியாது. ஆயினும் முதியவர்களிடம் இவ்வாறு ஏற்பட்டால் அது பெரும்பாலும் சர்க்கரை வியாதியாகவே முடிகிறது. இதனை மேலும் குருதி சர்க்கரை அளவை நிர்ணயித்தலின் மூலம் உறுதி செய்துவிடலாம்.

நாயின் கணயத்திலிருந்து மருந்து

இவ்வியாதி உடனிருந்தே கொல்லும் பிணியாதலின் ஆரம்பத்தில் இருந்தே கட்டுப்படுத்த வில்லையானால் வருங்காலம் சோகக் கதையாகவே முடியும். 1921-ல் ஃப்ரெடரிக் பென்டிங், சார்ல்ஸ் பெஸ்ட் என்ற இரு விஞ்ஞானிகள் நாயின் கணயத்திலிருந்து இன்ஸுலினை பிரித்தெடுத்து பயன்படுத்திய நாள் முதல் கடந்த 40 ஆண்டுகளில் இன்ஸுலினை அடிப்படையாகக் கொண்ட பல மருந்து தயாரிப்புகள் கடைகளில் வந்துள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதால் இன்று இந்நோயை பெரும்பாலும் கட்டுப்படுத்திவிடலாம் எனினும், இன்ஸுலினுக்கு இருகுறைபாடுகள் உண்டு. 1. வாய்வழியாக

உட்கொள்ளும்போது இன்சுலினை வயிற்றிலுள்ள சில சீரண நொதிப் பொருட்கள் தாக்கி செயலிழக்கச் செய்து விடுகின்றன. எனவே உடனடி நல்ல பலன் வேண்டு மானால் இதனை ஊசி மூலம் ஏற்றவேண்டும்.

இதன் அளவு மிகவும் துல்லியமாக இருக்கவேண்டும். சிறிது அதிகமாகிவிட்டால்கூட, குருதியின் சர்க்கரையை குறைத்து வலிப்பு (Convulsions) மயக்கம் (Coma) மரணம் (Mortality) முதலியன முறையே ஏற்படுகின்றன. இதனால் இன்ஸுலினைச் சரியான மருத்துவ கண்காணிப் பில்தான் எடுத்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

ஏழை எளியவர்களின் சஞ்சீவி

மருத்துவ உதவி நம் கிராமங்களில் எப்போதும் உடனுக்குடன் கிடைத்தல் இல்லை. கிடைத்தால் கூட கடைகளில் விற்கும் இன்சுலின் மருந்து தயாரிப்புகள் அனைத்தும் கிராமங்களின் ஏழை எளியவர்களுக்கு எட்டாத விலையில் உள்ளன. கிராம மக்களுக்கு மிகக் குறைந்த விலையில் சரளமாகக் கிடைப்பதும் மருத்துவர் உதவியின்றி எளிதாக உட்கொள்ளக்கூடியதுமான சஞ்சீவி ஒன்று உண்டா?

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி, செங்கல்பட்டு, திருநெல் வேலி, சேலம் முதலிய மாவட்டங்களிலும், கேரள நாட்டில் பாலக்காடு முதலிய பல மாவட்டங்களிலும் உள்ள கிராம மக்கள் சிலர் தொன்று தொட்டே சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த இலகுவான ஒரு கிராமிய முறையைக் கையாண்டு வருகின்றனர். இக் கிராமப்புறங் களின் முட்புதர் காடுகளில் காட்டுக் கொடியாக வளரும் ஒரு மூலிகையை இரண்டு மூன்று நாட்களுக்கு ஒன்றி ரண்டு இலைகள் வீதம் தின்றுவந்தால் சிறு நீரில் சர்க்கரைப் போக்கு (Glycosuria) நின்றுவிடுவதுடன் நோயும் படிப்படியாக குறைந்துவிடுகிறது. பல சந்தர்ப் பங்களிலும் இம் மூலிகை இன்ஸுலினைப்போலவே செய லாற்றி அதைவிட சிறந்த பலன்களைத் தருகின்றது. இது இயற்கையான ஒரு காட்டுக் கொடியாதலால், இதற் கென்று ஒரு செலவும் கிடையாது. இதை உண்பதற்கு மருத்துவரின் கண்காணிப்பு தேவை இல்லை (ஊசி மூலம் உடலில் செலுத்தும் அவசியம் இல்லை).

சிறுகுறிஞ்சி இலை

இம்மூலிகையின் இலைகளைத் தின்பதால் எவ்வளவு தூரம் நோயாளியின் சிறு நீரில் சர்க்கரைப் போக்கு நிற்கிறது என்பதை அறியவும் அதற்கொப்ப குருதியில் சர்க்கரை அளவு குறைக்கப்படுகிறதா என்பதை அறியவும் நம் தேசத்திலுள்ள சில விஞ்ஞான மன்றங்களில் (Vignan Mandirs) சில சோதனைகள் செய்யப்பட்டன. இந்நோயின் அறிகுறி குருதியின் அதிகப்படியான சர்க் கரை அளவே (Hyperglycaemia) அன்றி, சிறு நீரின் சர்க்கரைபோக்கு (Glycosuria) அன்று என்ற காரணத் தால், பல சர்க்கரை நோயாளிகளின் குருதியின் சர்க் கரை அளவு, மூலிகை சாப்பிடுவதற்கு முன்பும், மூலிகை சாப்பிட்ட பின்பும் கண்டறியப்பட்டது. எல்லா நோயாளிகளின் உடலிலும் இலையை உண்டபின்பு சிறு நீரில் சர்க்கரை போக்கு நின்று விடுவதுடன் குருதியின் சர்க்கரை அளவு மித நிலையை அடைந்து விடுகிறது.

இந்த மூலிகையை கோயம்புத்தூரில் உள்ள இந்திய தாவரச் சர்வே துறையினருக்கு அனுப்பி விசாரித்த போது, அவர்கள் இதை எருக்குக் குடும்பத்தைச் சேர்ந்த ஜிம்னீமா ஸில்வெஸ்ட்ரா (Gymnema Sylvestra) என்ற கொடி என்று கூறினர். "இந்திய மருந்துச் செடிகளின் தொகுப்பு" என்ற புத்தகம், இதை சர்க்கரை வியா திக்கு சிறந்த மருந்தாகக் குறிப்பிடுகிறது. இதனைத் தமிழ் மொழியில், சிறுகுறிஞ்சியென்றும், மலையாள மொழியில் சர்க்கரைக் கொடி யென்றும், வடமொழியில் 'மேஷஸிரிங்' என்றும் குறிப்பிடுகிறது. காம்பிள் என்பவர் எழுதிய "சென்னை மாநிலத் தாவரங்களின் தொகுப்பு" (Gambles Flora of Madras Presidency) என்ற நூல் இக்கொடியை பின்வருமாறு வர்ணிக்கிறது: இது அவ ரையைப்போல் சுற்றிப் படரும் ஒரு கொடி. இலைகள் மெல்லியவை, முட்டை வடிவானவை. கணுக்களில் எதிர் எதிராக அமைந்திருக்கும் பூக்கள் மிகவும் சிறியவை. வெண்மை நிறமானவை. கொத்தாக இலைக்கணுக்களில் செறிந்திருக்கும். காய்கள் ஒரிணையாகத் தோன்றி இரண்டு மீசைகள்போல் காம்பில் அமைந்திருக்கும். விதைகள் மிகச் சிறியவை; முட்டை வடிவானவை; நுனியில் குஞ்சம் போன்று பஞ்சு செறிந்திருக்கும் இச்செடியை போன்ற அமைப்புக்களுடைய நெருங்கிய சொந்தமுடைய பல் வேறு இனங்கள் இருப்பதால் சிறுகுறிஞ்சியை தாவர விஞ்ஞானிகளுடன் கலந்து உறுதிபடுத்திய பின்பு உண்பதே பலன் தரும்.

கண்முன் பலன்

சர்க்கரைப் பொருட்களின் இனிப்புச் சுவையை அழித்து, அவற்றை சுவையற்றதாக்கிவிடும் விநோதமான ஒரு பண்பு சிறுகுறிஞ்சியின் இலைகளுக்கு இருக்கிறது. ஓரிரு இலைகளை சில நிமிட நேரம் மென்று விட்டு சர்க் கரைக் கலந்த இனிப்புப் பொருட்களை வாயில் போட்டால் இனிப்புச் சுவை அழிந்து அவை முற்றிலும் சுவை யற்றனவாகிவிடும். சில மணி நேரங்கள் வரை நாக்கில் இனிப்புச் சுவையே தெரிவதில்லை. பிறகு படிப்படியாக இனிப்புச் சுவையுணர்வு மீண்டும் நாக்கில் வந்தடைகிறது. இக்கொடியின் இனிப்புச் சுவையழிக்கும் இப்பண்பிற்கும் சர்க்கரை வியாதிக்கும் உள்ள தொடர்பு என்னவென்று தற்போது தெரியாவிட்டாலும் இப்பண்பை பயன்படுத்தி இக்கொடியை கிராம மக்கள் இலகுவில் கண்டறிந்து கொள்ளலாம்.

பணவசதி குறைந்த நம் நாட்டு கிராமங்கள் தோறும் ஏழை எளியவர்கள் இம்மூலிகையை சமய சஞ்சீவியாக பயன்படுத்தி பலனடையும் வாய்ப்பு பெரிதளவு இருப்ப தால், இதனைப்பற்றிய நுட்ப ஆராய்ச்சியை விஞ்ஞான மன்றங்களை விடவும் சிறப்பான கருவி வசதிகள் படைத்த, பெரிய மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்கள் நடத்தி அதில் புதைந்து கிடக்கும் இரகசியங்களை வெளியிடுதல் சாலச் சிறப்புடையதாகும்.

குறிப்பு :—இலைகளின் மாதிரியோ, மூலிகையின் விவரமோ வேண்டுவோர், விஞ்ஞான மந்திர் அதிகாரி, அரியக்கவுண்டன்பட்டி, சேலம் மாவட்டம் என்ற முக வரிக்கு எழுதவும்.

பீகார் மாநிலத்தில்

வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் செய்யும் பணி

பீகார் மாநிலத்தில் வட்டார வளர்ச்சிப் பணிகள் நான்கு நிலைகளாகப் பிரித்து நிறைவேற்றப்படுகின்றன.

ஒரு வட்டாரம், முதலாவதாக ஒரு விவசாய வட்டாரம் என்றும், பிறகு அடுத்த ஆண்டில் அது ஒரு 'வளர்ச்சி நிலைக்கு முற்பட்ட வட்டாரம்' என்றும் பிரிக்கப்பட்டு, அவற்றிற்கு உரிய ஆரம்பப் பணிகள் நடைபெறுகின்றன. அதன்பிறகு, அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அது சமுதாய வளர்ச்சி முதல் நிலை வட்டாரம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அது வளர்ச்சிப் படியில் இரண்டாவது நிலையை அடைந்துவிடுகிறது. இந்த நிலையிலேயே அது ஐந்தாண்டுகள் செயல்படுகிறது. அதன்பிறகு அரசின் ஒவ்வொரு துறையும், சிறிதளவு நிதியை அவ்வட்டாரத்திற்கு அளித்து, ஏற்கனவே நடத்தேறியுள்ள வளர்ச்சிப் பணிகள் மேலும் தொடர்ந்து நடைபெற்றுவர உதவி செய்கிறது. இக்காரியங்களெல்லாம், வட்டார அபிவிருத்தி அதிகாரியை மையமாகக் கொண்டே செயல்பட்டு வருகின்றன.

கேள்விப்பட்டியலிலிருந்து திட்டம்

திட்டங்கள் கீழ்நிலையிலிருந்தே தீட்டப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், கிராமவாசிகளைக் கலந்தாலோசித்து 'சர்வே' செய்து, கேள்விப்பட்டியல் தயாரித்து, அதன்மூலம் பதில்களைப் பெற்றும் திட்டமிடுதல் துவங்குகிறது. எந்தெந்த திட்டங்களுக்கு முதன்மையளிக்கப்பட வேண்டுமென்பது இதனால் தெரிய வருவதுடன், அவ்வகை திட்டங்களிலே மக்களின் தொடர்பும், அவற்றின் நிறைவேற்றத்திலே மக்களின் ஒத்துழைப்பும் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இம்மாதிரியான முறைகளில், திட்டமிடுவதிலேயே பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டுவிடுவதில்லை என்பது உண்மையாயினும், ஜனநாயக முறையிலே திட்டமிடுவதற்கு இதுதான் சாலச்சிறந்த வழிமுறை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார அபிவிருத்தி அதிகாரிதான் திட்டங்களை ஒருமுகப்படுத்தி, நிறைவேற்ற வேண்டும் என்று தெளிவாக பீகார் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே வட்டார அளவில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்களையும் தீட்டி, அவற்றின்பேரில் உரிய அனுமதியைப் பெற்று, உரிய காலத்தில் நிறைவேற்றும் பொறுப்பு வட்டார அபிவிருத்தி அதிகாரியைச் சார்ந்ததேயாகும்.

வட்டார அளவிலே மேற்சொன்ன முறையில் திட்டங்கள் தயாரானதும், அவற்றின் பேரில் அரசுத்துறைகளின் தொழில்நுட்ப அங்கீகாரத்தை வட்டார அபிவிருத்தி அதிகாரி பெறவேண்டும். பிறகு அவை வட்டார வளர்ச்சி குழு அல்லது பஞ்சாயத்து சமிதியில் சமர்ப்பிக்கப்படுகிறது. இக்குழு அல்லது சமிதி திட்டங்களை திருத்துவதற்கு முழு அதிகாரம் பெற்றவை. திட்டங்கள்வாரியான வரவு செலவு நிதித் திட்டம் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நிலை வட்டாரத்திற்கு ரூ. 12 லட்சமும், இரண்டாம் நிலை வட்டாரத்திற்கு ரூ. 5 லட்சமும் அளிக்கப்படுகின்றன. இவ்விரு நிலைகளுக்கு முந்தைய நிலையிலுள்ள வட்டாரங்களுக்கு, ரூ 18,000 அளிக்கப்படுகிறது. இதைக்கொண்டு அவ்வட்டாரம் விவசாயத் திட்டங்களை அமுல் செய்ய வேண்டும்.

வட்டார அளவில் பல்வேறு திட்டங்களின் செயல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு வட்டார அபிவிருத்தி அதிகாரியைச் சார்ந்ததே வட்டார அலுவலர்களை 'முடுக்கிவிட்டு' அவரவர்களின் பணிகளைச்செய்ய ஆர்வமூட்டுவதுடன், பல்வேறு தொழில்நுட்ப துறைகளுடன் தொடர்பு கொண்டு காரிய மாற்ற முனைவதும் அவரது தலையாய கடமை. இதை எவ்வாறு அவர் செயல்படுத்துகிறார்?

பல்வேறு துறைகளிலிருந்தும் வட்டாரத்தில் வேலை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ள எல்லா அலுவலர்களும் வட்டார அபிவிருத்தி அதிகாரியின் நிர்வாகக்கட்டுப்பாட்டில்தான் இயங்கவேண்டும். இரண்டாவதாக, வட்டார அபிவிருத்தி அதிகாரி சுற்றுப்பயணம் செய்து, அவர்களது வேலைகளையெல்லாம் களத்திற்கு நேரில் சென்று, சரி பார்த்து வேலைகளை மேற்பார்வை செய்கிறார். வட்டார தலைமையிடத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அலுவலர்களை கூட்டி, திட்டங்கள் பற்றி ஆலோசனை செய்கிறார். இருப்பினும் ஆங்காங்கே சிறு சிறு தவறுகள் ஏற்படலாம். கல்வியறிவு, அனுபவம் காரணமாக அலுவலர்கள் இப்படித்தான் நடந்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் சிற்சில வேலைகளில் அவை கைவிடப்பட்டு சற்று மாறியும் விடுகின்றன.

இவ்வகைப்பட்ட அலுவலர்களின் தலைவராக விளங்கும் வட்டார அபி

31-ம் பக்கம் பார்க்க

மக்கள் மொழியிலேயே வழக்கு விசாரணை

திரு வி. சம்பந்தமூர்த்தி, B.A., B.L., வழக்கறிஞர், சென்னை—12

சட்ட சொற்பொருட களஞ்சியம் என்பது தற்பொழுது ஆங்கிலத்தில் உள்ள சட்ட சொற்களுக்கு தமிழில் பொருள்படுத்தி கூறும் ஒரு நூல் ஆகும்.

இப்படி தமிழில் சட்டச் சொற்களை உருவாக்கும் முயற்சிக்குப் பயன்படும் அளவில் சாதகமாக நம் தமிழ் மொழியின் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும், தொன்மையையும், சட்டத்தின் நுட்பமான கருத்துக்களை தெரிவிக்க இயலும் இலக்கிய வளத்தையும் பெற்றிருக்கிறது.

மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் வேறு ஒரு நபருடனோ, சமூகத்துடனோ அல்லது அரசிடமோ தனக்கு இன்னலோ, குறையோ ஏற்படும் காலத்தில் நீதியைக் கூறி நீதி மன்றத்திற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இவ்வித நிர்பந்தத்திற்குள்ளாகும் ஒவ்வொருவரும் ஆங்கிலம் தெரிந்தவர் என்று கூற முடியாது. ஆனால் அவர்கள் நாடவேண்டியுள்ள நீதி மன்றமோ ஆங்கிலத்திலேயே இன்று வரை செயல்படுகிறது. தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்த் தாயின் மடியில் வளர்ந்து, தமிழிலேயே ஊறிய ஒரு தமிழ் மகன், தனக்கு அநீதி ஏற்பட்டபோது, தான் குறைகள் என்று கருதும் உண்மைகளைத் தானோ, அல்லது தனக்காக ஏற்பட்டிருக்கும் ஒரு நபரோ, தான் இலகுவில் அறிந்துக்கொள்ளக்கூடிய ஒரு மொழியில் நீதிபதிக்கு எடுத்துக் கூறுவதை பெரிதும் விரும்புவான், என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

நீதித் துறையில், தமிழ் ஆக்கம் செய்யும் முயற்சியின் முதற்கட்டமாக நம் மாநிலத்திலுள்ள மாவட்ட நீதி மன்றங்கள் வரையில், குற்ற விசாரணை நீதி மன்றங்களாயினும், சிவில் விசாரணை நீதி மன்றங்களாயினும் பிராது, எதிர்பிராது, மறுப்பு, அவைகளிலிருந்து எழும் வினைக்கள் அல்லது கோரிக்கைகள் சாட்சியங்கள், வாதங்கள், மறுவாதங்கள் நீதிபதியின் தீர்ப்பு, முதலியன தமிழிலேயே ஆக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் சுதந்திரம் பெற்றதின் ஒரு முக்கிய பலனை அடைந்தவர்கள் ஆவார்கள்.

இப்பொழுது நீதிமன்றங்களில் ஆங்கிலத்தில் செயல்படும் நடவடிக்கைகளை தமிழில் செயல்படச் செய்வது எளிதான காரியம் இல்லை. ஆங்கிலத்தில் உள்ள சட்டச் சொற்கள் ஒவ்வொன்றிற்கும், நயமான, மக்கள் எளிதில் புரிந்துக் கொள்ளக்கூடிய தமிழ் சொற்களை, நம்முடைய தொன்மை வாய்ந்த நூல்களிலிருந்தும் காலத்திற்கேற்ற நூதன தமிழ் சொற்களை புகுத்தியும் நீதிமன்ற மொழியை விரிவுபடுத்த வேண்டும். இதை நடைமுறைக்கு கொண்டுவரும்பொழுது சிறிது காலத்திற்கு நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும், வழக்காளிகளுக்கும் கூட, சிறிது சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் நாளாவட்டத்தில் இது நன்மையை பயக்கும் ஒரு செயல் என்பதை மக்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிவர்.

நீதி மன்றங்களில் தமிழில் நீதி வழங்கும் முறையின் முதற் கட்டத்தில் மாவட்ட நீதிமன்றங்கள் தான் செயல்படும். ஆகவே, வழக்கறிஞர்களின் வாதத்தின்போது, இதர உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புக்களை நீதி மன்றத்தினருக்கு எடுத்துக்காட்டுவதில் யாதொரு ஆட்சேபணையும் இருப்பதற்கில்லை. மாவட்ட நீதி மன்றத்தின் தமிழிலுள்ள தீர்ப்புடன் ஆங்கில மொழிப் பெயர்ப்பையும் வைத்து உயர் நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்படும்போது அனுப்பலாம். தமிழக அரசு சட்டச் சொற்பொருட் களஞ்சியத்தின் வாயிலாக, படிப்படியாக சட்டத்தைத் தமிழாக்கம் செய்து, நீதி மன்றங்களில், சட்டக் கல்லூரியிலும் தமிழ் முழக்கம் செய்ய முனைந்ததைத் தமிழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

'நீதி மன்றங்களில் தமிழ்', என்னும் தலைப்பின் கீழ் கடந்த 'கிராம நலம்', இதழில் சிறப்புக் கட்டுரை யொன்று தனியிடம் பெற்றிருந்தது. இத் துறையில் இதுவரை நடைபெற்ற ஆக்கப் பணிகள் தெளிவுற கூறப்பட்டிருந்தன. இதனை வரவேற்று வழக்கறிஞர் திரு வி. சம்பந்த மூர்த்தி அவர்கள் தமது கருத்தினை தெரிவித்துள்ளார். இது அவருடைய தனிப்பட்ட சொந்தக் கருத்தாகும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

—ஆசிரியர்.

வட்டார அபிவிருத்தி . . .
29-ம் பக்கத் தொடர்ச்சி.

விருத்தி அதிகாரி, சிற்சில சமயங்களில் ஒழுங்கீனம் என்று தெரிந்திருந்தும் அவரவர்களினிடையே ஒற்றுமையின்மையை அகற்ற, அவர் தன்னையும் சக ஊழியர்கள் போன்றே எண்ணி கடமையாற்ற வேண்டியிருக்கிறது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே பீஹார் அரசு, வட்டார அபிவிருத்தி அதிகாரிக்கு வருவாய், குற்ற விசாரணை அதிகாரங்களையும் அளித்துள்ளது. இதிலுள்ள குறைகளை அரசு தெரிந்திருப்பதால், வருவாய், வளர்ச்சித் துறைகளில் சிறிது மாற்றங்களும் செய்துள்ளது. இவற்றின் காரணமாக, வட்டார அபிவிருத்தி அதிகாரி திறமுடன் செயலாற்றி, திட்டங்களை நிறைவேற்றக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோட்ட அளவு, மாவட்ட அளவில் உள்ள தொழில் நுட்பத் துறைகள், வட்டாரத்திற்கு ஒத்துழைப்பு தருவதில் வட்டார அபிவிருத்தி அதிகாரி மையமாக திகழ்கிறார்; ஒரு துறையின் திட்டம்,வட்டார அளவில் பயனற்றதாக போய் விட்டால், அதற்கு அத்துறையே பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையிலே, இதை அத்துறைகள் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு துறையின் திட்டம், வட்டார அளவில் தோற்றது என்றால், அது கோட்ட அளவிலே, மாவட்ட அளவிலே பணியாற்றும் எல்லா ஊழியர்களும் சேர்ந்து, அதை தோல்வியுறச் செய்தார்கள் எனபதே சரியான விளக்கமாகும். ஆனால் இதை விடுத்து, வட்டார அபிவிருத்தி அதிகாரியே அந்த ஒரு திட்டத்தின் வெற்றிக்கோ தோல்விக்கோ காரணம் என்று கூறினால், அது அவரது பதவியை, அவரது உத்தியோக வாழ்வை பாதிக்கக் கூடியதாக அமைந்துவிடும்.

வட்டார அபிவிருத்தி அதிகாரியின் பதவியை, அவருடைய வேலையைத்திறமுடையதாகச் செய்ய சரியான வழியிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் திட்டத்திலே உள்ள குறைபாடுகளை அகற்ற இயலும்.

வாழ்வு வரண்டபோது...

வாதநோயினால் பாதிக்கப்பட்டு இரு கால்களின் செயலையும் இழந்த ஒரு ஏழை ஹரிஜன், திரு பால்தியோதாஸ் கயிறு தயாரிக்கும் தொழிலில் பயிற்சி பெற்று, அதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வாழ்க்கையில் அமைதியும் வருவாயும் பெற்று வாழ்ந்து வருகிறார். இவர் பீஹார் மாநிலத்திலுள்ள சஹர்சா மாவட்டத்தில் 'பத்ரா' என்ற கிராமத்தில் வசிப்பவர்.

இவரது குடும்பத்திற்கு அரை ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. மேலும் 4 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் குடும்பம் முழுவதும் பாடுபட்டுக்கூட, இருவேளை உணவு கூட வயிறார உண்ண முடியாத நிலையிருந்தது அவரது குடும்பம்.

இந்த தருணத்தில்தான் கயிறு தயாரிக்கும் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று அவ்வூரில் கதர் கிராமோத்யோக் சங்கத்தினால் துவக்கப்பட்டது. அந்நிலையத்தில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் ஹரிஜன மக்களே; இந்நிலையத்தில் தானும் சேர்ந்து பயிற்சிபெற வேண்டுமென்று விரும்பினார், பால்யோதிதாஸ். ஆனால் செயலற்ற நிலையிலிருந்த அவரால், அங்கு சென்று எப்படி பயிற்சி பெற முடியும்? என்ன செய்வார் அவர்?

இவரது நிலையையுணர்ந்த கதர் கிராமோத்யோக் சங்கத்தினர், கயிறு திரிக்கும் 'ராட்டை' களில் இரண்டை அவருக்கு அளித்து அவரது வீட்டிலுள்ள பெண்கள், குழந்தைகளின் உதவியினால் கயிறு தயாரிக்கும் முறையை, வீட்டிலிருந்தபடியே கற்றுக்கொள்ள வகைசெய்தது.

அவர்கள் தயாரித்த கயிறுகளை சங்கம் விலைக்கு வாங்கிக்கொண்டது. ஒரு மாதத்திற்கு சுமார் 160 கிலோ எடையுள்ள இழைகளும், கயிறுகளும் தனது குடும்பத்தினர் உதவியினால் அவர் தயாரிக்க முடிந்தது. திரிக்கப்பட்ட கயிறுக்கு, கிலோ 50 பைசா என்ற வீதத்திலும் இழைகள், தயாரிப்பதற்கு கிலோ 20 பைசா என்ற வீதத்திலும் ஊதியம் அளித்தது சங்கம். இவ்வாறு கணக்கிடும் போது மாதம் ஒன்றிற்கு திரு பால்தியோதாஸால் சுமார் ரூ. 112 வருவாய் பெறமுடிகிறது. அதன் மூலம் அவர் திருப்தியாகவும் வாழமுடிகிறது.

"பஞ்சாயத்து ராஜ்" "இன்டென்சிவ் ஃபார்மிங்" "குருக்ஷேத்ரா" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை. பக்கங்கள் : 12, 15, 16, 17, 29, 31, 32, 33.

Articles reproduced from 'Panchayati Raj' on pages 15, 16, 17, and 31 from "Indian Farming" on page 12 and from "Krukchetra" on pages 29, and 31 to 33. Total 8 pages.

கிராமங்களிலுள்ள மாணவர்களின் மன எழுச்சி, அவர்களின் வருங்காலம் பற்றிய சிந்தனைகளையெல்லாம் அறிந்துக் கொள்வதற்கு, டில்லியைச் சேர்ந்த கஞ்சாவாலா என்ற வட்டாரத்தில் 284 மாணவர்களை அணுகி தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அங்குள்ள வெவ்வேறு உயர் நிலைப் பள்ளிகளில் 6, 8, 10-வது வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள்.

கிராம மாணவர்களின்	வருங்கால விருப்பங்கள்.

உயர் நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வியில் எவ்வளவு விருப்பமிருக்கிறது என்பது முதலில் அறிந்துகொள்ளப்பட்டது; அதை சுருக்கமாக கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 1

பல்வேறு வயதுள்ள மாணவர்களுக்கு கல்லூரிக் கல்வியிலுள்ள விருப்பம்.

	வயது.			மொத்த மாணவர்களின் சதவீதம்.
	11–13	14–16	17–21	
மாணவர்களின் எண்ணிக்கை.	(95) %	(137) %	(52) %	(284)
கல்லூரிக் கல்வியில் விருப்பம்.	39·1	57·1	54·0	50·1
கல்லூரிக் கல்வியில் விருப்ப மில்லாதவர்கள்.	2·6	9·3	6·1	6·0
முடிவு செய்யாதவர்கள்.	58·3	33·6	39·9	43·9

அதிகமான மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து உயர் கல்வி பெற வேண்டுமென்ற விருப்பத்தையே தெரிவித்துள்ளனர். அதிலும் முக்கியமாக 14—16 வயது, 17—21 வயது மாணவர்களுக்கே, கல்லூரியில் சேர அதிக விருப்பமிருக்கிறது. அதிக ஆண்டுகள் பள்ளியில் பயின்று வருவதாலும், வயதின் காரணமாகவும் அவர்கள் அவ்வாறு திட்டவட்டமாக கூற முடிகிறது எனலாம்.

விவசாயம் செய்பவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் வருங்காலக் கல்வித் திட்டமும், மற்ற குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களின் திட்டமும் 2–வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2

விவசாய குடும்பங்கள், இதர குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களின் வருங்கால கல்வித் திட்டம்.

	விவசாயக் குடும்பம்.	இதர குடும்பம்.	மொத்த மாணவர்களில் சதவீதம்.
மாணவர்களின் எண்ணிக்கை.	155	129	234
	%	%	%
கல்லூரிக் கல்வியில் விருப்பம்.	52·2	49·0	50·1
கல்லூரி கல்வியில் விருப்பமில்லாதவர்கள்.	6·4	5·6	9·0
முடிவு செய்யாதவர்கள்.	41·4	45·4	43·9

மேற்கண்ட முடிவிலிருந்து, இருவகை குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களும் கல்லூரியில் சேர்ந்து, உயர் கல்வி பெற ஆர்வம் கொண்டிருப்பது தெளிவாகிறது. ஆனால் அதே சமயத்தில் பெரும்பாலான (43.9 சத விகிதம்)

மாணவர்கள், தங்களின் வருங்கால திட்டத்தைப் பற்றி முடிவு செய்யாது இருக்கின்றனர். எனவே இவர்களுக் கெல்லாம் தகுந்த வழிமுறைகளை எடுத்துக் கூறுவது அவசியமாகிறது.

இந்த 284 மாணவர்களையும், அவரவர்களுக்கு விருப்ப மான தொழில், பதவி போன்றவற்றை பற்றி கேட்ட போது, அவர்களிடமிருந்து வெளிப்பட்ட ஆர்வம் வகைப் படுத்தப்பட்டு அட்டவணை 3-ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3

மாணவர்களின் தொழில், பதவி ஆர்வம்

	வயது.			மொத்த மாணவர் களில் சத வீதம்.
	11–13	14–16	17–21	
மாணவர்களின் எண்ணிக்கை.	95	137	52	284
	%	%	%	%
ஆசிரியர்	36·7 (1)	15·3 (3)	15·4 (2)	22·1 (2)
மருத்துவம் அல்லது விஞ்ஞானம்	25·2 (2)	24·8 (2)	13·4 (3)	22·8 (1)
இராணுவம்	12·6 (3)	25·6 (1)	26·9 (1)	21·4 (3)
தலைமைப் பணி	11·5 (4)	12·4 (4)	11·5 (4)	12·0 (4)
அரசாங்கப் பணி	6·3 (5)	8·0 (5)	11·5 (4)	8·1–(5)
போலீஸ்	3·1 (6)	1·5 (7)	3·9 (5)	2·5 (7)
கலை, நுண் கலை	2·3 (7)	3·6 (6)	13·4 (3)	5·0 (6)
வியாபாரம்	1·1 (8)	3·6 (6)	..	2·1 (8)
விவசாயம்	1·1 (8)	3·6 (8)	..	1·1 (9)
பதில் சொல் லாதவர்கள்	1·1	3·7	4·0	2·9

* அடைப்புகளிலுள்ள எண்கள் வரிசைக் கிரமத்தை காட்டுகின்றன.

14—16 வயது, மற்றும் 17—21 வயதுள்ள மாணவர் களின் விருப்பம், இராணுவ அதிகாரியாக வேண்டு மென்பதே; ஆனால் 11—13 வயதிலுள்ளவர் களோ ஆசிரியர்களாக ஆகவேண்டுமென்று விருப்ப முள்ளவர்களாக இருக்கிறார்கள். 11—13 வயது, 14—16 வயதுள்ளவர்கள் மருத்துவம், விஞ்ஞானத்திற்கு இரண்டாவது இடம் அளித்திருக்கையில், 17 21 வய துள்ளவர்கள் அதற்கு மூன்றாவது இடமே அளித்திருக் கின்றனர். ஆனால் 11—13 வயதில் ஒரே ஒரு மாணவ னும், 14—16 வயதில் இரண்டு மாணவனுமே விவசா யம் செய்ய விருப்பம் தெரிவித்திருப்பது மிகவும் வியப் பாக இருக்கிறது. 17—21 வயதிலுள்ள எவருமே விவ சாயம் செய்ய ஆர்வம் காட்டவில்லை.

விவசாயக் குடும்பங்கள், இதர குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்குள்ள தொழில், பதவி விருப்பங்களை அட்டவணை 4-ல் காணலாம்.

அட்டவணை 4

	விவசாயின் குடும்பம். (1)		இதர குடும்பம். (2)		மொத்த மாண வர்களின் சதவீதம். (3)	
மாணவர்களின் எண்ணிக்கை	155		129		284	
	%		%		%	
ஆசிரியர்	26·0	(1)	17·8	(2)	22·1	(2
மருத்துவம், விஞ் ஞானம்	21·4	(2)	24·8	(1)	22·8	(1
இராணுவம்	18·8	(3)	24·8	(1)	12·0	(4)
தலைமைப்பணி	13·4	(4)	10·8	(3)	12·0	(4)
அரசாங்கப் பணி	7·1	(5)	9·4	(4)	8·1	(5)
போலீஸ்	3·8	(6)	0·8	(7)	2·5	(7)
கலை, நுண்கலை	38·6	(6)	6·2	(5)	5·0	(6)
வியாபாரம்	2·5	(7)	1·6	(6)	2·1	(8)
விவசாயம்	1·8	(8)	..		1·1	(9)
பதில் சொல்லாதவர் கள்.	1.8		3·8		2·9	

* அடைப்புகளிலுள்ள எண்கள் வரிசைக் கிரமத்தை காட்டுகின்றன.

இருவகை மாணவர்களிடையேயும் ஆசிரியர் வேலை, மருத்துவம், விஞ்ஞானம், இராணுவத்திற்கு சேரும் ஆர்வம் மிகுந்து காணப்படுகிறது. விவசாயக் குடும்பங் களிலுள்ள மாணவர்களில் 1·8 சதவீதத்தினரும் இதர குடும்பங்களைச் சார்ந்தவர்களில் எவருமே விவசாயம் செய்ய முன்வரவில்லை. உண்மையில் விவசாயம் தான் கடைசி வகுப்பாகவும், வரிசையிலேயே மிகக் குறைந்த தாகவும் இருக்கிறது.

அநேகமாக பெரும்பாலான மாணவர்கள் விஞ்ஞா னம், மருத்துவத் துறையில் ஆர்வம் கொண்டிருப்பதால் இவ்வகையில் ஆவன செய்யவேண்டியது அவசியமா கிறது. மேலும் 21·0% சதவீத மாணவர்கள் இராணு வத்தில் பணியாற்ற பேரவா கொண்டுள்ளனர். என்.சி. சி.,எ.சி.சி., கிராமத் தொண்டர் படை, சாரணர் படை ஆகியவற்றை நன்முறையில் அமைத்து, இவர்களின் ஆவலை ஒருமுகப்படுத்தவேண்டும்.

ஆனால் 284 மாணவர்களில் 3 பேர்கள் மட்டுமே விவசாயம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளனர். தொழில் என்ற முறையில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படாததே இதற்கு ஒரு காரணமாக இருந்தாலும் 99 சதவீத மாணவர்கள் விவசாயத்தை விட்டு வெளி யேறவே விரும்புகின்றனர். விஞ்ஞான ரீதியில் விவசா யம் செய்ய ஆர்வத்தையுண்டாக்காததே இதற்கு ஒரு காரணமாகவும் இருக்கலாம்.

—0—

பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

ஊராட்சிகளிலுள்ள வானொலிப் பெட்டிகளின் பராமரிப்புக் கட்டணங்கள், உபரிப் பாகங்களின் விலைகளை ஊராட்சிகளிடமிருந்து வசூலித்தல்—திருத்தப்பட்ட நடைமுறை—பிறப்பிக்கப்படுகிறது.

Panchayats—Village Panchayats—Panchayat Radio Maintenance charges and cost of components—Collections fr om the Panchayats—Revised procedure—Issued.

ஊராட்சிகளிலுள்ள வானொலிப் பெட்டிகள் பராமரிப்புக்குரிய கட்டணங்களை வசூலிப்பது சம்பந்தமாக, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ம் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 26094-ல் விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட பிறகும், நிலுவைத் தொகைகள் பெருகியுள்ளதென்பதும், ஊராட்சிகளிடமிருந்து 'கொடுப்பு ஆணை' (Pay Order) களை வானொலி மேற்பார்வையாளர்கள் பெற்று, அவற்றை ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களிடம், கொடுத்தும் கூட, ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லையென்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அரசு இவ்விஷயத்தை, கிராம வளர்ச்சி நெறியாளருடனும், தல நிதி கணக்குகள் ஆய்வாளருடனும் கலந்தாலோசித்து, ஊராட்சிகளிடமுள்ள வானொலிப் பெட்டிகளின் பராமரிப்புக்குரிய கட்டணங்கள், மற்றும் உபரிப் பாகங்களின் விலைகள் ஆகியவற்றை ஊராட்சிகளிடமிருந்து உடனடியாக வசூலித்து, அவற்றை செலுத்துவதற்கு, கீழ்க்கண்ட திருத்தப்பட்ட நடைமுறை விதிகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

2. ஊராட்சிகளிடமுள்ள வானொலிப் பெட்டிகளை ஆண்டு முழுவதும் பராமரித்ததற்காக, ஊராட்சிகள் செலுத்த வேண்டிய தொகைகள் அடங்கிய மொத்தமான பட்டியல் ஒன்றை, ஒவ்வொரு ஆண்டு துவக்கத்திலும், பிராந்திய வானொலி அதிகாரி, ஊராட்சி ஒன்றியம் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார். வானொலிப் பெட்டிகளை வைத்திருக்கும் ஊராட்சிகளிடமிருந்து, அப்பெட்டிகளின் பராமரிப்புக்காகவும், உபரி பாகங்களின் விலைகளை செலுத்தி, அதை, அந்த ஊராட்சிகளின் கணக்குகளில் பற்று வைக்க ஒரு நிலையான அதிகாரத்தை, தங்களின் அலுவல் வரம்பிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களிடமிருந்தும் ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் பெற்றுக் கொள்ள வேண்டும். இதை ஒரு 'கொடுப்பு ஆணை'யாகக்கொள்ளலாம். இந்த அதிகாரத்தின் பேரில், தல நிதி வைப்புக் கணக்கு 1-லிருந்து, பிராந்திய வானொலி அதிகாரிக்கு, ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் 'செக்' (Cheque) வழங்கவேண்டும்; பிராந்திய வானொலி அதிகாரி, அந்த 'செக்'கை கருவூலத்தில், பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்காக செலுத்துவார். அதன் பிறகு, பஞ்சாயத்து வானொலி பராமரிப்புக் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட தொகைகளை, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் கணக்கில், தல நிதி வைப்புக் கணக்கு 11-ல் பற்று வைத்து, அத்தொகைகள் தல நிதி வைப்புக் கணக்கு 1-க்கு திரும்பச் செலுத்துவார்.

3. ஊராட்சிகளிடமுள்ள வானொலிப் பெட்டிகளில், கடந்த மாதம் பொருத்தப்பட்டுள்ள உபரி பாகங்களின் விலைகளை, ஊராட்சிகளிடமிருந்து வசூலிப்பதற்காக, இதைப் போன்றே, மற்றொரு சுருக்கமான பட்டியல் ஒன்றை, ஒவ்வொரு மாதத் துவக்கத்திலும், பிராந்திய வானொலி அதிகாரி, ஊராட்சி ஒன்றியம ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார். அந்த சுருக்கமான பட்டியலை ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் பெற்றுக்கொண்டவுடன், மேற்கண்ட பத்தி 2-ல் கூறியுள்ளவாறே, தல நிதி வைப்புக் கணக்கு 1-லிருந்து பிராந்திய வானொலி அதிகாரிக்கு 'செக்' வழங்கிவிட்டு, பிறகு அத்தொகையை தல நிதி வைப்புக் கணக்கு 11-க்கு திரும்பி செலுத்த வேண்டும். கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுள்ள தொகைகளில் அடங்கிய பட்டியல்களை, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் அனுப்பி வைக்க வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 790-ன் சுருக்கம்.)

ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 'ஜீப்'களை, மற்ற துறைகளின் வேலைகளுக்காகக் கோருதல்—விலக்களிக்கப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

Panchayat Development—Jeeps in the Panchayat Unions—Requisitioning for other departmental works—Exemption—Orders—Passed.

கிராம வளர்ச்சித் திட்ட வேலைகளை நிறைவேற்றுவதில் வளர்ச்சி அதிகாரிகள் திறமுடன் பணிபுரிவதற்காகவே, இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்கும், ஒரு 'ஜீப்' (Jeep) கொடுக்கப்பட்டுள்ளது. களத்தில் நடைபெறும் வேலைகளை சோதனை செய்வதற்காகவும், வட்டாரத்தின் நெடுந்தொலைவிலுள்ள, எளிதாக செல்ல முடியாத கிராமங்களுக்கு செல்லவுமே, 'ஜீப்'கள் இருக்கின்றன.

2. ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள 'ஜீப்'களை, மற்ற துறைகளின் வேலைகளுக்காக, அடிக்கடி எடுத்துக்கொள்ளப்பட்டு விடுகிறதென்பதையும், அதனால், வளர்ச்சி வேலைகள் பாதிக்கப்படுகிறதென்பதையும், சென்னை, கிராம வளர்ச்சி நெறியாளர் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். எனவே, இதர துறைகளின் வேலைகளுக்காக ஊராட்சி ஒன்றியங்களின் 'ஜீப்'கள் அளிக்கப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சமீப காலங்களில், வளர்ச்சி வேலைகளுக்காக 'ஜீப்'களை பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் பெருமளவில் அதிகரித்துள்ளதனால், எக்காரியங்களுக்காக 'ஜீப்'களெல்லாம் முதலில் வாங்கப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோ, அவற்றிற்காகவே அவை பயன்படுத்தப்பட வேண்டுமென்பது மிகவும் அவசியமாகிறது. எனவே இவ்விஷயத்தை அரசு பரிசீலனை செய்து, ஊராட்சி ஒன்றியங்களிடம், உள்ள 'ஜீப்'களெல்லாம், மற்ற துறைகளின் வேலைகளுக்காக கோரப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறது. மிகவும் நெருக்கடியான, அவசர காரியங்களுக்காக, ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் 'ஜீப்'பை கோருவது தவிர்க்க முடியாதது என்ற நிலையெழும்போது, அது குறித்து கிராமவளர்ச்சி நெறியாளருக்கு எழுத வேண்டும்; அப்போது அவர் தன்னுடைய விருப்பத்தின் பேரில், 'ஜீப்'களை மற்ற துறையின் வேலைகளுக்காக தரலாம்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2166-ன் சுருக்கம்.)

* * *

காலங்கடந்த வருடாந்திர கடன் தவணைகள்—கிராம ஊராட்சிகளிடமிருந்து, ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்கள் முழுவதுமாக வசூலித்தல்—உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

Loans—Panchayats and Panchayat Unions—Overdue annuities—Panchayat Union Commissioners to recover summarily from the Village Panchayats—Orders—Issued.

தல ஆட்சி நிறுவனங்கள் செலுத்த வேண்டிய காலங்கடந்த கடன் தவணைகள் (Overdue instalment of loans) வட்டியுடன் சேர்த்து ரூ. 7·51 லட்சம் நிலுவைத் தொகையாக இருக்கிறது என்று, 1966-ம் ஆண்டிற்குரிய தணிக்கை அறிக்கையில், கணக்காய்வு தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த தொகையில், ஊராட்சி ஒன்றியங்கள் செலுத்த வேண்டியவை கீழ்க் கண்டவாறு ரூ. 6·04 லட்சமாகும்.

கிராம ஊராட்சிகள்	1·91
நகர ஊராட்சிகள்	2·06
ஊராட்சி ஒன்றியங்கள்	2·07
மொத்தம் ..	6·04

2. வருடாந்திர கடன் தவணைத் தொகைகளை ஒழுங்காக செலுத்துவதற்கு, மேலும் தீவிரமான நடவடிக்கைகள் தேவை என்று கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார். கிராம, நகர ஊராட்சிகளிடமிருந்து கடன் தொகைகளை வசூலிப்பதற்கு முறையே ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களும், கோட்ட ஊராட்சி அதிகாரிகளும் பொறுப்புள்ளவர்களாக ஆக்கப்படலாம் என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

3. கவனமாக பரிசீலனை செய்தபின், கிராம வளர்ச்சி நெறியாளரின் கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து கடன் தவணைகள் வசூலிக்கும் விஷயத்தில், கண்டிப்புடன் பின்பற்றப்படுவதற்காக, கீழ்க் கண்ட விளக்க உத்தரவுகளை பிறப்பிக்கிறது.

கிராம ஊராட்சிகள்.—சம்பந்தப்பட்ட தலைவரிடமிருந்து நிலையான 'கொடுப்பு ஆணை' (Pay Order) யை ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்கள் பெற்றுக்கொண்டு, கிராம ஊராட்சி தொகுப்பு நிதியிலிருந்து, கடன் தொகையை அப்படியே எடுத்து, அதை கடன் தவணையாக, ஊராட்சியின் சார்பில், ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்கள்

செலுத்தவேண்டும். கடன் தவணைத் தொகை மற்றும் இதர விவரங்களை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஆணையாளருக்கு கணக்காய்வுத் தலைவர் (Accountant-General) தெரிவிப்பார். இதே போன்று, துறைத் தலைவர்கள், ஊராட்சிகளுக்கு கடனை அனுமதித்து உத்தரவுகள் பிறப்பிக்கையில், கடன் தொகைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர், சம்பந்தப்பட்ட ஊராட்சியின், கிராம ஊராட்சி தொகுப்பு நிதி கணக்கிலிருந்து வசூலித்துக் கொள்வார் என்ற நிபந்தனையையும், அந்தக் கடன் அனுமதி ஆணையிலேயே சேர்த்துக் கொள்ளவேண்டும்.

நகர ஊராட்சிகள்:—கடன் தொகைகள் வசூலிக்கப்பட்டு வருதலை கவனிப்பதுடன், நகர ஊராட்சிகள் வரவு—செலவு நிதித் திட்டத்தில், இதுதான் முதல் தொகையாக கொள்ளப்பட்டு, கடன் தொகைகளை திருப்பி அளிக்க போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் கோட்ட ஊராட்சி அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். தவணைத் தேதிக்கு முன்னாலேயே, நகர ஊராட்சிகள் செலுத்த வேண்டிய எல்லா தொகைகளையும் பற்றி, கோட்டப் ஊராட்சி அதிகாரிகளுக்கு, கணக்காய்வுத் தலைவர் தெரிவிப்பார். அப்போதுதான், கோட்ட ஊராட்சி அதிகாரிகளால் குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்க இயலும்.

ஊராட்சி ஒன்றியங்கள்.—இவை சம்பந்தப்பட்ட வரை, முன்பிருந்த மாவட்டக் கழகங்களின் (District Boards) சொத்துக்கள், கடன்களை பங்கீடு செய்தல் சம்பந்தமாக, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1973-ல் பிறப்பிக்கப் பட்டுள்ள பொதுவான உத்தரவுகள், கிராம வளர்ச்சி நெறியாளரின், கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு பங்கீடு செய்யப்பட்டவுடன், பிறகு எவ்வித உத்தரவுகளுக்கும் காத்திராமல், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் வருடாந்தர கடன் தவணைகளை செலுத்தியே ஆக வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1967–ம் ஆண்டு ஜனவரி மாதம் 3–ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 17–ன் சுருக்கம்.)

கிராம குடிநீர்த் திட்டம்—மதுரை மாவட்டம்—ஆத்தூர், வத்தலக்குண்டு வட்டாரங்களில் 'யூனிசெ∴ப்' உதவியுடன் கிராம வேலைகள் முன்னோடித் திட்டம்—உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

Rural Water-Supply—Madurai District—UNICEF assisted pilot Rural Works Project in Athoor and Batlagundu Blocks—First phase—Implementation in 35 selceted villages—Orders passed.

தமிழக அரசு தேர்ந்தெடுக்கும் வட்டாரம் ஒன்றில், 'யூனிசெ∴ப்' (UNICEF) உதவியுடன் கிராம குடிநீர் முன்னோடித் திட்டம் (Pilot Rural Water-Supply Project) ஒன்று இம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும என்று இந்திய அரசு, சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது. 'யூனிசெ∴ப்' உதவியுடன் கிராம குடிநீர் முன்னோடித் திட்டத்தை செயல்படுத்த, தலைமைப் பொறியாளருடன் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) கலந்தாலோசித்து, மதுரை மாவட்டத்திலுள்ள ஆத்தூர், வத்தலக்குண்டு வட்டாரங்களை, அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இத்திட்டத்தை இரு நிலைகளில் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. முதல் நிலையில் 35 கிராமங்கள் அடங்கும். அக்கிராமங்களின் பெயர்கள், இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ. 10·86 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது நிலையில், இத்திட்டம் 95 தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ரூ. 12·88 லட்சம் செலவில் செயல் படும். திட்டத்தின் முதல் நிலையில் மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 10·86 லட்சம் செலவுத் தொகையில், சுமார் 3 லட்சம் மதிப்பிற்கு கருவிகளைத் தர 'யூனிசெ∴ப்' இசைந்துள்ளது. எஞ்சியுள்ள ரூ. 7·86 லட்சத்தை மாநில அரசும், இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்துக் கொள்ளவேண்டும். கிராம வேலைகள் திட்டத்தில், ரூ. 1.69 லட்சத்தை, ஆத்தூர், வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்கி வைத்துள்ளன. எஞ்சியுள்ள ரூ. 6·17 லட்சத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இத் திட்டத்தை ரூ. 10·86 லட்சம் செலவில் நிறைவேற்றப்படும் என்று மாநில அரசு இந்திய அரசிற்கு தெரியப்படுத்தியிருப்பதுடன், கருவிகள் மூலமாக 'யூனிசெ∴ப்' அளிக்கும் உதவிக்கு மேற்பட்ட செலவை, மாநில அரசு முழுவதுமாக செலவிட்டு, பிறகு மத்திய அரசின் உதவியைக் கோரும் விஷயம் தனியே எடுத்துக் கொள்ளப் படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

* * *

3. மதுரை மாவட்டம், ஆத்தூர், வத்தலக்குண்டு வட்டாரங்களில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 35 கிராமங்களில் (கிராமங்களின் பெயர்கள் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன). 'யூனிசெ∴ப்' உதவியுடன், கிராம குடிநீர் முன்னோடித் திட்டத்தின் முதல் பகுதி ரூ. 10·86 லட்சம் செலவில் நிறைவேற்றப்படுவதற்கு அரசு அனுமதியளிக்கிறது. ரூ. 3 லட்சம் மதிப்பிற்கு 'யூனிசெ∴ப்' வழங்கும் கருவிகள், மற்றும் ஆத்தூர், வத்தலக்குண்டு வட்டாரங்கள், கிராம வேலைகள் திட்டத்தில் ஒதுக்கியிருக்கும் ரூ. 1·69 லட்சம் ஆகியவை, இத்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட

வேண்டும். எஞ்சியுள்ள ரூ. 6·17 லட்சம் மாநில அரசின் நிதியிலிருந்து செலவழிக்கப்பட வேண்டும்.

4. செயல்முறை திட்ட வரைவில் கருத்துத் தெரிவித்துள்ளபடி, கிராம குடிநீர் முன்னோடித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, ஓர் ஆலோசனைக் குழு கீழ்க்கண்டவாறு நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது :

தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்)	தலைவர்
பொதுச் சுகாதாரத் துறை நெறியாளர், துணைச் செயலாளர் (திட்ட வேலைகள்),— கிராம நல தல நிர்வாகத் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.	உறுப்பினர்கள்.

தேவை எழும்போதெல்லாம் இக் குழு கூடும்.

* * *

இணைப்பு

'யூனிசெப்.'.ப்' உதவியுடன், கிராம குடிநீர் முன்னோடித் திட்டத்தின், முதல்நிலை நிறைவேற்றப்படும் கிராமங்களின் பெயர்கள்.

வத்தலக்குண்டு வட்டாரம்

1 தெற்கு வளையபட்டி
2 பூசாரிப்பட்டி
3 கடம்பனூர்
4 செங்காட்டம்பட்டி
5 விருவீடு
6 நடக்கோட்டை
7 கட்டக்காம்பட்டி
8 சம்மேட்டுபட்டி
9 செக்காபட்டி
10 விராலிபட்டி
11 உச்சபட்டி.

ஆத்தூர் வட்டாரம்

12 அம்பாத்துறை
13 கூத்தம்பட்டி
14 பாறைப்பட்டி
15 கலிக்கம்பட்டி
16 கூலம்பட்டி
17 சங்கரரெட்டியார்க் கோட்டை
18 செம்பட்டி
19 கடிகநாயக்கன்பட்டி
20 சோலைப்புதூர் மற்றும் சொக்கலிங்கபுரம்.
21 வண்ணம்பட்டி
22 ஜோதிகொண்டன்பட்டி
23 பாளையங்கோட்டை
24 புதுக்கோட்டை
25 நடுப்பட்டி மற்றும் குரும்பட்டி
26 நல்லம்பிள்ளை
27 முருங்கப்பட்டி.
28 வீரக்கல்
29 பிள்ளையார் நத்தம்
30 மஞ்சப்பரப்பு
31 பெரும்பாறை
32 பெருமாள்கோவில்
33 ரத்னகிரி
34 அய்யம்பாளையம்
35 என். பஞ்சம்பட்டி.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1967ம் ஆண்டு எப்ரல் மாதம் 26-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 857-ன் சுருக்கம்).

கிராம, வட்டார, தாலுகா கணக்குகள் பற்றிய அபிவிருத்திக் குழுவின் சில பரிந்துரைகள் பற்றி உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

Accounts—Village Accounts—Improvement of Village, Block and Taluk Accounts—Certain recommendations made by the Committee—Orders—Passed

கிராமப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக, நிர்வகிக்கப்பட்டு வரும் பல்வேறு பதிவேடுகள், பருவ அறிக்கைகளைப்பற்றி கிராம, வட்டார, தாலூக்கா கணக்குகள் அபிவிருத்திக் குழு சில பரிந்துரைகள் செய்துள்ளது. இந்த சிபாரிசுகளெல்லாம் கிராம வளர்ச்சி நெறியாளருடன் பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன:—

பரிந்துரை

பஞ்சாயத்துக்கள் பதிவேடு.—இது தொடர்ந்து நிர்வகிக்கப்படலாம். தள்ளிவைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களின் (Superseded Panchayats) பெயர்களை, இப்பதிவேட்டிலுள்ள குறிப்புப்பதியில் (Remarks) குறிப்பிட வேண்டும். தள்ளிவைக்கப்பட்ட பஞ்சாயத்துகளின் பெயர்களை காண்பிக்கக்கூடிய வகையில் இப்போது வைத்துள்ள பதிவேட்டை நிறுத்திவிடலாம்.

பரிந்துரை

தள்ளிவைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களின் பெயர்களை காட்டும் பதிவேடு.

தள்ளிவைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களின் பெயர்களை, பஞ்சாயத்துக்கள் பதிவேட்டிலுள்ள குறிப்புப்பத்தியில் குறிப்பிடலாம். எனவே, இதற்கென தனியாக ஒரு பதிவேடு தேவையில்லை.

மேற்கண்ட பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கலைக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ள பஞ்சாயத்துக்களின் பெயர்களை, பஞ்சாயத்துக்கள் பதிவேட்டி குறிப்புப் பத்தியில் பதிவு செய்யவேண்டும்.

பரிந்துரை

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) நிர்வகித்து வரும் கீழ்க்கண்ட பதிவேடுகளைப் பொருத்த வரையில், எவ்வித மாற்றமும் தேவையில்லையென்று குழு கருதுகிறது.

(1) சாதாரண தேர்தல் பதிவேடு.

(2) கிராமப் பஞ்சாயத்து வாக்காளர் பட்டியல் இருப்பு பற்றிய பதிவேடு.

(3) பஞ்சாயத்துக்களை பார்வையிட்டது பற்றிய பதிவேடு.

(4) யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்களின் வரவு—செலவு திட்ட மதிப்பீடு பற்றிய பதிவேடு.

(5) பஞ்சாயத்துக்களின் பெயர், தலைவர்களின் பெயர் மற்றும் பதவியிலுள்ள பஞ்சாயத்து உறுப்பினர்களின் பெயர்களைக் காட்டும் பதிவேடு.

(6) கிராமப் பஞ்சாயத்துக்கள் தணிக்கைப் பதிவேடு.

(7) வாக்கு சீட்டு பெட்டிகள் பதிவேடு.

பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பரிந்துரை

(அ) தலைவர்கள், துணைத்தலைவர்களின் பெயர்கள், மற்றும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களின் பெயர்களை காட்டும் பதிவேடு மற்றும் (ஆ) பஞ்சாயத்து நிதிகளை தவறுக பயன் படுத்தியதற்காக வழக்கு தொடரப்பட்டு தண்டனை யளிக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களின் பெயர் களை காட்டும் பதிவேடு.

இவ்விரு பதிவேடுகளிலுமுள்ள விவரங்களை காட்டும் வகையில், அவ்விவரங்களை ஒன்று சேர்த்து, நிர்ண யிக்கப்பட்ட படிவத்தில் ஒரே பதிவேடாக நிர்வகித்துக் கொள்ளலாம்.

பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நிர்ணயிக்கப் பட்ட படிவம் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரை

பஞ்சாயத்து நீதி மன்றங்களின் வழக்கமான அலுவல்கள் சம்பந்தப்பட்ட பதிவேடு.

இப்போதெல்லாம் வழக்குகளை விசாரிக்க பஞ்சாயத்துக் களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லையாதலால், இப் பதிவேட்டை ஒதுக்கிவிடலாம்.

பரிந்துரை

அளவை சரிபார்த்தல் பதிவேடு.

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) அளவை சரிபார் க்கும் அதிகாரியாக இப்போது இல்லையாதலால், இப்பதி வேட்டை நீக்கிவிடலாம்.

பரிந்துரை

பஞ்சாயத்துக்கள் நிர்வகித்து வரும் பள்ளிகளின் பெயர்களைக் காட்டும் பதிவேடு.

எல்லா பள்ளிகளும் பஞ்சாயத்து யூனியன்களுக்கே மாற்றப்பட்டுவிட்டதால் இந்தப் பதிவேடு இனி தேவை யில்லை; எனவே நிறுத்திவிடலாம்.

மேற்கண்ட சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பரிந்துரை

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) யின் மாதாந்திர சுற்றுப்பயண திட்டம்.

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) சமர்ப்பிக்கும் சுற்றுப்பயண திட்டமானது, மற்ற வளர்ச்சி அதிகாரிகள் சமர்ப்பிக்கும் சுற்றுப்பயணத் திட்டத்தைப் போன்று, அரை மாத திட்டமாக இருக்கலாம்.

பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது சம்பந்த மாக, தகுந்த விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கும்படி கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

பரிந்துரை

மாதாந்திர அபிவிருத்தி அறிக்கை (பஞ்சாயத்துக்கள்)

இது பொதுத் (ஆர்.டி.பி.) துறையின் 19—3—1959 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 924-ல் நிர்ணயிக்கப் பட்டதாகும், மாநிலம் முழுவதும் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டதால், இது நிறுத்தப்படலாம்.

பரிந்துரை

பள்ளி மானியம் மற்றும் அகவிலைப்படி—பஞ்சாயத்து, பஞ்சாயத்துப் பள்ளிகள்—ஆசிரியர் களுக்கு மானியம் அளித்தல்–சரிபார்த்த அறிக்கை—மாதம் ஒரு முறை—பள்ளிக்குறிய வசதிகளை பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தித் தருதல் பற்றிய அறிக்கை—மாதம் ஒரு முறை.

இப்போதுள்ள அமைப்பில், இவ்விரு பருவ அறிக்கை கள் முற்றிலும் தேவையில்லை. எனவே அவை நீக்கப் படலாம்.

மேற்கண்ட பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பரிந்துரை

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) வேலை அளவை சரிபார்த்ததற்குரிய பட்டியல்.

கிராம நல தல நிர்வாகத் துறையின் 13—5—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1547 ன் படி வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) வேலைகளின் அளவை சரி பார்ப்பதில்லை,

பரிந்துரை

குறிப்பிட்ட மாதத்தில், இரண்டாம் வகை (கிராமப்) பஞ்சா யத்துக்களை தணிக்கை, மற்றும் சோதனை செய்தல்.

வளர்ச்சி அதிகாரியின் நாட்குறிப்பிலுள்ள இணைப்புச் களில் இதே வித தகவல்கள் இருப்பதால் இந்த

பருவ அறிக்கை அவசியமில்லை என்று கருதப்படுகிறது ; இதை நிறுத்திவிடலாம்.

மேற்கண்ட பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இது விஷயமாக தகுந்த விளக்க உத்தரவுகளை பிறப்பிக்குமாறு, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்,

பரிந்துரை : 'சர்சார்ஜ்' (Surcharge) பற்றிய பட்டியல்.

இது பஞ்சாயத்துத் தலைவர்களுக்கெதிராக ஏற்படும் 'சர்சார்ஜ்' கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவையே. குழு இதில் மாற்றத்தை கோரவில்லை.

பரிந்துரை

கல்வி—ஆரம்பக் கல்வி—பஞ்சாயத்து பள்ளித்தொகையை பள்ளி மானியத்திற்காக பெறுதல்.

பஞ்சாயத்து பள்ளிகளெல்லாம், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டு விட்டதால், இது நீக்கப்படலாம்.

மேற்கண்ட பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பரிந்துரை

'கம்போஸ்ட்' உற்பத்தி பற்றிய அபிவிருத்தி அறிக்கை.

இந்த தகவலானது, வளர்ச்சி அதிகாரி (விவசாயம்) யின் அறிக்கையிலிருந்து கிடைக்கிறது. இந்த பருவ அறிக்கையை வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லையாதலால், இதைதள்ளிவிடலாம்.

பரிந்துரை : வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) செய்துள்ள வேலைகள்—காலாண்டு அறிக்கை.

வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) யின் மாதாந்திர நாட் குறிப்பிலேயே இத்தகவல்கள் கிடைக்குமாதலால், இதை நீக்கிவிடலாம்.

மேற்கண்ட பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இது சம்பந்தமாக தகுந்த விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கும்படி கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

பரிந்துரை

பஞ்சாயத்து தேர்தல்களுக்கு ஏற்பட்ட செலவை காட்டும் அறிக்கை.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையே பஞ்சாயத்து தேர்தல் நடைபெறுவதால், மாதாந்திர பருவ அறிக்கைக்கு எவ்வித தேவையுமில்லை. இதை ஆண்டு பருவ அறிக்கையாக மாற்றிவிடலாம்.

பரிந்துரை

சமுதாய வளர்ச்சித் திட்டம்—தல நிர்வாகத் துறை செய்துள்ள வேலைகள்.

கிராமங்களில் வளர்ச்சி வேலைகளை செய்வதற்கு, பஞ்சாயத்துக்கள்தான் முக்கிய ஏஜென்சிகளாக இருப்பதால், இது நீக்கப்படலாம்.

பரிந்துரை

பஞ்சாயத்து பள்ளிகளின் நிர்வாக அறிக்கை

பள்ளிகளின் நிர்வாகத்தை பஞ்சாயத்து ஒன்றியங் மேற்கொண்டு விட்டதால், இதை நீக்கிவிடலாம்.

மேற்கண்ட பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பரிந்துரை.

சமுதாய வளர்ச்சி பிரதேசங்களில், தல நிர்வாகத் துறை செய்துள்ள வேலைகள் பற்றிய விவரங்கள்,

சமுதாய வளர்ச்சி திட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால், வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்து) யிடமிருந்து இந்த பருவ அறிக்கை நீக்கிவிடலாம்.

இப்பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது சம்பந்தமாக தகுந்த விளக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

பரிந்துரை

கிராம சம்பந்தப்பட்ட கணக்குகளெல்லாம் கர்ணம் முன்சீப், கிராம சேவக்குகளால் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றில் சில, நிலவரி விதித்தல், வசூலித்தல் சம்பந்தப்பட்டதாயும், மற்றவை அரசாங்க வருவாய் பற்றியனவாயும் இருக்கின்றன. இந்த பதிவேடுகளையெல்லாம் பஞ்சாயத்துகளுக்கு கொண்டுவருவதில் எவ்வித தேவையில்லை. கீழ்க்கண்ட பதிவேடுகள், பருவ அறிக்கைகளை, பஞ்சாயத்துக்களின் மாதாந்திர கூட்டங்களில், கர்ணம், முன்சீப், கிராமசேவக் சமர்ப்பிக்கவேண்டுமென்று இக்குழு கருத்து தெரிவிக்கிறது.

(1) கிராமக் கணக்கு எண் 1 ஏ.

(2) கிராமக் கணக்கு எண் 7 (புதிது)

(3) ஜனன- மரணப் பதிவேடு.

(4) கிராமசேவக்கினால் அத்தியாயம் 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள, மாதாந்திர அபிவிருத்தி அறிக்கை.

இந்த தஸ்தாவேஜுகளெல்லாம் தவறில்லாமல் இருக்கின்றனவா என்பது சம்பந்தமாக பஞ்சாயத்துக்கள் பரிசீலனை செய்து, யோசனைகள் கூறலாம். அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது காரணங்களை விளக்கிய பின் அவற்றை ஏற்க மறுத்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட அதிகாரியைச் சார்ந்தது. ஆனால் அதே நேரத்தில் விவசாய உற்பத்தி வேலைகள், குடும்பக்கட்டுப்பாடு போன்ற திட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு பஞ்சாயத்துகள் மாற்றங்கள் கோரி தீர்மானிக்கலாம்.

பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

பஞ்சாயத்து நிதிகளை தவறாக பயன்படுத்தியதற்காக வழக்கு தொடரப்பட்ட, தண்டனையளிக்கப்பட்ட, மற்றும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களின் பெயர்களைக் காட்டும் பதிவேடு.

வரிசை எண்.	பஞ்சாயத்தின் பெயர்.	தலைவர் அல்லது உறுப்பினர் பெயர்.	ஆய்வாளரின் உத்தரவுகள்.	குற்றத்தின் தன்மை.	நீக்கப்பட்ட அல்லது வழக்குத் தொடரப்பட்ட தேதி.	குறிப்புகள்.
1	2	3	4	5	6	7

(கிராம நல தல நிர்வாகத் துறையில் 19—10 1966 தேதியிட்ட அரசு ஆணை எண் 2450 ன் சுருக்கம்.)

கிராமத் தொழில்கள் திட்டம்—நாங்குனேரி கிராமத் தொழில்கள் திட்டக் குழு—நாங்குனேரி கோட்டப் பொறியாளரை (இயக்குதல், பராமரிப்பு) உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுதல்—உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

Rural Industries Project—Project Committee for Rural Industries, Nanguneri—Inclusion of the Divisional Engineer, (Operation and Maintenance) Nagercoil as one of the Members—Ordered.

கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1129 ஆனது, பிறகு கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 61501-ல் திருத்தப்பட்டபடி, நாங்குனேரி கிராமத் தொழில்கள் திட்டகுழுவிற்கு. திருநெல்வேலி கோட்ட மின்சாரப் பொறியாளர், (இயக்குதல், பராமரிப்பு) [Divisional Electrical Engineer (Operation and Maintenance)] மற்ற உறுப்பினர்களுடன் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்தத் திட்டத்தின் பெரும் பகுதி, கோட்டப் பொறியாளரின் (இயக்குதல், பராமரிப்பு) அலுவல் வரம்பிலிருப்பதால், அவரையும் நாங்குனேரி திட்டக்குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு, நாங்குனேரி கிராமத் தொழில்கள் திட்டக்குழுவில் நாகர்கோவில்கோட்டப் பொறியாள (இயக்குதல், பராமரிப்பு) ரையும் ஓர் உறுப்பினராக நியமிக்கிறது. இந்த உறுப்பினரின் பதவிக் காலம், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 30-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1129-ல் நியமிக்கப்பட்ட மற்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தோடு முடிவுறும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின 1967-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 128771).

மரங்கள்—ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கிலுள்ள பனை மரங்கள், பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகைக்கு விடுவது பற்றி ஆணை அளிக்கப்பட்டது சம்பந்தமாக, தெளிவுரை வழங்கப்படுகிறது.

1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டப்படி, ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட சில வகையான புறம்போக்குகளிலுள்ள மரங்களின் பலனை அனுபவிப்பதற்கும், காற்றில் விழுந்துவிட்ட அல்லது பட்டுப்போன மரங்களையும், மற்ற மரங்களின் பலனையும் ஏலத்தில் விற்று, கிடைக்கின்ற விற்று முதலை சம்பந்தப்பட்ட ஊராட்சியின் கணக்கில் வரவு வைப்பதற்கும் ஊராட்சிக்கு முழு அதிகாரமுண்டு.

1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ந் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 29152/பி2/63-2 (கிராம நலதல நிர்வாகத் துறையில்) ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகளிலுள்ள பனை மரங்களை பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு குத்தகைக்கு விடுவது பற்றி உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு மேற்கூறிய மரங்களை குத்தகைக்கு விடுவதற்கு முன், அரசு உத்தரவு எண் 72, கிராம நலதல நிர்வாகத் துறை, 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 தேதியில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட விதிமுறைகளை, எல்லா ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்களும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. திட்டமிடப்பட்டுள்ள பனைமர ஏலத்தையோ அல்லது குத்தகையையோ, பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களுக்கு முன் கூட்டியே தெரிவிக்கவேண்டும்.
2. மரங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள விரும்பாததை, சங்கம் எழுத்து மூலம் தெரிவித்த பின்பே, பகிரங்க ஏலம் நடத்த வேண்டும்.
3. கூட்டுறவுச் சங்கங்கள், மரங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள விரும்புவதை 15 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்கத் தவறினால் ஊராட்சி தலைவர் பனை மரங்களை பகிரங்க ஏலத்தில் விட்டுவிடலாம்.
4. அவ்வாறே பகிரங்க ஏலம் நடத்தப்பட்டாலும், விற்பனை அறிவிப்பு, பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவருக்கும் அளிக்கப்பட வேண்டும். அந்த விற்பனை அறிவிப்பை சங்கத் தலைவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை பஞ்சாயத்திலுள்ள விற்பனை பதிவுக் கட்டுடன் இணைத்து வைக்க வேண்டும்.
5. தற்பொழுது நடைபெறும் ஏலத்திற்கு, முன் மூன்றாண்டுகளில் கிடைத்த சராசரி வருமானம் குத்தகைத் தொகையாக அமையவேண்டும். அவ்வாறு மூன்று ஏலங்கள் நடைபெறவில்லையெனில், கடந்த இரண்டாண்டுகளில நடைபெற்ற ஏலங்களில் கிடைத்த சராசரி வருவாயை குத்தகைத் தொகையாக நிர்ணயிக்க வேண்டும். இத்தகைய ஏல விற்பனை எதுவுமே கடந்த ஆண்டுகளில் நடைபெறவில்லையெனில், பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கத்திற்கு விடப்படும் குத்தகைக்கு ஒரு நியாயமான தொகையை ஊராட்சியே நிர்ணயிக்க வேண்டும்.

எல்லா ஊராட்சி ஒன்றியம் ஆணையர்களும், மேற்கண்ட விதிமுறைகளை எல்லா ஊராட்சித் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கோரப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 தேதியிட்ட ந. க. எண். 11716/67 டி 4.)

மோட்டார் வண்டிகள்—வரிவிதிப்பு—சுங்க ஈடு—1967–68-ம் ஆண்டிற்கு அளித்தல்

Motor Vehicles—Taxation—Toll Compensation—Disbursement for 1967-68—Authorised.

1967-68-ம் ஆண்டிற்கு, சுங்க ஈடாக (Toll Compensation) ரூ. **20,33,328–50-ஐ** (ரூபாய் இருபது லட்சத்து, முப்பத்தி மூன்று ஆயிரத்து முன்னூற்று இருபத்து எட்டும், ஐம்பது பைசாக்களும்) தல நிர்வாகங் களுக்கு அளிக்க அரசு அனுமதி யளிக்கிறது. தல நிர்வாகங்களுக்கு சேரவேண்டிய தொகைகளை 12 மாத தவணைகளில் அளிக்கப்படும்.

(உள்துறையின் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1092-ன் சுருக்கம்).

மதச் சார்புள்ள விழாக் காலங்கள்—மாலையில் அலுவலகத்தை விட்டு முன்னரே செல்ல அல்லது காலையில் நேரம் தாழ்ந்து வர அனுமதியளித்தல்—சீரான நடைமுறையை பின்பற்றுதல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

Religious and festival occassions—Grant of permission to leave office early in the evenings or attend office late in the mornings—Uniform procedure—Adoption—Orders—Issued,

மதச் சார்புள்ள விழாக் காலங்களில், மாலையில் அலுவலகத்தைவிட்டு முன்னரே செல்ல அல்லது காலையில் அலுவலகத்திற்கு நேரம் தாழ்ந்து வர, அரசு அலுவலர்களுக்கு பொதுவான முறையில் அனுமதியளிக்கும் நெடுங்கால வழக்கமானது, தொடர்ந்திருந்து வரலாம் என்றும், ஆனால் இவ்வழக்கத்தை மேலும் அதிகரித்துக் கொள்ளக்கூடாது என்றும் பொதுத் துறையின் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் தேதியிட்ட அரசு குறிப்பாணை எண் 1728-ல் கூறப் பட்டுள்ளது. அதாவது:– பல்வேறு அரசு அலுவலகங் களில், பொதுவான முறையில் தற்போது அனுமதி யளிக்கப்பட்டுவரும் மதச்சார்புள்ள விழாக்காலங்களுடன், மேலும் இவ்வாறான மதச் சார்புள்ள விழாக்காலங்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது (என்பதே இதன் விளக்கமாகும்).

2. இப்பிரச்னை அடிக்கடி எழுப்பப்படுவதை தவிர்ப்பதற்காக மற்றும் இம்மாதிரி விஷயங்களில் உத்தரவு பிறப்பிப்பதற்காக, அவை துறைத் தலைவர்கள் அல்லது அரசிற்கு வராமலிருக்க, அலுவலகத் தலைவர்கள் மற்றும் தலைமைச் செயலகத்துறைகள் பின் பற்றுவதற்காக, ஒரு சீரான நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

3. மதச் சடங்குகள் போன்றவற்றை அனுசரிக்கும் அரசு அலுவலர்கள், காலை நேரங்களில் நேரம் தாழ்ந்து அலுவலகத்திற்கு வர, அல்லது மாலை நேரங்களில் முன்னரே அலுவலகத்தை விட்டுச் செல்ல அனுமதி கோரும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு மேற்படாதவாறு, கீழ்க்கண்ட பட்டியலிலுள்ள மதச் சார்புள்ள விழாக் காலங்களில் அனுமதியளிக்க, அலுவலகத் தலைவர்களுக்கும், தலைமைச் செயலகத்துறை களுக்கும் அரசு அதிகாரம் அளிக்கிறது.

ஹிந்துக்கள்

1. அமாவாசை
2. கார்த்திகைத் தீபம்
3. சந்திர கிரணம்
4. சூரிய கிரணம்
5. மைலாப்பூர் அறுபத்து மூவர் விழா.
6. தீபாவளிக்கு முன் தினம்.
7. காயத்ரி ஜபம்
8. மாசி மகம்
9. ஸ்ரீராமநவமி

கிருஸ்தவர்கள்

1. சாம்பர் புதன்கிழமை (Ash Wednesday)
2. மாண்டி வியாழக்கிழமை (Maundy Thursday)
3. கிருஷ்த்துமஸுக்கு முன் தினம்.
4. ஈஸ்டருக்கு முன் தினம்
5. புத்தாண்டிற்கு முன் தினம்.
6. ஆவியின் திருநாள் (All Souls Day)

முஸ்லீம்கள்

1. ரம்ஜானுக்கு முன் தினம்.
2. பக்ரிதுக்கு முன் தினம்.

(பொதுத் துறையின் 1967ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 470ன் சுருக்கம்).

அடிப்படை விதிகள்—பிற்சேர்க்கை I—இணைப்பு VIII—சட்ட பூர்வப் பணித்துறை விதிகள்—விதி 2-க்கு கீழுள்ள குறிப்பு—திருத்தம் வெளியிடப்படுகிறது.

Fundamental Rules—Appendix I—Annexure VIII—Statutory Service Rules—Note under Rule 2—Amendment— Issued.

அடிப்படை விதிகளில் (Fundamental Rules), பிற் சேர்க்கை I, இணைப்பு VIII-ல் உள்ள, "சட்டப் பூர்வ பணித்துறை விதிகளில் (Statutory Service Rules) விதி 2-க்கு, கீழ், இப்போதுள்ள குறிப்பின்படி, ஈட்டிய விடுப்பு (Earned leave) எடுத்துக்கொள்ளும்போது, அவ் விடுப்பிற்கு முன்னும், பின்னும் அரசு விடுமுறை நாட்கள், ஈடுசெய்யப்பட்ட விடுப்பு (Compensatory leave) ஆகியவற்றை சேர்த்துக்கொள்ள அனுமதியளிக்கப் பட்டிருப்பதானது, தகுதிகாண் பருவத்தை (Probation) கணக்கிடுகையில் சேர்த்துக்கொள்ளப் படமாட்டாது. அரசு விடுமுறை நாட்களில், வேலைபார்த்த சம்பளம் மற்றும் 'படிகள்' அளிக்கப்பட்டாலும், அரசு விடுமுறை நாட்களை, எவ்வித விடுப்பிற்கும் (Any kind of leave), முன்போ, அல்லது பின்போ சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை, தகுதிகாண் பருவம் கணக் கிடுகையில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று தணிக் கையில் கருதுவதாக கணக்காய்வுத் தலைவர் (Accountant–General) அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். அதற்கேற்றவாறு மேற்கண்ட குறிப்பை திருத்த வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(2) மேற்கண்ட பொருள் விளக்கத்தை கவனமாக பரிசீலனை செய்தபின், அதை ஏற்றுக்கொண்டு, அவ்வாறே அதை அடிப்படை விதிகளில், பிற்சேர்க்கை I, இணைப்பு VIII-ல் விதி 2-ல் உள்ள குறிப்பில் சேர்க்கவேண்டும் என்று அரசு முடிவு செய்கிறது.

(நிதித்துறையின் 1966–ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 1325–ன சுருக்கம்)

மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்—மேற்கு கோயம்புத்தூர்—அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை நிலைக்குழுக்களில் நியமித்தல்—உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

District Development Council—West Coimbatore—Gazetted Officers of Government Nomination—Standing Commitees for the year 1967–68—Orders—Issued.

கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ள பத்தி 1.ல் விவரிக்கப் பட்டு, இப்போது மேற்கு கோயம்புத்தூர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் உறுப்பினர்களாயுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை மேற்சொன்ன மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் நிலைக்குழுக்களில். அவரவர்களின் பெயர் களுக்கு எதிரே, இரண்டாவது பத்தியில் குறிப்பிடப் பட்டுள்ள குழுவில், உறுப்பினர்களாக, 1967–68-ம் ஆண்டிற்கு, 1958-ம் ஆண்டு தமிழக மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்திலுள்ள (தமிழகச் சட்டம் 18/1958) பிரிவு 8-ன் உட்பிரிவு 2-ன் கீழ், தமிழக கவர்னர் அவர்கள் நியமிக்கிறார்கள்.

அட்டவணை

	அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்.	நிலைக் குழு.
	(1)	(2)
1.	மாவட்ட விவசாய அதிகாரி கோயம்புத்தூர்.	உணவு, விவசாய நிலைக்குழு.
2.	மாவட்ட விவசாய அதிகாரி, பொள்ளாச்சி,	,,
3.	கூட்டுறவச் சங்கங்கள் துணைப் பதிவாளர், பொள்ளாச்சி.	..
4.	கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர், கோயம்புத்தூர்.	,,
5.	மாவட்ட வனவள அதிகாரி கோயம்புத்தூர்.	,,
6.	மாவட்ட வனவள அதிகாரி, கோயம்புத்தூர்.	,,
7.	மாவட்ட கால்நடை அதிகாரி, கோயம்புத்தூர்.	உணவு விவசாய நிலைக் குழு.
8.	வருவாய்க் கோட்ட அதிகாரி, கோயம்புத்தூர்.	,,
9.	மாவட்ட துணை ஆட்சித் தலைவர், பொள்ளாச்சி.	,,
10.	மீனவள உதவி நெறியாளர், பொள்ளாச்சி.	,,
11.	நிர்வாகப் பொறியாளர் (எல்.பி.பி.) தலைமை வேலை, பவானிசாகர்.	,,
12.	நிர்வாகப் பொறியாளர் (பொதுப் பணித்துறை) கோயம்புத்தூர்.	பொதுப்பணி பற்றிய நிலைக் குழு.
13.	கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை, கிராம வேலைகள்) கோயம் புத்தூர்.	,,
14.	தொழில், வணிகத்துறை உதவி நெறியாளர், கோயம்புத்தூர்.	தொழில், தொழிலாளர் நலம் பற்றிய நிலைக்குழு.
15.	மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, கோயம்புத்தூர்.	,,
16.	மாவட்ட கல்வி அதிகாரி, கோயம் புத்தூர்.	கல்வி நிலைக் குழு.

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்.	நிலைக்குழு.
(1)	(2)
17. மாவட்ட கல்வி அதிகாரி, பொள்ளாச்சி.	கல்வி பற்றிய நிலைக்குழு.
18. மாவட்ட கல்வி சிறப்பு அதிகாரி, கோயம்புத்தூர்.	,,
19. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி), கோயம்புத்தூர்.	,,
20. மாவட்ட வைத்திய அதிகாரி கோயம்புத்தூர்.	சுகாதாரம், சமூக நலம் பற்றிய நிலை குழு.
21. மாவட்ட சுகாதார அதிகாரி, கோயம் புத்தூர்.	,,
22. மாவட்ட நல அதிகாரி, கோயம்புத்தூர்.	,,

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 16—3—1967 தேதியிட்ட அரசு ஆணை 418 எண் சுருக்கம்.)

மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்—தெற்கு கடலூர்—அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை நிலைக் குழுக்களில் நியமித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

District Development Council—South Cuddalore—Nomination of Gazetted Officers of the Government to the Standing Committees for the year 1967-68—Orders—Issued.

கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ள பத்தி 1-ல் விவரிக்கப்பட்டு, இப்போது தெற்கு கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் உறுப்பினர்களாகயுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை, மேற்சொன்ன மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் நிலைக்குழுக்களில், அவரவர்களின் பெயர்களுக்கு எதிரே, இரண்டாவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவில், உறுப்பினர்களாக, 1967—68-ம் ஆண்டிற்கு, 1958-ம் ஆண்டு தமிழக மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்திலுள்ள (தமிழகச் சட்டம் 18/1958) பிரிவு 8-ன், உட்பிரிவுகள் (2 மற்றும் (4)-ன் கீழ், தமிழக கவர்னர் அவர்கள், நியமிக்கிறார்கள்.

அட்டவணை

அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்.	நிலைக்குழு.
[1]	[2]
(1) வருவாய்க் கோட்ட அதிகாரி, சிதம்பரம்.	உணவு, விவசாய நிலைக்குழு.
(2) வருவாய்க் கோட்ட அதிகாரி. விருத்தாசலம்.	,,
(3) மாவட்ட விவசாய அதிகாரி, கடலூர்.	,,
(4) நிர்வாகப் பொறியாளர் பொதுப்பணித் துறை, கடலூர்.	,,
(5) மாவட்ட விவசாய அதிகாரி, கள்ளக்குறிச்சி.	,,
(6) நிர்வாகப் பொறியாளர் (எல். ஆர். சி.) சிதம்பரம்.	,,
(7) வருவாய்க் கோட்ட அதிகாரி, சிதம்பரம்.	தொழில், தொழிலாளர் நல நிலைக்குழு.
(8) வருவாய்க் கோட்ட அதிகாரி, விருத்தாசலம்.	,,
(9) தொழில், வணிகத்துறை துணை நெறியாளர், கடலூர்.	,,
(10) கூட்டுறவுச் சங்கங்கள் துணைப் பதிவாளர், கடலூர்.	,,
(11) மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, கடலூர்.	தொழில், தொழிலாளர் நல நிலைக்குழு.
(12) வருவாய்க் கோட்ட அதிகாரி, சிதம்பரம்.	பொதுப்பணி பற்றிய நிலைக்குழு.
(13) வருவாய்க் கோட்ட அதிகாரி, விருத்தாசலம்.	,,
(14) நிர்வாகப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), கடலூர்.	,,
(15) கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை, கிராம வேலைகள்), கடலூர்.	,,
(16) நிர்வாகப் பொறியாளர் (எல். ஆர். சி.) கடலூர்	,,
(17) மாவட்ட கல்வி அதிகாரி, கடலூர்.	,,
(18) மாவட்ட கல்வி சிறப்பு அதிகாரி, கடலூர்.	கல்வி பற்றிய நிலைக்குழு.
(19) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி), கடலூர்.	,,
(20) மாவட்ட நல அதிகாரி, கடலூர்.	,,
(21) மாவட்ட கல்வி அதிகாரி விருத்தாசலம்.	,,
(22) மாவட்ட வைத்திய அதிகாரி, கடலூர்.	சுகாதாரம் சமூக நலம் பற்றிய நிலைக்குழு.
(23) மாவட்ட சுகாதார அதிகாரி, கடலூர்.	,,
(24) மாவட்ட நல அதிகாரி, கடலூர்.	,,

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 30—3—1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 497-ன் சுருக்கம்.)

முக்கிய அறிவிப்பு

ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் கவனத்திற்கு :

ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள் "கிராம நல" இதழ்களை, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், பள்ளிகள், சமூக கல்வி நிலையங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய வற்றிற்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தமிழக அரசு ஏற்கெனவேயே ஆணையிட்டுள்ளதை நினைவூட்டுகிறோம். சென்ற சில மாதங்களாக ஒரு சில வட்டாரங் களைத் தவிர, பெரும்பான்மையான ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், தங்கள் வட்டாரங்களில் உள்ள மேற்சொன்ன நிறுவனங்களுக்குத் தேவையான "கிராம நல" இதழ்களுக்குத் சந்தாத் தொகையைச் செலுத்தவில்லை என்பது தெரியவருகிறது. எனவே இதைக் காணும் ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர் அனைவரும் "கிராம நல" இதழ்களுக்குள்ள சந்தா தொகையை முறைப்படச் செலுத்தி, கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்திற்கு உடனடியாக அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள் கிறோம்.

மானேஜர்,
'கிராம நலம்'

இந்த இதழில்

	பக்கம்.
உணவுத் துறையில் ஒரு திருப்பு முனை ..	3
"ஆட்சி—தொடர் கதை" முதலமைச்சர் ..	10
வரப்புயர வாழ்வுயரும்	18
முதலமைச்சரின் சிறப்பு ஆலோசகர் கருத்துரை	25

அடுத்த இதழில்...

தமிழக அரசு வரவு–செலவு நிதித் திட்டம்

சோவியத் பத்திரிகையாளர் கண்ட கிராம வளர்ச்சி.

காந்தியடிகள் நூற்றாண்டுவிழா

கிராம நலம் சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டுச் சந்தா, 1967-ம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களுடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு ஆண்டுச் சந்தா ரு. 2 வீதம், சந்தாத் தொகையை "கிராம வளர்ச்சி நெறியாளர், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில், சந்தாதாரரின் முகவரிக்கு மேல் பொறிக்கப் பட்டிருக்கிறது:

1967 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா எண்கள் :—

சந்தா எண்கள்

28391, 28450, 29745, 29994, 30096, 249, 256 மு 258, 261, 262, 270, 271, 276, 290.

65B, 72B, 74B, 75B, 79B.

ஜூன் மாதத்துடன் முடிவடைவன.

26089, 29030, 30126, 30340, 30350, 30371, 273, 302 மு 305, 310, 315, 316, 329, 330, 337, 340, 341, 346, 352, 356, 423 மு 433, 504.

73B, 88B, 89B, 93B, 98B, 102B, 108B, 169B, 182B, 193B.

ஜூலை மாதத்துடன் முடிவடைவன.

30097, 15, 17 மு 22, 24, 25, 28, 30, 31, 35 37 39 41 மு 43, 45 மு 52, 54, 55 59, 61, 64, 67, 68, 69, 71, 76, 78, 79, 80, 83, 84, 85, 89, 90 மு 93, 97 98, 99, 101 மு 104, 109 மு 113, 115 மு 123, 128 மு 130, 146, 152 மு 204, 206 மு 214, 219, 222, 223, 225, 226, 228, 230 மு 233, 235, 237 மு 239 246 மு 248, 358 மு 361, 364, 365, 369, 372, 381, 392, 393, 398, 400 413 419 420.

26B, 27B, 28B, 33B, 40B, 41B, 42B, 44B, 50B, 52B மு 59B, 109, 114, 116, 120, 123, 128, 131, 138, 208, 210, 239.

வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன் ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.

REGD. NO. M. 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1967
மலிவு விலையில்
மக்களுக்கு
உணவுப் பொருள்கள்
அடிப்படைப் பிரச்னையைத்
தீர்ப்பதில், அரசின்
உறுதியான நடவடிக்கை